அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் டிசம்பர் 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# ‘2008 இல் தனிநாடு’

## பால்கன் பகுதித் தொடர் சிக்கலில் மற்றுமொரு புதிய நாடு: கொசோவோ அறிவிக்கிறது

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் துணையுடன் கொசோவோ தனது விடுதலையை அறிவிக்கும் என்று கொசோவோவின் அதிபர் ஃபத்மிர் செய்டியு (Fatmir Sejdiu) கூறியுள்ளார்.

1999ல் இருந்து ஐநாவின் கண்காணிப்பில் இருக்கும் செர்பியாவின் முன்னாள் பகுதியான கொசோவோ நேட்டுடோ படைகளின் துணை யுடனும் ஐ.நாவின் படைகளுடனும் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

இந்த சுயாட்சி அறிவிப்பு கொசோவோவின் நட்பு நாடுகளுடன் சேர்ந்து கலந்தாலோசிக்கப்பட்டு முன்வைக்கப்படப்போகிறது. பாராளுமன்றமும் அதற்கான யாப்புக்கட்டமைப்பும் உருவானவுடன் இது அறிவிக்கப்படும் என்று கொாசவோவின் பிதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பழமைவாதக் கட்சியிலிருந்து பலத்த வாக்குகள் பெற்று பிரான்சில் ஆட்சி அமைத்துள்ள பிரான்சின அதிபர் நிக்கலசு சார்க்கோசி கொசோவாவின் சுதந்திரத்தை ஆதரிப்போம் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு கொசோவோ அறிவிக்கும் நிலை வருமாயின் செர்பியா நடத்தக்கூடிய தாக்குதல்கள் அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகள் கொசோவோப் பகுதிகளில் நிலையின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

58ம் பக்கம் பார்க்க...



இப் புகைப்படம் எடுத்த கலைஞர்பற்றிய விபரம் 72ம் பக்கத்தில் உள்ளது

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Property Mortgage Canada Inc.

Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E.,
Unit 202, Scar, ON

Buying - Selling - Investing
PMCI Property Mortgage Canada Inc.
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

CANADIAN HOME APPRAISALS INC.
Residential and Commerical Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K. Bales, CRA.
W.E. Doolittle, AACI.
Our firm is listed on major Banks and Trust Companies' approved appraisal list.
www.chainc.ca, Email: chai@chainc.ca
Tel: 905-947-4647, Fax: 905-947-9048, Cel: 416-801-3219



R&S AUTO SALES

HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING

சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்

Tel: 416.412.3838
Fax: 416.412.1174

Radha
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada






VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

- Building permit
- Zoning info.
- Site plan approval
- Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467






ATEAM Towing

"Affortable and Trusted Services"

Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars

Call Esan or Donald
Direct: 416-835-1700

525 Bloor St W
Toronto, ON, M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwelbaner.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



Jaffna Computers



உங்கள் தேவைக்கு ஏற்ப Computer Assemble செய்து கொள்வதற்கும் மற்றும் அனைத்து computer திருத்த வேலைகளுக்கும்

416 918 2565

Computer Repairs & Upgrades



416.200.5470

ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES

SANTHA

www.santha.ca
416-200-5470

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416-400-6406

digi

# சர்வதேசமே குற்றவாளி: தமிழீழத்தின் பிரகடனம்



த. சிவதாசன்

விடுதலைப் புலிகளின் தலைவரின் 'மாவீரருரை-2007' சிலருக்கு ஏமாற்றம். பல வித கோணங்கள், பார்வைகள், அலசல்கள், வியாக்கியானங்கள். ஒரு நவீன ஓவியத்தைப் பார்த்து விளக்கமளித்ததுபோல பல கருத்துக்கள் வெளிவந்தன, இன்னும் வந்து கொண்டே இருக்கின்றன.

ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதியுடையவர்கள் என்பது மட்டுமே எனது கருத்து.

'ஈழப்' பிரகடனம் செய்வார் என்பதை நம்பியிருந்தவர்களில் நானும் ஒருவன். ஏமாற்றமடைந்தவர்களில் நானும் ஒருவன் என்று கூறினால் அதை மறுப்பதற்கும் இல்லை. அதற்கான கள நிலவரம் இன்னும் பண்பாக வில்லை என்பதனால் சுதந்திர ஈழத்துக்கான சாத்தியம் இன்னும் இல்லை என்கிறார்கள் சில அறிவு ஜீவிகள். ஆனால் 2006ம் ஆண்டு மாவீரருரையுடன் ஒப்பிட்டு இந்தத் தடவை 'எல்லோரையும் போலவே அவரும், புதிதாகச் சொல்ல எதுவுமில்லை' அதனால் தமிழீழப் பிரகடனம் தப்பிக்க ஒரு வழி என்று பலர் எதிர்பார்த்திருக்கலாம். 'எல்லோரைப் போலவும் அவரில்லை' என்பதை அவர் இந்தத் தடவையும் நிரூபித்திருக்கிறார். He is a master strategist. அவரன்றி ஆரறிவர் பராபரமே என்று சாந்தி கொள்வதே நாம் தப்பிக்க ஒரே வழி.

காற்று வாக்கில் எப்போதோ கேட்ட ஒரு செய்தி. தலைவரது மந்திராலோசனைக் கூட்டமொன்றில் ஒருவர் தமிழீழப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினாராம். உடனே தலைவர் தனது மூன்று நம்பிக்கை நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு "இவங்கள் மூண்டு பேரையும் வைச்சு நாளைக்கே தமிழீழத்தை எடுத்துத் தருவன். அதை வைச்சு நீங்க காப்பாத்துவீங்கள் எண்டால்" சரியான திட்டமிடல், பூரணமான தயாரிப்பு, சாதகமான களநிலை என்பன இல்லாது தலைவர் எந்த நடவடிக்கைகளிலும் இறங்குவதில்லை. அதுவே புலிகளின் போரியல் பாரம்பரியம். ஈழப் பிரகடன விடயத்திலும் மேற்கூறிய விடயங்களில் அவர் கவனம் செலுத்துவார் என்று நம்புபவர்களை அவர் கைவிடமாட்டார்.

தனி நாட்டுப் பிரகடனம் என்பது சாதாரண விடயமில்லை. உலகில் இதுவரை செய்யப்பட்ட தனிநாட்டுப் பிரகடனங்களில் 95வீதமான வை வெற்றியளிக்கவில்லை. பாலஸதீனம் பிரகடனம் செய்யப்பட்டபோது நூற்றுக்கும் மேலான நாடுகள் அதை அங்கீகரித்தன. ஆனால் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் இருந்ததை விட அதன் மக்கள் படு மோசமான நிலையிலேயே இருக்கின்றார்கள். தனிநாடாகப் பிரகடனம் செய்வதற்குரிய தகைமை ஈழத்துக்கு இருக்கிறது தான். ஆனாலும் வல்லரசுகளுக்குத் தீனி போடும் முக்கிய தகைமை ஈழத்தில் இப்போதுள்ள புலிகளின் தலைமை இருக்கும் வரை - இல்லையென்றே சொல்லலாம். எந்தஒரு அந்நியதேசத்துக்கும் தன் மண்ணை விற்றுச் சுதந்திரம் பெற்றுத்தர புலிகளின் தலைமை தயாராகவில்லை. அதுவேதான் புலிகளின் பலமும் பலவீனமும்.

இந்தோனேஷியா அமெரிக்காவுடன் நட்பாக விருந்திருப்பின் கிழக்குத் தீமோரின் இன்றய இதுவரை காலமும் சர்வதேசங்களின் வேண்டுகோள்களுக்கிணங்கி அவர்கள் வழிகளில் புலிகள் போனார்கள். சிங்கள ஆட்சியாளர்களின் கபடம், பல தடவைகள் தமிழர்களை ஏமாற்றிய வரலாறு ஏற்படுத்திய நம்பிக்கையீனத்தைவிட சர்வதேசங்களில் வைத்த நம்பிக்கை ஒன்றே அவர்களை மேசைக்குக் கொண்டு வந்தது. இந்த அமைதிக் காலத்தில்தான் அவர்கள் மேலும் வஞ்சிக்கப்பட்டார்கள். அதே அமைதிக் காலத்தில்தான் சிங்கள ஆட்சியாளர்கள் சர்வதேசங்களால் பலப்படுத்தப்பட்டார்கள். ஒட்டு மொத்தத்தில் ஈழத் தமிழர்களை சிங்கள ஆட்சியாளர் மட்டுமல்ல சர்வதேசங்



ஆட்சியாளர்கள் இப்போது 'பயங்கரவாதிகளாக' நடமாடியிருப்பார்கள். சோவியத் குடியரசு உடைபடாமல் இருந்திருந்தால் யூகோஸ்லாவியா சின்னாபின்னமாகப் போயிராது, மொன்டினீக்ரோவும் சேர்பியாவும் இன்னும் சகோதரர்களாகவே இருந்திருப்பார்கள்.

தனிநாடு உருவாவது அந்நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்ப அல்ல, மாறாக அதன் எஜமானின் தேர்வுக்கு ஏற்றபடியே (His Masters Choice) தான் என்பதே இன்றய உலகின் நியதி. ஈழத்துக்கு எஜமான் இனி மேல் இருக்க முடியாது என்பது தலைவரின் முடிவாக இருக்கும்வரை அது தன்னைப் பாதுகாக்கும் பலத்தோடு இருக்கும்போது தான் தனிநாடாக மலரும் என்பதுதான், நான் நினைக்கிறேன், இவ்வருட மாவீரருரையில் செருகப்பட்டிருக்கும் ஒரு செய்தி. அது ஆட்பலம், ஆயுத பலம் என்பவற்றோடு மட்டுமல்ல உலகத் தமிழர்களின் ஒற்றுமையான ஆதரவிலும் தங்கியிருக்கிறது என்பதனால் அதற்கான அறைகூவலாகவும் இம் மாவீரருரை அமைந்திருக்கிறது.

களும் வஞ்சித்து விட்டன. அதற்கான முழுப் பொறுப்பையும் சர்வதேசங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். 'இந்த அரசுடன் இனிப் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை. போரை மீண்டும் முன்னெடுப்பதே ஒரே வழி' என்று தலைவர் தன்னுரையில் குறிப்பிட்டது 'இனி நடக்கப்போவது எங்கள் வழியில்' என்ற எச்சரிக்கையே.

போரையோ அழிவையோ நாகரீக உலகம் விரும்புவதில்லை. ஆனால் உலகில் போர்களை முன்னெடுக்கும் அரசுகளையும், அரசியல்வாதிகளையும் இதே நாகரீக உலகமே தேர்வும் செய்கிறது. இஸ்ரேலின் கடும் போக்கான அரசைத் தெரிவு செய்தது அதன் மக்களே. அதன் கடும் போக்கு எதிரியை உருவாக்கி அவ்வெதிரியின் நடவடிக்கைகளின் மூலம் பாதிப்படைவதும் அம் மக்கள்தான். இலங்கையிலும் கடும் போக்கான ஆட்சியையும், ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளையும் தேர்வு செய்தது சிங்கள மக்களே. நாட்டின் நன்மை கருதாது போர்தான் வேண்டுமென்று நிற்கின்ற மஹிந்த கூட்டு, ஜே.வி.பி., ஜே.எச்.யூ. போன்ற கட்சிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள் போரின் பலன்களை எதிர் பார்த்தே இருக்க வேண்டும். தென்னிலங்கை மக்களை விழித்து மாவீரருரை எதுவும் சொல்லாவிடினும் 'விளைவுகளுக்குத் தயாராகுங்கள்' என்ற செய்தியும் அவ்வுரையைப் பகுத்தறிந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

துர்ப்பாக்கியமாக இன்றய உலகம் புரியக் கூடிய ஒரே மொழி வன்முறைதான். ஹிரோஷிமா, நாகசாகி அணுக்குண்டுகள் இல்லாவிட்டால் இன்றைக்கு உலகம் சாமுராய் கலாச்சாரத்தில் திளைத்துப் போயிருக்கும். நுக்கோமோவின் விடுதலைப்படை 60 பேர்கள் பயணம் செய்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியிருக்காவிட்டால் முகாபேயின் சிம்பாப்வே சில வேளைகளில் சாத்தியமற்றதாகவும் இருந்திருக்கலாம். கனடாவில் ஏயர் இந்தியா விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்திருக்காது போனால் இன்று காளிஸ்தான் பிறந்துமிருக்கலாம். அதே போல இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்படாதிருந்தால் தமிழருக்கு இப்போதைக்கு விமோசனம் கிடைத்திருக்கலாம். ஹிட்லரை நிறுத்துவதற்காக இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட ரஷ்யர்கள் உயிரிழக்க வேண்டி ஏற்பட்டது. 'தமிழர்களின் அழிவைத் தடுக்க சிங்களவர்களின் அழிவு அவசியமானது என்பதுதான் உங்கள் மொழியானால் அதுவும் எங்களுக்குப் புரிகிறது' என்பதுவே இவ்வருட மாவீரருரையின் இறுதிச் செய்தி.


தமிழின அழிப்பை ஒரு பொருட்டாகவே கருதாது கொழும்புக் குண்டு வெடிப்புகளை மட்டுமே கண்டனம் செய்த ஐ.நா. பொதுச் செயலாளர் அங்கம் வகிக்கும் 'சர்வதேசங்களின் கூட்டாட்சி' நடத்தும் காட்டாட்சியில் தமிழர் பிரச்சினை தீர்ப்பதற்கான எந்தவித சாத்தியமுமில்லை, எனவே அழிவு நிச்சயம். கொழும்பு குண்டு வெடிப்புகளின் பின்னால் யார் யார் இருந்திருக்கலாமென்பது அவசியமில்லை. அதன் விளைவுகள் தமிழருக்குச் சாதகமானதாக இருக்கிறது. வடக்குக் கிழக்கில் ஓடுகின்ற இரத்த ஆறும் இப்படித்தான் இருக்கும் என்பதைச் சிங்கள மக்கள் பார்ப்பின் அவர்கள் மனம் மாறலாம்.

எந்த உயிரழிவிலும் யாரும் இன்பம் கொண்டாடக் கூடாது அது சிங்களவரின் உயிர்களாகவிருப்பினும்கூட. ஆனால் கொலையைக் கொலையால்தான் நிறுத்தலாம் என்ற பாடத்தைத் தினமும் பாராயணம் செய்து கொண்டிருக்கும் உலகில் எதுவும் சாத்தியமே. தென்னிலங்கைக் கொலைகளை யார் செய்தது என்ற வாதம் அவசியமற்றது. தன் கரங்களில் இரத்தம் வழிய நின்று கொண்டிருக்கும் சர்வதேசமே முழுக் குற்றவாளி!

அதுவே தமிழீழத்தின் பிரகடனம்!

■ ■ ■


# #1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# நன்றி மறப்பது...



கே. எஸ்.
பாலச்சந்திரன்

**நன்றி மறப்பது நன்றன்று**
**நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

இந்த குறளை படிக்கும் காலத்தில் எவ்வளவு கஸ்டப்பட்டு மனப்பாடம் செய்திருப்போம். இன்றுகூட அதை மறக்கவில்லை என்று பெருமைப்பட்டுக்கொண்டு, மனதிற்குள் சொல்லிப் பார்த்துக்கொள்கிறோம். எவ்வளவு சந்தோசம். சின்னவயதில் படித்ததை இன்றுவரை அட்சரம் பிசகாமல் ஞாபகம் வைத்திருக்கிறோமே என்ற சந்தோசம்தான்.

ஆனால் ஒரேயொரு குறை. மூளையில் இருப்பது இதயத்திற்கு வரவில்லையே. நீங்கள் மற்றவர்களுக்கு செய்த உதவிகளை பட்டியல் போட்டு கூற முடியுமென்றால், மற்றவர்கள் உங்களுக்கு செய்த உதவிகளை மறப்பது எப்படி சரியாகும்? அல்லது உதவி கிடைத்த அந்தக்கணமே Thanks என்று ஒரு வார்த்தை அதுவும் ஆங்கிலத்தில் (தமிழில் நன்றி என்று சொன்னால் எங்கே தாழ்ந்து விடுவோமோ என்ற எண்ணம் கூட சிலருக்கு இருக்கிறது) அள்ளி வீசியவுடன், கிடைத்த உதவிக்கு பிரதியுபகாரம் செய்து விட்டதாக நினைத்துக் கொள்கிறோம். ஒருவர் நமக்கு உதவி செய்து விட்டால் அவருக்கு நாங்கள் வாழ்நாள் முழுவதும் அடிமைச்சாசனம் எழுதப்பட்டவர்கள் போல இருக்கவேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். நான் சொல்வது எல்லாம், வெறும் நுனிநாக்கால் நன்றி சொல்லி விட்டு 'நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தனரே' என்று திருமூலர் சொன்னது மாதிரி மறந்து விடாமல் அந்த நன்றியை நெஞ்சினில் தேக்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறேன்.

எங்கள் சிறுவயதில் இருந்து எங்கள் நன்றிக்கு உரியவர்களாக எத்தனைபேர் எங்கள் வாழ்வில் வந்து போயிருப்பார்கள். அகரம் தானே எழுத்து வரிசையின் தொடக்கம். அம்மா, அப்பா என்ற எங்கள் வாழ்வின் ஆதாரங்களான அகரங்களைச் சொன்னேன். அவர்கள் எங்களுக்கு செய்ததை நாங்கள் மறந்திருந்தாலும் மீண்டும் நினைக்கும் காலம் எப்போது வரும் என்று நினைக்கிறீர்கள்? நாங்கள் பெற்றோராக வரும்போது அந்தத் தருணம் நிச்சயம் வரும். என் மகள் சிறு குழந்தையாக இருக்கும்போது பல நாட்கள் இரவுவேளையில் விடாது அழுது கொண்டேயிருப்பாள். எனக்குக்கூட சற்று கண் அயர்ந்து போகும் பாக்கியம் கிடைத்தது. ஆனால் என் மனைவிக்கோ ஒரு கண்தூக்கம் என்று சொல்வார்களே அதுவும் இருக்காது. அப்படி ஒரு நாளில் நான் அழுதேன். நித்திரை தொலைந்ததே என்று நான் அழவில்லை. என் அம்மாவை, அப்பாவை, நினைத்து அழுதேன். அவர்கள் அர்ப்பணிப்பை நினைத்து அழுதேன்.

மாதா, பிதா, பிறகு குரு தானே? அன்பும், கண்டிப்புமாக எங்களை வாழ்வாங்கு வாழ வைத்த எத்தனை ஆசிரியர்களை நாங்கள் அன்றாடம் அல்ல – எப்போதாவது நினைத்துக்கொள்கிறோம். அவர்கள் தங்கள் வேலையைத்தானே செய்தார்கள் என்று சொல்வது எளிதுதான். ஆனால் அப்படியா எங்கள் ஆசிரியர்கள் பலரும் நடந்து கொண்டார்கள் ?

அடுத்தது தெய்வம். ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்று ஆறாந் திருமுறையின் பாடல்வரிகள் வரும். தெய்வம் எப்படி நாங்கள் வேண்டுவதை தருகின்றது என்பதில் எனக்கு தீர்க்கமான ஒரு நம்பிக்கை இருக்கிறது. தெய்வம் எங்கள் முன் நேராக வருவதில்லை. வந்தால்கூட புதுமைப்பித்தனின் 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' என்ற சிறுகதையில் வருவதுபோல எவருமே அவரை கடவுள் என்று நம்ப மறுப்பார்கள். எனவே கடவுள் மனித ரூபத்தில்தான் வருகிறார். அகதியாக இடம்பெயர்ந்து எங்கோ ஒரு ஊரின் ஆலயத்திலே அடைக்கலம் புகுந்தபோது, பிள்ளை தண்ணீர் என்று அலற, கசங்கியவேட்டியுடன், காவிபடிந்த பற்களுடன், எங்கிருந்தோ வந்து, ''பிள்ளைக்கு இதைக்கொடுங்கள்'' என்று தண்ணீரைத் தருகின்றவர் யார் என்று நினைக்கிறீர்கள். நம்புங்கள் அது கடவுள்தான்.

பெரிய நெருக்கடி. என்ன செய்வது. யாரிடம் கேட்பது என்ற தயக்கம். தடுமாறிப் போய்விடுகிறோம். துற்செயலாக வருவதாக வந்து, 'என்னடாப்பா... என்ன பிரச்சினை' என்ற கேட்டு வலிய உதவிசெய்கிறானே, ஒரு உயிர் நண்பன். அவன் கடவுள்தான்.

ஒரு கதை. ஒரு பக்தன் கடவுள் மீது மிகுந்த பற்றும், நம்பிக்கையும் கொண்டவர். அவர் வசிக்கும் இடத்திலே திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. சுற்றத்தில் இருந்தவர்கள் எல்லோரும் வாகனங்களில் ஏறி பாதுகாப்பான இடங்களுக்கு போகப்புறப்படுகிறார்கள். இந்தத்தருணத்தில் அடுத்த வீட்டுக்காரன் இவரிடம் ஓடி வருகின்றான். ''ஐயா.. வாருங்கள்.. இங்கிருந்து போய் தப்பிவிடலாம்'' என்கிறான், இவர் சொல்கிறார். ''நான் வரமாட்டேன்.. கடவுள் என்னை காப்பாற்றுவார்''. அவன் போய் விட்டான்.

வெள்ளம் அதிகரிக்கிறது. வீட்டை மூழ்கடித்து விட்டது. இவர் இப்போது கூரையின் மேல் இருக்கிறார். வள்ளம் ஒன்று வருகிறது. அதில்இருக்கிறவர்கள் இவரை வரும்படி கூக்குரல் இட்டு அழைக்கிறார்கள். இவர் அசையவில்லை. அதே வசனம். ''கடவுள் என்னை காப்பாற்றுவார்''. வள்ளமும் போய் விட்டது.

இப்போது வெள்ளம் கூரையின் முகட்டின் நுனியை தொட்டுத் தடவிக் கொண்டிருக்கிறது. மேலே ஏதோ சத்தம். நிமிர்ந்து பார்த்தால் ஒரு விமானம்.. அதிலிருந்து ஒரு கயிறு கீழே விடப்படுகிறது. 'இதைப்பற்றிக் கொண்டு மேலே வாருங்கள்' என்று சொல்வது கேட்கிறது. இவர் ஆக்ரோசமாகச் சொல்கிறார். ''கடவுள் என்னைக் காப்பாற்றுவார்''. அவர்களும் போய்விட்டார்கள்.

வெள்ளம் வந்து முழுதாக மூடி, இவர் இறந்துபோய், கடவுளுக்கு முன்னால் நின்றார். நின்றவர் கோபத்துடன் கேட்டார். ''தெய்வமே.. நான் உங்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன். என்னைக் காப்பாற்றாமல் கை விட்டு விட்டீர்களே?''

கடவுள் சிரித்துவிட்டுச்சொன்னார்.'மானிடா.. முதலில் உன்னை வந்தழைத்த அடுத்த வீட்டுக்காரன் யார் என்று நினைக்கிறாய்? வள்ளத்தில் வந்தது யார் என்று நினைக்கிறாய்? மேலே விமானத்தில் வந்தது யார் என்று நினைக்கிறாய்? எல்லாமே நான் தான். நீதான் அசட்டுப்பிடிவாதத்துடன் என்னைக் காணாமல் இருந்து விட்டாய்''

எனவே மனித ரூபத்தில் வந்து உதவிசெய்யும் கடவுளை நீங்கள் இனம் காணா விட்டாலும், தெய்வம்போல வந்து உதவி செய்தவர்களை மறந்து விடுதல் எப்படி நியாயமாகும்?

முதற் சொன்ன குறளுக்கு சற்று வித்தியாசமான விளக்கம் ஒருவர் சொல்லியிருந்தார்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நல்லதல்ல. அதே நேரத்தில் அவரே (கவனியுங்கள்.. அவரே) நல்லதற்ற காரியத்தை உங்களுக்கு செய்ய நேர்ந்தாலும் அவர் செய்த நன்றியை நினைத்து அந்தத் தீங்கை அன்றே மறந்து விடுங்கள் என்கிறார்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒருவர் உங்கள் மீது இரக்கப்பட்டு உங்களுக்கு தான் வேலை செய்யும் இடத்திலே வேலை வாங்கித்தருகிறார். கொஞ்ச நாட்கள் போகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் உங்களை அவர் கண்டிக்கும்படி நிலைவருகிறது. உடனே ''இவர் எப்படி எனக்கு இப்படிச் செய்யலாம்'' என்று கோபித்து, அவர் வேலைக்கே பங்கம் விளைவிப்பது மாதிரி செய்வீர்களா? அப்படி நடந்தால் அவர் அதற்குப் பிறகும் வேறு யாருக்காவது உதவி செய்ய நினைப்பாரா?

''நன்றிக்கடன் பட்டது பட்டதுதானா? தீர்க்கவே முடியாததா?'' என்று உங்களுக்கு சஞ்சலம் எதாவது இருந்தால், 'மருந்தொன்றிருக்குது'. எமக்கு பிரதிபலன் எதிர்பாராது ஒருவர் செய்த உதவிக்கான நன்றிக் கடனை, உதவி தேவைப்படும் இன்னுமொருவருக்கு இயன்ற உதவி செய்வதின் மூலம் தீர்த்துக் கொள்ளலாமே. தொடர் சங்கிலி போல உதவிகள் தொடரலாமே.

தொடர்சங்கிலிக்கு தொடர்பான ஒரு கதை. முதற்சொன்ன குறள்மாதிரி இந்தக்கதையும் எங்களில் பலருக்கு ஞாபகமிருக்கும். தள்ளாத வயதினில் தாத்தா, மாங்கன்றுகளை நடுவதைக்கண்டு பேரன் கேட்டானாம்.



''தாத்தா.. இந்த மரக்கன்றுகளை நட்டு அதன் பழங்களை உண்ணும் காலம் வரை இருப்பீர்களா? ''தாத்தா சொன்னாராம். ''பேரனே.. நான் உண்டதெல்லாம் என் தாத்தா வைத்த மாமரங்களின் பழங்கள். அது போல என் பேரனுக்காய் நான் வைக்கிறேன் பழத்தோட்டம்''.

எனவே நீங்கள் உண்ட பழங்களை நினைத்தாவது மற்றவர்களுக்காய் பழத் தோட்டம் வையுங்கள்,

## மு.தளையசிங்கம் படைப்புகள்

## நூல் வெளியீடு:

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

இடம்: ஸ்காபரோ சிவிக் சென்டர்

காலம்: 26.01.2008 நேரம்: பி.ப. 1.00 - 6:00 வரை

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும் குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும் அழையுங்கள்
Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176
Bus: 416-321-6969

HomeLife GTA Realty Inc. Real Estate Brokerage
1711 Mc Cowan Road, Suite #206, Scarborough.

# கிறிஸ்மஸ்காலத்தில் வீடுகளை அலங்கரித்தல்

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



விரும்பியோ விரும்பாமலோ நாம் கனேடிய நீரோட்டத்திலும், காலடி எடுத்து வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. உதாரணமாக இலங்கையில் ஒரு தீபாவளி-யோ தைப்பொங்கலோ என்றால் ஒரே குதூ-கலம். ஆனால் கனடாவிலோ நாம் அந்-நாட்களை கொண்டாடுவது மிகக் குறைவு. கிறிஸ்மஸைப் பொறுத்தவரை அனேகமாக எல்லோருமே நீண்ட விடுமுறையைப் பெற்-றுக் கொள்வதனாலும், குழந்தைகள் அத் திருநாளைக் கொண்டாட விரும்புவதாலும், இது தவிர்க்க முடியாத ஒரு கொண்டாட்-டமாக எம்மவர் மத்தியில் உருவாகியுள் ளது. அதனை எப்படி நாம் கொண்டாடலாம் என பார்ப்போம்.

இலையுதிர்காலம் கொண்டாட்டங்கள் நிறைந்த காலமாகும். நன்றி செலுத்தும் நாள் (Thanksgiving day), ஹலோவீன் என்பன வந்து போனாலும் கிறிஸ்மஸ் அநேகருக்கு ஒரு விசேடமான கொண்டாட் டமாக உள்ளது. கிறிஸ்மஸ் காலத்தின் போது வீட்டினை அலங்கரித்தல் பலரால் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்-வாகும். இந்த அலங்காரங்களில் அநேக மானவை பாரம்பரியங்களுடன் தொடர்பு பட்டதாக இருக்கின்றன. இவை காலப்போக் கில் மாற்றமுற்றாலும் இளவயது நினைவு களை மீட்டுத் தருவனவாக உள்ளன. மணி ஒலிகள், ஊசியிலை மரங்கள், பனிமூடிய மலைகள், கிறிஸ்மஸ் பாடகர்களின் பாட்-டுக்கள், இரவில் ஒளியூட்டும் கிறிஸ்மஸ் அலங்காரங்கள், மின்குமிழ்கள், விளக்கு கள் என்பன கிறிஸ்மஸை எமக்கு நினை-வூட்டுகின்றன.

கிறிஸ்மஸ் அலங்காரங்கள் 16ஆம் நூற்-றாண்டில் ஆரம்பமாகின. இந்த நாட்களில் இனிப்புத்தடிகள்(Candy canes), தேன்கேக்கு கள், கிறிஸ்மஸ் இனிப்புகள் என்பன கிறிஸ்மஸ் அலங்காரங்களாக பயன்படுத்-தப்பட்டன. 18ம் நூற்றாண்டில் அநேக வகை யான கிறிஸ்மஸ் அலங்காரங்கள் பிரபல மாக இருந்தன. பளபளப்பான காகிதம், வர்ணக் காகிதங்கள், இனிப்புகள், விதை கள், கேக்குகள், பழங்கள் என்பன இந்த அலங்காரங்களில் பயன்படுத்தப்பட்டன.

இன்று உங்கள் வீட்டினை கிறிஸ்மஸ்-இற்காக அலங்கரிக்கும்போது, ''முன்னரே திட்டமிடல்'' என்பது சிறந்த ஆலோசனை யாகும். வீட்டின் உள்ளே மட்டும் அலங்க-ரிக்கப் போகிறீர்களா? அல்லது வெளியே யும் உள்ளேயும் அலங்கரிக்கப் போகின்றீர் களா என்பதைத் தீர்மானியுங்கள். பழைய கிறிஸ்மஸ் அலங்காரங்களை புதிதாக்க வேண்டுமெனில், ஒவ்வொரு வருடமும் புதிய விடயத்தைப் பற்றி நீங்கள் யோசிப்-பது நல்லது. உங்கள் வரவேற்பறையில் ஒரு வருடத்தில் கிறிஸ்து பிறப்பை சித்தரிக்-கும் சூழலை உருவாக்கலாம். அடுத்த வருடம் மாரிகால நிலஅமைப்பை அலங்-காரங்களாகக் கொள்ளலாம்.

நீங்கள் வேலைக்குச் செல்பவராக இருந் தால், அந்நாட்களில் வீட்டு வேலைகளுடன் வீட்டு அலங்காரங்களையும் செய்வது உங்களுக்குக் கடினமானதாக இருக்கும். எனினும் வருடத்தின் இந்தக் காலத்தில்



உங்கள் வீட்டில் கிறிஸ்மஸ் விடுமுறை சூழலை உருவாக்கி வீட்டினை சந்தோஷக் களை கட்டினதாக்குவதற்கு, சில விரை-வானதும் எளிமையானதுமான வழிகள் இதோ...

## வீட்டின் உட்புற அலங்காரம் வீட்டிலுள்ள யாவற்றையும் ரிப்பன்களைக் கொண்டு அலங்கரித்தல்

- கதிரைகளின் பின்புறம், மெழுகுவர்த்தி வைக்கும் தண்டுகள் (Candlestick), கூடைகளின் கைப்பிடி, படிக்கட்டுகளின் கைப்பிடி, கதவுக் குமிழ்கள், தாவரங்க ளின் அடிப் பகுதி தண்டுகள், மலர் வளையங்கள் எல்லாவற்றையும் ரிப்பன் களைக் கொண்டு அழகாக முடிச்சிட்டு அலங்கரியுங்கள்.
- சிவப்பு பச்சை நிறங்களால் உங்கள் வரவேற்பறையை அலங்கரித்து WEL-COME அல்லது MERRY CHRISTMAS எனும் சொற்களைச் சேருங்கள். சிவப்பு, பச்சை நிறங்களை மட்டுமல்லாது உலோ-கம், வெள்ளி ஆகியவற்றையும் ரிப்பன் அலங்காரத்திற்காகத் தெரிவு செய்யலாம்.
- நீண்டகாலத்திற்குப் பயன்படுத்தக் கூடிய தான ரிப்பன்களை வாங்கிப் பயன்படுத்-துங்கள். (விடுமுறைகாலம் முடிந்தபின் ரிப்பன்களின் முடிச்சுக்களை அவிழ்த்து அவற்றை மெதுவாக மின் அழுத்தியால் அழுத்தி சீராக்கி வைக்கலாம்).
- கண்ணாடியிலான அழகிய வடிவ மைப்பு-டைய போத்தலினுள் மெழுகுவர்த்திகளை இட்டு கொழுத்தி போத்தலின் கழுத்தில் அலங்காரமான ரிப்பனைக் கட்டுங்கள்

## உணவு மேசை அலங்காரம்

விடுமுறைகாலத்தில் அலங்கார வேலைப்-பாடுமிக்க பாத்திரங்களைப் பயன்படுத்துங்

6ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing

PROPERTY MAX®
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage

Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
416-857-1780

Search Your Dream Home
@
www.rightbrokerrightproperty.com
OR Call
416-321-2300

One Source For Many Type Of Properties And Mortgages!



3+1 Bdrms, 2 Washrooms, Rare Corner Unit, Oversized Rooms, Stunning Views.



3 Bdrms, 2 Washrooms, Shows Better Than A Model Suite!



2+1 Bdrms, 2 Washrooms, Amazing View, Amazing Suite, Very Clean Corner Suite!!!

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

# கிறிஸ்மஸ் காலத்தில்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

கள். ஒவ்வொரு வருடமும் அலங்கார வேலைமிக்க சாலட் வைக்கும் பீலிசுகள், கோப்பைகள் ஆகியவற்றையும் சேருங்கள்.

### வெளிச்சங்கள்

வீட்டுக்கூரையின் மேற்பகுதிகள், யன்னல்கள், படங்கள், அலுமாரித்தட்டுகளில் வெள்ளை அல்லது அலங்கார விளக்குகளை ஏற்றுவதுடன் மரத்தில் மேலதிக விளக்குகளைக் கொழுத்துதல் உங்கள் வீட்டிற்கு அழகைக் கொடுக்கும். வீடுகளைக் கடந்து செல்பவர்களுக்கு உங்கள் வீடுகளின் வெளிப்பகுதி அழகு மனதைக் கவர்வதாக இருக்கும். டிசம்பரின் குளிரான மாரிகாலம் முழுவதும் வர்ணவிளக்கு அலங்காரங்கள் ஒவ்வொரு மூலையிலும் இருக்கும் மக்களின் விடுமுறை உணர்வைத் தூண்டுவதாக அமையும்.

### கிறிஸ்மஸ் மெழுகுவர்த்தி அலங்காரங்கள்

விடுமுறை காலத்தில் வீட்டின் உட்பகுதியில் மின்விளக்குகளைப் பயன்படுத்துவதைக் குறைத்து மெழுகுவர்த்திகளைப் பயன்படுத்துங்கள். இவை மிகக் கவர்ச்சிகரமான அலங்காரங்களாக உங்கள் வாழிடத்தை மாற்றும். இம் மெழுகுவர்த்திகளைச் சுற்றி லேஸ்களாலும் பூக்களாலும் அலங்காரம் செய்தல் சிறப்பான தோற்றத்தைத் தரும். மெழுகுவர்த்தி அலங்காரத்திற்கென இருக்கும் லேஸ்களைப் பாவிப்பதன் மூலம் இந்த அலங்கார ரிப்பன்களும் லேஸ்களும் பற்றி எரியாமல் இருக்கும்.

உணவு மேசையில் அதிகளவில் மெழுகுவர்த்திகளை பயன்படுத்தி இவ் வெளிச்சத்தில் உணவருந்தும் போது ஒவ்வொரு உணவு வேளையும் சிறப்பானதாக அமையும்.

ஒவ்வொரு மாலையிலும் Fireplace இல் வெப்பத்தை ஏற்படுத்தி குடும்ப அங்கத்தவரைக் கூட்டிச் சேர்த்து, வாசிப்பதற்கு, வீட்டு வேலை செய்வதற்கு, கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை எழுதுவதற்கு அல்லது குட்டித் தூக்கம் போட அழையுங்கள். உங்கள் குளியலறையில் நீண்ட மெழுகுவர்த்திகளைச் கொழுத்தி வையுங்கள். உங்கள் வீட்டில் சிறுபிள்ளைகள் இருந்தால், மெழுகுவர்த்திகளைக் குறித்துக் கவனமுடனிருங்கள். எப்போதும் அறையில் வயதுமுதிர்ந்தவர்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

### மலர் வளையங்கள்

விருந்தினரை வரவேற்குமுகமாக அமெரிக்காவில் வீட்டுமுன்கதவில் ஓர் மலர்வளையத்தைத் தொங்கவிடுதல் நட்பான வரவேற்புக்கு அடையாளமாகும்.

சிறிய கழிவுத் துண்டுக்காகிதங்களைக் கொண்டு மலர் வளையங்களைச் செய்யுங்கள்.

பின் கதவுகளில் உட்புறமும் வெளிப்புறமும் யன்னல்களிலும் மலர் வளையங்களை வைக்கலாம்.

### கிறிஸ்மஸ்மரம்

1870களில் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதிகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவில் கிறிஸ்மஸ் மரம் அலங்கரிக்கப்படுவது வளர்ச்சியடைந்தது. 1990 இற்குப் பின்னர் கிறிஸ்மஸ் கடைகள் பலதரப்பட்ட பிளாஸ்டிக் விடுமுறை அலங்காரங்களை அறிமுகப்படுத்தியது. இன்று கிறிஸ்மஸ் மரங்கள் அமெரிக்க வீடுகளில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. உங்கள் வீட்டில் கிறிஸ்மஸ் மரத்தை அலங்கரிப்பதைக் குறித்து நோக்கும்போது, ஒன்றுடன் நிறுத்தாமல் சமையலறை, படுக்கை அறை, குளியலறைகளில் மேலதிகமாக கிறிஸ்மஸ் மரங்களை வையுங்கள். இம்மரங்களை சிறு பிள்ளைகளே அலங்கரிக்கும் சந்தோஷத்தை அவர்களுக்குக் கொடுங்கள். அவர்கள் முழுமையாக இதில் ஈடுபட்டிருக்கும் போது நீங்கள் உங்கள் விடுமுறை கால ஆயத்தங்களைச் செய்ய நேரம் இருக்கும்.

### பூக்கள்

Poinsettia பூக்கள் அநேகமான மக்களால் கிறிஸ்மஸ் பூக்களாகக் கருதப்படுகின்றது. இந்த கிறிஸ்மஸ் மலரானது மெக்சிக்கோவிலும் ஏனைய தென் அமெரிக்க நாடுகளிலும் அதிகமாக வளர்கின்றது. கிறிஸ்மஸ் நாள் நெருங்க நெருங்க இப்பூக்கள் அதிக விலையுடையதாகின்றது. எனவே விடுமுறை காலத்தின் முதற்சில கிழமைகளின்போதே இவற்றை விற்கும் கடைகளில் இருந்து இவற்றைப் பெற்றுக் கொள்வது நல்லது.

### புற்றரை அலங்காரம்

கிறிஸ்மஸ் காலத்தின்போது எமது வீடுகளையும் புற்தரைகளையும் அலங்காரப்படுத்துவதன் மூலம் நாம் கிறிஸ்மஸ் கொண்டாடுகிறோம் என்பதை வெளிப்படுத்துகிறோம். கிறிஸ்மஸ் புற்தரை அலங்காரங்களைத் தெரிவு செய்யும்போது, அந்த அலங்காரங்கள் வெளிப்புறத்திற்கென வடிவமைக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடின் அதிகுளிர் அல்லது அதிவெப்பத்தில் அழிந்து விடும். புற்தரைகட்கான அலங்கார அமைப்புக்கள் உங்களிடம் அதிகமாக இருந்தால், அவற்றை படிவரிசையாக நீங்கள் அமைக்கலாம். விடுமுறைகாலத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட வெளிச்சமான புற்தரைகள் சிறுவர்களை மட்டுமல்லாது பெரியவர்களையும் சந்தோஷப்பட வைக்கும்.

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

டிசம்பர் குறிப்புகள்

- விடுமுறை காலத்திற்குரிய அலங்காரங்களை ஒழுங்கமையுங்கள்.
- விடுமுறை காலத்திற்குரிய வாழ்த்துமடல்களை மாதத்தின் ஆரம்பத்திலேயே எழுதுவதுடன், இறுதி நிமிடத்தில் அவசரப்பட்டு அனுப்புவதை தவிருங்கள்.
- விடுமுறை காலத்தில் பரிசுப்பொருட்களை பொதி செய்யும் கடதாசிகள், ரிப்பன்கள், நாடா, பரிசுப்பொருட்களுக்குரியவர்களின் பெயர்களை எழுதிக் கட்டும் அட்டைகள் (Tags) போன்றவற்றை சேகரிக்க ஆரம்பியுங்கள்
- விடுமுறைகாலத்தில் மேசைகளில் வைப்பதற்குரிய மெழுகுவர்த்திகள் போதியளவில் இருக்கின்றதா என பாருங்கள். மேலதிகமாகத் தேவைப்படின் அவற்றை வாங்கி சேமியுங்கள்.
- மெழுகுவர்த்திகளின் திரிகளின் மேற்பகுதிகளை 1/4அங்குல நீளமுள்ளதாக கத்தரிப்பதன் மூலம் புகைபிடிப்பதைத் தவிருங்கள்.
- விடுமுறைகாலத்திற்குரிய பலகாரங்கள் தயாரிப்பதை ஒரு கிழமைக்கு முன்னிருந்தே ஆரம்பியுங்கள்.
- குக்கீஸ் செய்வதற்குரிய மாவைத் தயாரித்து உறைநிலையில் (Freeze) வைத்து தேவைப்படும் போது கனலடுப்பில் (Oven) இட்டு குக்கீஸ் தயாரிக்கலாம் (Bake).
- யன்னல்கள், கதவுகளிற்கிடையே குளிர்காற்று உட்புகுவதற்கான இடைவெளிகளில்லாது இறுக்கமாக இருக்கின்றதா என சரிபாருங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி வெப்பமேற்றியின் (Furnace) வடிகட்டியைப் பரிசோதித்து தேவையாயின் மாற்றுங்கள்.
- வெப்பமூட்டல் மற்றும் வளிசீராக்கும் உபகரணங்களை (Heating, Ventilation and Air Conditioning) உற்பத்திசெய்பவர்களின் அறிவுறுத்தல்களுக்கேற்ப சுத்திகரியுங்கள்.
- வளிக்குழாய்களில் (Air ducts) கழிவுப்பொருட்கள் காணப்படுகின்றனவா என சரிபாருங்கள்
- தீயணைப்பு உபகரணங்களை பரிசோதியுங்கள். தீயணைப்புக் கருவியின் ஊசிமுனைப் பகுதி (Nozzle) அடைபட்டிருக்கின்றதா என்பதை பரிசோதியுங்கள்.
- சுவர்கள், சுவரையும் உட்புறத்தளத்தையும் இணைக்கும் பலகைகள் (Base boards), தளபாடங்கள், தளம் (Floor) என்பவற்றை சுத்திகரியுங்கள்.
- உங்கள் மோட்டார் வாகனத்தினுள் மாரிகால வானிலைக்குரிய அவசரத் தேவைகளுக்காக பனிக்கட்டி அகற்றும் கருவிகள் (Compact shovel, ice scraper) மின்விளக்கு (Flash light), மணல்(வாகனம் வழுக்கிச் செல்லக் கூடிய நிலையைத் தவிர்க்கும்),ஓர் தடித்த கம்பளிப்போர்வை, குளிரிலிருந்து பாதுகாக்கக் கூடிய உடைகள் என்பவற்றை தயார் நிலையில் வையுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

## குறைந்த செலவில் விடுமுறை அலங்காரம் - சில வழிமுறைகள்

- சிறிய கால்உறை, ஹோலி (Holly) இலைகள், கையுறைகள் என்பவற்றை ஊசிநூல் கொண்டு இணைத்து வீட்டின் சுவர்களில் அலங்காரமாகக் கொழுவி விடுங்கள்.
- விளையாட்டுப் பொருட்கள், உங்கள் பருவகால அலங்காரங்களுக்கு ஒரு சிறப்பான சேர்க்கையாகும். மரத்தட்டுகள், கட்டில்கள், கிறிஸ்மஸ் மரத்தைச் சுற்றி அல்லது தொலைக்காட்சிப் பெட்டியின்மேல் அல்லது அருகாமையில், வரவேற்பு அறைகட்கிடையே உள்ள நடைவழிகளில் அல்லது நீங்கள் விரும்பும் இடங்களில் வையுங்கள். பழைய பொருட்கள் விற்கும் கடைகளில் கரடி பொம்மைகளைத் தேடி வாங்கி அவற்றை ஒரு தலையணை உறையினுள் இட்டு கழுவி dryer இல் 20 நிமிடங்கட்குக் காயவிடுங்கள். அவற்றிற்கு பின் ரிப்பன்களைக் கட்டி விடுமுறை உடைகளை இட்டு அலங்காரப்படுத்துங்கள். இவற்றை வீட்டின் வரவேற்பறையில் அலங்காரமாக வைக்கலாம்.
- ஸ்பான்சினால் ஆன நட்சத்திரங்கள் அல்லது ஏனைய பருவகால வடிவங்களை உங்கள் யன்னலில் வர்ணம் கொண்டதாக ஒட்டுங்கள். விடுமுறை காலம் முடிந்ததும் கண்ணாடி துப்பரவாக்கும் திரவத்தினால் கழுவி அகற்றலாம்
- பனிக்கீலங்களை (Snow flakes) வெள்ளைக் காகிதத்தில் வெட்டி உருவாக்குங்கள். இவற்றை இரண்டிலிருந்து 5 ஆக அவற்றின் பருமனுக்கேற்ப பிரித்து கதவுகள் யன்னல்கள் குசினி அலுமாரிகளில் ஒட்டுங்கள். இப்பனிக் கீலங்களை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம். வெள்ளைக் காகிதத்தில் சரியான சதுரங்களாக (அவை எந்த அளவாக இருப்பினும்) வெட்டி எடுக்கவும். பின்னர் அதனை சதுரமாக வரும்வரை அரைவாசியாக இரண்டு தடவை மடிக்கவும். பின்னர் அதனை முக்கோணமாக மடிக்கவும். மையப்பகுதியை விட்டு அதன் ஓரங்கள் எல்லாவற்றையும் அலங்கார வேலைப்பாடுடையதாக வெட்டுங்கள். இவற்றை விரித்து உங்கள் பனிப்பளிங்குகள் எவ்வாறு வந்திருக்கிறது என்று பாருங்கள். பின்னர் அவற்றை தட்டையாக விரித்து ஒரு கோப்பு (File) ஒன்றினுள் அடுக்கி வையுங்கள். இவற்றைப் பயன்படுத்தியபின் அகற்றும்போத கிழிந்து விடுவதால் ஒருவருடத்திற்கு மட்டுமே இவற்றைப் பயன்படுத்தலாம்.
- உங்கள் பிள்ளைகளின் கிறிஸ்மஸ் புத்தகங்கள், உங்கள் கிறிஸ்மஸ் கைவினைப் புத்தகங்கள், விடுமுறைகால சஞ்சிகைகள் என்பவற்றை கோப்பி மேசைகள், குளியலறைகளில் ஒழுங்காக அடுக்கி வையுங்கள்.
- பரிசுப் பொதிகளை சிறப்பான கவனம் எடுத்து பொதி செய்து கிறிஸ்மஸ் மரத்தைச் சுற்றி எவ்வெவ் இடங்களில் வைப்பது என்பதைக் குறித்து சிறப்பான கவனம் எடுங்கள். இப்பரிசுப் பொருட்கள் திறக்கப்படும் நாள் வரை இவை அற்புதமான விடுமுறை அலங்காரப் பொருட்களாக இருக்கும். பழைய விடுமுறை வாழ்த்து அட்டைகளை கத்தரித்து பரிசுப் பொருட்களில் பெயர்களை எழுதுவதற்கு அட்டைகளாகப் (Tags) பயன்படுத்தலாம்.
- உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் விடுமுறைகாலத்தில் நீங்கள் பகிர்ந்து கொண்ட நாட்களின் படங்களை வெட்டி




இந்த அழகிய வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?

240 Bedrooms, 78 Washrooms, 825,000 square feet, 40 acre garden, 1500 doors, 750 windows, movie theatres, swimming pools, many more..

இன்னும் பல வசதிகள்... அது

பக்கிங்காம் அரண்மனை

துரதிஷ்டவசமாக அது விற்பனைக்கில்லை. ஆனாலும் என்னால் உங்களுக்கு பொருத்தமான, பிடித்த அழகியதோர் இல்லத்தை வாங்கித் தரமுடியும்.

SHRI PARAMSOTHY

Sales Representative

Dir: 647.285.4663

Office: 905.812.9000, fax: 905.812.6909

shri@shri.ca, www.shri.ca

COLDWELL BANKER

TERREQUITY REALTY, BROKERAGE,
Independently Owned And Operated
2690 Erin Centre Blvd., Unit A5,
Mississauga, ON L5M 5P5



தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## அடையாளம்

கொழும்பில் வகைதொகையற்ற கைதுகள்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப்போல் மகிந்த அரசு தமிழ் என்று தெரிந்த அனைவரையும் அள்ளிச் செல்கின்றது. ஈவுஇரக்கமற்ற இந்தக் கைதுகளில் அப்பாவித் தமிழர் அகப்பட்டுச் சீரழிகின்றனர் என்ற செய்திகளை நாளிதழ்கள் வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன. தென்னிலங்கையை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

மகிந்த அரசு தமிழருக்கு எதிரான யுத்தத்தையே முன்னெடுக்கின்றது என்ற கூற்றுக்கு வலுக் சேர்க்கும் தொடர் நடவடிக்கைகளில் மோசமான ஒரு நடவடிக்கையாகவே இது அமைந்திருக்கிறது என பலரும் கருதும் இந்நிலையில், அரச அமைச்சரவையில் இருக்கும் மலையகத் தமிழ்க் கட்சிகளைச் சார்ந்தவர்கள் இந்த நடவடிக்கைக்கு எதிராக குரல் எழுப்பியிருக்கின்றனர். கடந்தகாலங்களில் இடம் பெற்ற கடத்தல்கள் கைதுகளுக்கும் எதிராக இவர்கள் கூட்டுச் சேர்ந்து குரல் கொடுத்திருந்தால் சிலவேளை இந்தக் கைதுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

வழமைபோல் இந்தக்கைதுகளை எந்தநாடுகளும் கண்டிக்கப்போவதில்லை. கண்டித்தாலும் அரசு இதைக் கண்டுகொள்ளப்போவதில்லை. தென்னிலங்கைத் தமிழ்க்குரல்கள் இணைந்து ஓங்கி ஒலிப்பதுதான் இதற்கு ஒரே வழி. இவர்கள் விலைப்படாதவர்களாக எழுச்சி கொண்டால், அப்பாவித் தமிழர் விடுதலை பெற வழி கிடைக்கும்.

மாற்றங்களை உள்வாங்கியபடி வேகமாய் நகர்ந்து கொண்டிருக்கின்றது காலம். கடந்து செல்லும் ஒவ்வொரு கணமும் புதிதாய் ஒன்றைத் தந்துவிட்டே அப்பால் நகர்கின்றன. ஓய்வாய் இருப்பது கூட ஒரு வேலையாகிவிடுகின்றது 'கனடா' நாட்டில். எனினும் பொதுவாக நோக்குகையில் இந்த மண்ணின் வாழ்வியல் தடைகளைத் தகர்த்தபடி முன்னேறிய இனமாகவே நாம் ஓரளவு அடையாளப்படுத்தப்பட்டு இருக்கின்றோம். பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பார்வைதான் இது. தமிழரின் வேகமாக தொழில் வளர்ச்சி, சொத்து மதிப்பு, கல்வித்துறையில் மேம்பாடு இவற்றினூடாகத்தான் நாம் கணிக்கப்பட்டிருக்கின்றோம்.

ஆனால் எம் சமூகத்திற்கிடையேயான உள்ளார்ந்த வளர்ச்சி காத்திரமான நிலையை நோக்கிச் செல்கின்றதா? எனக் கேட்டால் 'ஆம்' என உடன் பதில் சொல்ல எத்தனை பேரால் முடிகின்றது? உள்ளார்ந்த வளர்ச்சி என்பது சமூக ஒருமைப்பாடு சார்ந்தது. நாம் கூடி நமக்குள் நம்மை வளர்த்துக் கொள்வது. ஒருவரோடு ஒருவர் இணைந்து சமூகமாய் உயர்வது. இச் செயற்பாடுகளில் நாம் பின்னிற்கின்றோம் என்றால் பலரும் மறுக்கப் போவதில்லை.

வளர்ச்சி உள்ளும் புறமும் இருக்க வேண்டும். பல இனம் வாழுகின்ற ஒரு நாட்டில் ஒரு இனமாக நம்மை அடையாளப்படுத்த இவ் வளர்ச்சி மிக முக்கியமானது. பொருளாதார வளர்ச்சி என்பது, தொடர்புடையவர் தம்மை இனமாக அடையாளப்படுத்தினால்தான் இனத்தின் வளர்ச்சி. இல்லையென்றால் அது தனி மனித வளர்ச்சி. வட அமெரிக்காவில் பொருளாதாரத்தில் உயர்ந்திருக்கும் பலர் தம்மை தமிழர்களாக அடையாளம் காட்டிக் கொள்வதில்லை. கல்வியினால் உயர் பதவிகளில் இருக்கும் பலரும் ஈழத்தமிழர் எனக் காட்டிக் கொள்ளத் தயங்குகின்றனர். இவ்வளர்ச்சிகள் எல்லாம் இனத்தின் வளர்ச்சியாக அடையாளப் படுத்தப்படாமைக்குக் காரணம் எம்மிடையே இன ஒருமைப்பாடு இன்மையே.

இன ஒருமைப்பாட்டை வளர்க்கவல்ல இனத்துக்குள்ளான அகச் செயற்பாடுகள் உறுதிமிக்கதாக அடைய வேண்டும். எம்மிடையே உள்ள போட்டி மனப்பான்மை, பொறாமை அகல வேண்டும். ஒருவருக்கு ஒருவர் உதவும் எண்ணம் வலுப்பெற வேண்டும். எல்லா நிலைகளிலும் இன ஒற்றுமை பேணப்பட வேண்டும். இவையெல்லாம் ஒரு இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் இடம்பெறுகின்ற விடயங்கள் இல்லை என உங்களில் பலர் கருதலாம். ஆனால் இப்போதுள்ள கனடியத் தமிழ்ச்சமூகத்திற்கு மிக அவசியமான செய்திகள் இவை. எமக்கிடையே பிரிவுகள், பிளவுகள் மலிந்து கிடக்கின்றன. காட்டிக் கொடுப்புகள், கெடுப்புகள் எங்கும் இருக்கின்றன.

பல்லினப் பண்பாட்டுக்குள் இறுக்கமாக இருக்க வேண்டிய எம் ஒருமைப்பாட்டை சிதைக்கும் காரணிகளை விலக்கி, ஒருமனதாக இணைந்து வாழ அடுத்த தலைமுறைக்கேனும் கற்றுக்கொடுக்கும் வாழ்வை வாழ முயல்வோம்.

■ ■ ■

inayam
www.inayam.net
இது முற்றிலும் இலவசமான சேவை!!

# கிறிஸ்மஸ் காலத்தில்...

6ம் பக்கத் தொடர்ச்சி...

எடுத்து அவற்றை ஒரு பெரிய போஸ்டர் பலகையில் ஒட்டுங்கள். வெவ்வேறு காலப்பகுதியில் எடுத்த படங்களை கலந்து ஒட்டும்போது இடையிடையே வாழ்த்து அட்டைகள், பரிசுப்பொதி சுற்றும் அலங்கார வர்ணத் தாள்களையும் இணைத்து ஒட்டுங்கள். பின்னர் அவற்றைச் சுற்றி வெளிக் கோடுகள் வரைந்து வர்ணம் தீட்டுவதன் மூலம் உங்கள் குடும்பம் முழுவதும் விடுமுறை காலத்தின் போது இணைந்திருக்கும் தோற்றப் பாட்டை உருவாக்கலாம்.

- விடுமுறை காலத்தின்போது உங்கள் வீட்டை அலங்காரப்படுத்துவதற்கு அலங்காரப் பொருட்களுடன் மட்டுப்படுத்தாது, அழகான வாசனைகள், நினைவுகளைத் தூண்டும் நறுமணங்களுடனும் கிறிஸ்மஸ் தொடர்புபட்டது. உங்கள் வீட்டை அழகான வாசனைகளால் நிரப்புங்கள். இவ்வாறு நிரப்புவதற்கு பின்வரும் செய்முறையைப் பின்பற்றுங்கள்.

தோடம்பழத்தின் வெளிப்புறத்தோல், கறுவா, ஏலக்காய் என்பவற்றை சிறிய பாத்திரத்தில் இட்டு, அரைவாசிக்கு நீர் நிரப்பி மெல்லிய சூட்டில் வைக்கவும். நீர் குறையும் போது, தேவைக்கேற்ப நீர் விடவும். இது முழு நாளுக்கும் போதுமான வாசனையைக் கொடுக்கும். ஒவ்வொரு நாளும் இதனை புதிதாக செய்ய வேண்டும்.

- இயற்கைக் காட்சிப் படங்களைக் கொண்ட கலண்டர்களிலிருந்து டிசம்பர் மாதத்திற்குரிய படங்களைத் தனியே எடுத்து சேகரியுங்கள். இவற்றை கண்ணாடிச் சட்டமிட்டு கிறிஸ்மஸ் காலத்தின்போது உங்கள் சுவர்களில் கொளுவி விடுங்கள்.
- உங்கள் வீட்டு வரவேற்பறையில் அல்லது உணவு உண்ணும் மேசையில் ஒரு கூடையினுள் பைன் மரத்தின் கூம்புகள், இனிப்புத் தடிகள் (Candy canes), சிறிய பரிசுகள், குக்கீஸ் (Cookies), பலகாரங்கள், அப்பிள், ஹோலி இலைகள் அல்லது கண்ணாடியினாலான அலங்காரப் பொருட்களை இட்டு கூடையின் கைபிடியில் ரிப்பன் கட்டி வையுங்கள்.
- உங்கள் கட்டில் விரிப்புகள், comforters, அல்லது கால் தடுப்புகளை (Rugs), பச்சை – சிவப்பு கலந்ததாக மாற்றிப் போடுங்கள்.
- உங்கள் வீட்டில் கிறிஸ்மஸ் மரம் முக்கியமானது. அதில் அதிகமான அலங்காரப் பொருட்களைத் தொங்க விடுங்கள். நினைவுச் சின்னங்கள் (Souvenirs), குழந்தைகளின் சப்பாத்துக்கள், விளையாட்டுப் பொருட்கள், விலைகுறைவான முத்துமாலைகள் போன்றவற்றையும் தொங்க விடலாம்.
- வீட்டினுள் ஹோலி (Holly), ஐவி (Ivy), மிசில்டோ (Mistle toe) எனும் செந்நிறப் பழங்களைக் கொண்ட தாவரங்களை வைத்து அலங்கரியுங்கள். குளிர்காலத்தில் அநேகமான சுதேச தாவரங்கள் தமது இலைகள், பூக்கள், பழங்களை உதிர்க்கும் போது ஹோலி, ஐவி, மிசில்டோ என்பன விடுமுறை அலங்காரங்களைக் கவர்ந்திழுக்கும் குளிர்கால அதிசயங்களாகும். இவை என்றுமே பசுமையானவை. மாரிகாலத்தின் குளிரான இருண்ட நாட்களை பிரகாசமாக ஆக்குவதற்கான கிறிஸ்மஸ் கலாச்சாரமாக இவை பயன்படுத் தப்படுவதில் எதுவித ஆச்சரியமுமில்லை.

இந்த வருடத்தில் உங்களால் வீட்டு அலங்காரத்திற்காக அதிகமான பொருட்களை அதிக விலையின் காரணமாக வாங்கமுடியாமல் போனாலும் அடுத்த வருட அலங்காரத்திற்காக நீங்கள் மலிவான பொருட்களை கிறிஸ்மஸ் இற்குப் பின்னர் வாங்க முடியும். கிறிஸ்மஸ் இற்குப் பிந்திய விற்பனையின்போது பொதுவாக அலங்காரப் பொருட்கள், வெளிச்சம் என்பன எல்லாம் அரை விலையில் இருக்கும். அத்துடன் வருடம் முழுவதும் Garage sales, பழைய பொருட்கள் விற்பனை (Thrift sales), என்பவற்றுடன் estate sales ஐயும் தவறவிட வேண்டாம்.

நாம் ஏன் கொண்டாடுகிறோம் என்ற மிக முக்கியமான காரணத்தையும் எமது அன்பானவர்களை வரவேற்று கொண்டாடி மகிழ்வதற்காகவே வீட்டினை அலங்கரிக்கிறோம் என்பதையும் மனதில் கொண்டு விடுமுறை காலத்தில் வீட்டினை அழகாக அலங்கரித்து சந்தோஷத்தை அனுபவியுங்கள்.

■ ■ ■

**Publisher & Editor : P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
E-mail: thaiveedu@gmail.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

வீடு, வியாபார நிலையங்கள் **வாங்க விற்க**

**Call Gnani or Judy @ 416.629.9797**

**RESIDENCIAL PROPERTIES**

EXCLUSIVE



$172,000

**330 Mccowan Rd.**
**McCowan & Eglinton**

- 2+1 Bedroom and 2 Full Washroom
- Southwest View and convenient Location
- Fresh paint and New Laminate Floor



CONDITIONALLY SOLD

**1470 MIDLAND AVE. # 401**
**Midland & Lawrence**

- Luxuary Scarborough Fair Condo
- Bright Corner Unit
- 2+1 Br and 2 full w/Room

NEW LISTING

$355,000

**Brimley & Steels**

- 1600 sqft, 3 bedroom with finish basement and close to all amenities

NEW LISTING



$189,900

**2460 Eglinton Ave.**
**Midland & Eglinton**

- 2+1 Bedroom with 2 Washroom and Two Parkings.
- Very Convenient Location Close to TTC, Subway and Shopping.
- Renovated Unit.

**33 CANDLEBROOK CRES,**
**Warden & Finch**



**$599,000**

- Gorgeous 4 Bdrm Home, 2800 sqft
- Two apartments in BSMT
- Close to all amenities
- Rare Opportunity don't miss it.

NEW LISTING



$164,900

**2095 Roche Crt 275**
**Qew/Erin Mills Pkwy**

- 4 Bedroom Condo Townhouse
- Great Investment Opportunity
- Close to all amenities

**COMMERCIAL PROPERTIES**



**"Market East"**
**Markham & Steeles**

Last Phase of 20 Restaurant and Retail Units. Some of the Units are available.

More details **Call Gnani.**

NEW LISTING

Call GNANI

**STRIP PLAZA FOR LEASE ON LAWRENCE ROAD**

- Fully Renovated 4000 sqft Retail Strip Plaza
- Accross LCBO Store & High Rise Apt. Building.
- Bright, Clean Retail Space With Prominant Exposure.

NEW LISTING

Call GNANI

**FULLY EQUIPED AUTO BODY SHOP AVAILABLE IN SCARBOROUGH AREA**

* Front and rear truck level door entry



**"Sitara"**

The largest South Asian Indoor Mall in North America

HOMELIFE HIGHER STANDARDS

**CELL: 416.937.8090 ஞானேந்திரன் நரசிங்கம்**

**CELL: 416.629.9797 ஜூடி ஞானேந்திரன்**

Sales Representatives

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE


**ராம் கிருஷ்**

**RAM KRISH**

Senior Mortgage Consultant

The Mortgage Alliance company of Canada

Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# புதிய வீடுகளைக் கொள்வனவு செய்தலும் தரம் உயர்த்துதலும் (Upgrading)


வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -




வீடும் விடியலும் - 22

## சமையலறை

வீடுகளைத் தரம் உயர்த்தும் போது, வீட்டு உரிமையாளர்கள் பலர் எம்மவர் மத்தியில் பல ஆயிரம் டொலர்களை சமையலறைக் குள் முடக்கிவிடுவது மிகச் சாதாரணமாக உள்ளது. எனவே, இதில் இருக்கக்கூடிய பாதக. சாதக விளைவுகள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் ஆராய்தல் பொருத்தமாக இருக்கும்.

சமையல் அறை அலுமாரிகள் (Kitchen cupboard) புதிய வீடுகள் கட்டப்படும்போது, மிகச் சாதாரணமான அடிப்படைத் தன்மை கொண்ட அலுமாரிகள் மட்டுமே கட்டிட அமைப்பாளர்களால் வழங்கப்படும். ஆனால் அவற்றைத் தரம் உயர்த்துவதற்கு பலவித நிறங்களிலும், பலவிதமான மரங்களிலும், பலவித வடிவங்களிலும் மாதிரிகள் கட்டிட அமைப்பாளர்களால் வழங்கப்படும். இவற்றை ஓரளவாவது தரம் உயர்த்துதல் சாலச் சிறந்தது. பின்னர் இவற்றைத் தரமாகச் செய்விப்பதற்கு அதிகளவு பணமும் சிரமமும் ஏற்பட வாய்ப்புண்டு. கட்டிட அமைப்பாளர் களால் வழங்கப்படும் அடிப்படை அலுமாரி களுக்கும் வீட்டு உரிமையாளர்கள் தரம் உயர்தும்போது தெரிவுசெய்யும் புதிய அலுமாரிகட்கும் இடையில் இருக்கக்கூடிய மூலப் பொருட்களின் பெறுமதியை மட்டுமே மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருப்பதால் இதன் விலை அதிகமாக இருக்க வாய்ப்பில்லை.

ஆனால், அலுமாரிகளின் உயரத்தில் கவனம் செலுத்தாதுவிட்டுவிட்டு, பின் தமது கவலையை கொட்டிக் கொள்ளும் பல உரிமையாளர்களைச் சந்தித்த அனுபவம் நினைவுக்கு வருகிறது. அதாவது 9அடி உயரம் கொண்ட முகட்டு அமைப்பினைக் கொண்ட வீடுகளுக் குரிய சமையலறை அலுமாரிகளைத் தெரிவு செய்யும்போது அவற்றின் உயரத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

சாதாரணமாக 30''உயரம் உள்ள அலுமாரி களே சாதாரணமாகப் பொருத்தப்படும். 9'உயரம் கொண்ட வீடுகளில் முகட்டுக்கும் (Ceiling) அலுமாரிக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி இருக்கும். என்ன, அலங்காரப் பொருட்களை அலுமாரிக்கு மேல் வைத்தாலும் அவ்வளவு வடிவாக அமையாது. எனவே, அலுமாரியின் உயரத்தை 36''அல்லது 41''அங்குலத்திற்குக் கூட்டி எடுக்கவேண்டியது மிக அவசியம்.



### Crown Moulding

அத்துடன் உயர்த்தப்பட்ட அலுமாரிகளுக்கு crown mouldingம் போட்டுவிட்டால் மிகவும் அழகாக இருக்கும்.



### Counter Top

பலதரப்பட்ட Counter Tops அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. ஆனால் பொதுவாக மிக மலிவானது மட்டுமே கட்டிட அமைப்பாளர்



களிடமிருந்து அடிப்படை விலைக்குள் பெறத் தக்கதாக இருக்கும். Granite இல் counter top போடுவது மிக அழகானதும் அதே வேளை மிக நீண்ட காலம் பாவிக்கக்கூடியதுமாகும். ஆனால், அவற்றைக் கட்டிட அமைப் பாளர்களிடமிருந்து பெறுவது மிகமிகச் செலவானது. அவற்றை வெளியில் தரமானவர்களைப் பிடித்துச் செய்வதற்கு1/2 பங்கிற் கும் குறைந்த செலவே ஏற்படும் என்பதை நினைவில் வைத்திருத்தல் நல்லது. வீட்டிற் குள் பிரவேசிக்க முன்னரோ அல்லது வீட்டிற்குள் பிரவேசித்த பின்னரோ அதனைச் செய்விப்பதில் அதிக சிரமம் இருக்காது.



### Sink

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் எல்லோராலும் Counter Topஐ கிறனைற்றுக்கு மாற்றுவது இயலாது போகவாய்ப்பு இருக்கிறது. அது பரவாயில்லை. ஆனால், சமையலறை தொட்டியில் எல்லோரும் கவனம் செலுத்து வது நல்லது. இதிலும் பல விலைகளில் இது இருந்தாலும் Faucet இணைப்பதற்கு மேற் பகுதியில் துவாரம் உள்ள தொட்டியைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்தவேண்டி யது அவசியம். இதனைத் தவறவிட்டால் Counter Topஇன் மேற்பகுதியில் துளைபோட்டு அதில் Faucetஐ இணைக்க வேண்டிய நிலை ஏற்படும். பெரும்பாலான வீடுகளில் 1-2 வருடத்திலேயே அத்துவாரத்தின் ஊடாக நீர்க் கசிவு ஏற்பட்டு Counter Top மிகக் குறுகிய காலத்திலேயே உக்கிப்போயிருப் பதை எனது அனுபவத்தில் பார்த்து இருக்கி



றேன். எனவே, சில டொலர்களைப் பாராது தொட்டியைத் தரம் உயர்த்துதல் மிக அவசியம்.
கிறனைற் கௌண்டர் ரொப்பிற்கு சிங்கைத் தெரிவுசெய்யும்போது Under mount sinkஐத் தெரிவுசெய்தல் சாலச் சிறந்தது.

### Over hood Fan

எம்மவர்கள் மிகக் கவனமெடுக்க வேண்டிய விடயம் எமது சமையலறையில் இருக்கும் Over hood fan பற்றியதாகும். பொதுவாக தற்போது கட்டப்படும் வீடுகளில் உள்ள சமையலறைக் காற்றாடிகள் ஊடாக வெளி யேற்றப்படும் காற்று, வீட்டிற்கு வெளியே போகக்கூடிய விதத்தில் சுவரில் துவாரம் இடப்பட்டு இணைக்கப்பட்டிருக்கும். ஆனால், போடப்பட்டிருக்கும் காற்றாடிகள் சுமார் 30-40 டொலர் பெறுமதியான தரம் குறைந்தவையே போடப்பட்டிருக்கும். வெள்ளை இனத்தவர்க ளுக்கு இத்தகைய காற்றாடிகள் போதுமான தாக இருந்தாலும் எமது தேவைக்கு இது போதுமானதல்ல. கடையில் வாங்கி, Micro oven இல் சூடேற்றமட்டும் சமையலறையைப் பாவிப்பவர்களும், அழகான சமையலறை அழுக்காகிவிடும் என எண்ணுபவர்களும் இதுபற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

ஆனால், நாவுக்குச் சுவையாக, வாசனைத் திரவியங்களைப் பாவித்து, பொரித்து, அல்லது நீண்டநேரம் சமைத்து, உண்டு வாழ்வை ரசிப்பவர்கள் பலர் இருக்கவே செய்கிறார்கள். எனவே, அத்தகையோர் இதில் கவனம் எடுத்து, ஒரு தரமான காற்றாடியை மாற்றினால் வீடு துர்நாற்றமடையாது பாதுகாத்துக்கொள்வதுடன், மிக மகிழ்வுடன் சமைத்து, சுகாதாரமாக உணவு உட்கொண்டு நீண்ட காலம் உயிர்வாழலாம். மிக முக்கியமாக நீண்டநேரம் சமையல் செய்பவர்கள் தரமான காற்றாடியைப் பாவிக்காது விடுவதால், மேலதிக ஈரப்பதனை (Humidity) வீட்டிற்குள் உருவாக்குகிறார்கள். நான் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டபோல, மேலதிக ஈரப்பதன் காரணமாக வீட்டில் விரும்பத்தகாத பல இடர்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கட்டிட அமைப்பாளர்கள் மூலம் காற்றாடிகளைத் தரமுயர்த்துவது உகந்ததல்ல. அதனை நாங்களாகவே பின்னர் மாற்றிக் கொள்வது ஒன்றும் பெரிய விடயமல்ல. இதன் விலை சுமார் 220டொலர்களில் இருந்து தரத் திற்கும் அழகிற்கும் ஏற்றவாறு சில ஆயிரங் கள் வரை செல்லும்.



■ ■ ■





ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER — Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு
ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச்
செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:



தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

**Move Commercial or Residential**

# உங்கள் நன்மைக்காக செயற்படுபவரை நாடுங்கள்

வீடு வாங்க, விற்க, மற்றும் Mortgage, Income Tax சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்...



**Manga Arunasalam**
Real Estate Broker
Cell: 416.816.8775
Res: 905.944.9604


HomeLife Metro Realty Inc. Brokerage
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4
Tel: 416.293.5093
Fax: 416.293.5237




WESTON / FINCH
2 Bedroom(s), 1 Bathroom(s) Condominium.





STEELES / KIPLING
Bedroom(s), 2 Bathroom(s) Condominium.
Central Air Conditioning




WESTON / FINCH
2 Bedroom(s), 1 Bathroom(s) Condominium.

**SELLING COMMISSION ONLY 1 %**




Pharmacy/Finch
4 Bedroom(s), 3 Bathroom(s)
Finished Basement




Woodbine/16th AVE
4 Bedroom(s), 5 Bathroom(s) Home.
Basement with income potential and Central Air Conditioning.




Church/Rossland
4 Bedroom(s), 4 Bathroom(s) Home.
Finished Basement and Central Air Conditioning.





வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்

**CEYLINGO FINANCIAL GROUP.**
**416.430.0111**
2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8



**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**

2005, 2006 Diamond award winner
No. 1 Invis Mortgage agent in Canada



**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

# Mortgage கட்டாமல் மூன்று மாதம் வீட்டில் இருக்க...



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வாசகர்களுக்கு வணக்கம். மார்கழி மாதம் வந்துவிட்டாலே மேற்கத்தேய நாடுகளில் கொண்டாட்டங்கள் களைகட்ட ஆரம்பித்து விடும். நத்தார் பண்டிகையை ஒட்டிய விடுமுறைகள், களியாட்டங்கள், விருந்துபசாரங்கள் என்று அப்பாடா... குளிரையும் பொருட்படுத்தாது குதூகலிப்புக்கள் தொடரும். அந்த வகையில் 2007ஆம் ஆண்டு விடுமுறை காலங்களும் உங்கள் மத்தியில் ஓர் இனிமையான நாட்களாக அமைய இறையருள் வேண்டி, வாகன சாரதிகளுக்கும் "Drive Safe" என்னும் பதத்தை தினசரி கடைப்பிடிக்கவும் வேண்டி தொடர்கிறேன்.

கடந்த இதழ்களில் இடம்பெற்ற கேள்வி பதில்கள் வாசகர் மத்தியில், எதிர்பார்த்ததை விட தகுந்த வரவேற்பை ஏற்படுத்தியிருந்தது. அதன் வெளிப்பாடாய் இம்முறையும் தரமான பல கேள்விகள் கிடைக்கப் பெற்றன. தெடார்ந்து அதற்கான விளக்கங்களைப் பார்ப்போம்.

- **"Digital Thermostat" உபயோகிப்பதனால் என்ன நன்மை? அதனால் நாம் ஏதாவது எமது Billல் மாற்றத்தை எதிர்பார்க்கலாமா?**

க.சுகந்தன்
ஸ்காபரோ

## உங்களை மற்றவர்கள் விரும்புவதற்கு...?

• சிரிப்பதற்கு எவரும் விரும்புகிறார்கள் அத னால் தங்களைச் சிரிக்கவைப்பவர்களை யும் விரும்புகிறார்கள். ஆகவே மற்றவர் களை சிரிக்க வைக்கப்பழகுங்கள்.

• தாங்கள் சொல்வதை மற்றவர்கள் கேட்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார் கள். ஆகவே கேட்கப்பழகுங்கள்.

• அவர்களிடம் இருக்கும் குறைகளை மற்ற வர்கள் முன்னிலையில் பகிரங்கமாக சொல் வதை நிறுத்துங்கள்.

அவர்கள் உங்களை விரும்ப தொடங்கு வார்கள்

## சோம்பல்

விதைக்கும் நேரத்தில் தூங்கிவிட்டு அறு வடை நேரத்தில் அழுது என்ன பயன்.

## முட்டாள்

முட்டாளுடன் வாதம் செய்யாதீர்கள். பார்ப்பவர்களுக்கு யார் முட்டாள் என்று கண்டுபிடிக்க சிரமமாகிவிடும்.

## பதவி ஆசையால் மிருகம்

நாற்காலியால் இருந்தவன் இருகாலி ஆனான் இரு காலி ஆனதால் நாற்காலி செய்தான் நாற்காலிக்காக, மீண்டும் நாற்காலி ஆனான்.




## வேஷம்

எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்கிற முகமூடியுடன் பழகுகிறவர் கள் கடைசியில் எவரிடமும் நல்லபெயர் எடுப்பதில்லை

## சொர்க்கம், நரகம்

நேர்மையாக வீடு விற்றால் (வியாபாரம் செய்தால்) சொர்க்கம் செல்வார்களாம். நேர்மை தவறி வியாபாரம் செய்தால் நரகம் செல்வார்களாம். எங்கு செல்ல விரும்புவீர்கள் என்று என்னைக் கேட்டால் எங்க போனால் கூட வீடு விற்கலாமோ அங்கு தான் போக விருப்பம் என்பேன்!

## தோல்வி மனப்பான்மை

தோல்வி வரலாம். தோல்வி மனப்பான்மை தான் வரக்கூடாது.

## படிப்படியாக

நீங்கள் எட்ட நினைப்பது மிக உயரமாகக் கூட இருக்கலாம் ஆனால் அதை அடைய வேண்டுமானால் ஒவ்வொருபடியாக எடுத்து வைத்துத்தான் முன்னேறிச் செல்லவேண்டும்.

## விமர்சனம்

உன் உடம்பில் புண் இல்லாதவரை உன் மீது ஒருவர் உப்பைத் தூவினால் எரியப் போவதில்லை. நம்மீது குற்றமில்லாத பட்சத் தில் பிறரது விமர்சனங்கள் நம்மைப்பாதிக்க வேண்டியதில்லை.

## மகாத்மா தீவிரவாதியாம்

ஆமாம் வன்முறையைத் துளி கூட ஆதரிக் காத தீவிரவாதி.

■ ■ ■


RETAIL BUSINESS SPACE FOR LEASE

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட GTA Square (Finch /Middlefield) இன் முதலாவது தளத்தில் (1st floor) இரண்டு Units அடுத்தடுத்ததாக வாடகைக்கு கொடுக்கப்பட உள்ளது. நியாயமான வாடகை. எந்தவிதமான தொழில்களும் நடத்தலாம். (சில நிபந்தனைகள்)

தொடர்புகளுக்கு: 416. 359.0115

For Rent

3 Bed Room Condo Town House

Finch & Birchmount

416 - 587 6442

TOWN HOUSE FOR SALE/RENT

PHARMACY & FINCH சந்திப்புக்கு அருகில்

Beautiful newly painted 3=1 Bedroom Town House with finished basement, Great end unit (Like Semi with single garage( upgraded kitchen, laminated 4 tile floors & 3 wash rooms

விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.
Close to TTC (24 hrs) Hwy 404 & 401
Price : $ 229,000.
Available immediately .

Call: (416) 937 2114

# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

**Harry** 416.856.4276
**Kannan** 416.854.6183
**Lingan** 416.830.2700

# COMMERCIAL MORTGAGE

- **Commercial Interest starts from 5.5%**
- **New Business Loans**
- **Bussiness Loans**
- **New Plazas**

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

- **Ist & 2nd Mortgage**
- **Commercial Mortgage**
- **Re-Finance to get rid of your loans**
- **Bridge Financing**
- **Cottage Properties Financing**
- **Up to 90% LTV**
- **Non-Permanent Residents**
- **Rental Properties Financing**
- **Self-Employed**
- **No Money Down Mortgage**



**K.N. KANNAN**
Mortgage Consultant
**Tel: 416-854-6183**
**Montréal: 1-514-787-9486**
Office: 416.273.8232
Fax: 416.214.1999
inviskana@gmail.com, www.invis.ca

invis
HSBC The world's local bank
FIRST NATIONAL FINANCIAL LP
INTERBAY FUNDING, LLC

90 Kennedy Rd. S., Unit C, Brampton
701 Evans Ave., Suite 600, Toronto, On M9C 1A3

Head Office:
GTA Square 256 & 257 - 5215 Finch Avenue East, Scarborough, ON. M1P 5H4
Branch: 16 – 2857 Lawrence Avenue East, Scarborough, ON. M1P 2S9

## ‘வீடு’ வரை உறவு! ‘வீதி’ வரை மனைவி!

# ‘காடு’ வரை பிள்ளை! ‘கடைசிவரை’ காப்புறுதி!



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

**தொடர் - 7**

### சேமிப்புடன் சேர்ந்த பல சலுகை கொடுக்கும் காப்புறுதி Universal Life

ஆயுள் காப்புறுதி (Whole life Insurance), தவணைக் காப்புறுதி என்பவற்றைப் பொறுத்தவரையில் ஒருவரது மாதாந்த கட்டுப் பணத்தை அல்லது வருட கட்டுப்பணத்தை நிர்ணயிப்பது அவரவரின் வயது, ஆணா, பெண்ணா என்ற விபரம், புகைத்தல் அல்லது புகையிலை உபயோகப்படுத்துபவரா, இல்லையா என்ற விவரம், அவரவரின் தேகநிலை பற்றிய விவரம் ஆகியனவாகும். வயதைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஒருவரது வயதுக் கணிப்பு காப்புறுதிக்கு மனுச்செய்யும் நாளிலிருந்து 6மாதத்திற்குள் கிட்டிய வயதைத்தான் மனுச்செய்யும் வயதாகக் கணிப்பில் கருத்தில் எடுக்கப்படும். அப்படியிருந்தும், எடுக்கும் திட்டம் நீண்டகால திட்டமாக இருப்பின் கட்டுப்பணத்தைக் குறைப்பதற்கு வயதினைப் பின்போட்டும் (Back dating the age) கணிப்பில் கருத்தில் கொள்ளலாம். இந்த முறையினை அநேகமான நிறுவனங்கள் 80 வயதிற்குட்பட்டவர்கட்கு மட்டுமே அனுமதிப்பார்கள். இந்த முறையில், கனடாவைப் பொறுத்தவரை வேலை, சீதோஷ்ண நிலை(Weather) ஆகிய இரண்டுமே நிச்சயமாக, உறுதியாகக் கூறிக்கொள்ள முடியாமல் திடீரென தடுமாற்றம் காட்டும் காரணிகளாகத் திகழ்வதனால் இதை நம்பிக்கொண்டு ஒரு நீண்டகாலமான காரியத்தில் கால் வைப்பதற்கு அநேகமானோர் தயங்குவதை நாம் அன்றாடம் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த தயக்கம், மற்றும் சந்தேகக் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடனும் எப்போதும் பதட்டமின்றி மன ஆறுதலைக் கொடுக்கும் திட்டமாகத் திகழும் காப்புறுதிதான் இந்த universal Life. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை முதல் பந்தியில் குறிப்பிட்ட காரணிகளைவிட, காப்புறுதிக்கென்று மட்டும் தேவைப்படும் காரணியை ஆங்கிலத்தில் Cost of Insurance என்று குறிப்பிடுகிறோம். இங்கு காரணியை ஆரம்பத்தில் குறைவாக ஆரம்பித்து, வருடாவருடம் அதிகரித்துக் கொண்டு போகும் காரணியாகத் தேர்ந்தெடுத்தால் அதனை Yearly renewable term cost of Insurance என்றும் அதனை ஆரம்பத்திலிருந்தே இறுதிவரை மாறாமல் இருக்கும் காரணியாகத் தேர்ந்தெடுத்தால் அதனை level cost of Insurance என்றும், ஒவ்வொரு 5வருடத்திற்கு ஒருமுறை குறைந்த தொகையிலிருந்து நிறுவனம் தீர்மானிக்கும் அதிகப்படியான தொகை அதிகரிக்கும் திட்டமாக அல்லது எப்போதும் இக்காரணியை அதிகரிக்கும் திட்டமாக ஏற்படுத்தியிருந்தால் அதனை Cost of Insurance variable rates என்றும் குறிப்பிட்டிருப்பார்கள். இதனை எல்லா நிறுவனங்களும் எப்போதும் திடீரென மாற்ற அனுமதிக்க மாட்டார்கள் என்றபடியால், இதனை ஆரம்பத்தில் எடுக்கும்போதே சரியாகத் தேர்ந்தெடுப்பது சாலவும் நன்று. அப்படி அனுமதித்தாலும், புதிய மாற்றங்களைச் செய்யும்போது உங்கள் புதிய வயது காரணமாக உங்கள் மாதாந்த அல்லது வருட கட்டுப்பணம் அதிகரிப்பதற்கு சாத்தியக்கூறு உண்டு.

இந்தக் காரணியை 10வருடம் மட்டும் அல்லது 15வருடம் மட்டும் அல்லது 20வருடம் மட்டும் அறவிடும் பணத் தொகையாக நிர்மாணித்தால் இதனை முறையே Cost of Insurance 10 pay, Cost of Insurance 15 Pay, Cost of Insurance 20 Pay என ஆங்கிலத்தில் அழைக்கிறோம். இதன்மூலம் இந்த குறிப்பிட்ட காலவரை தாண்டியதும் நீங்கள் மாதாந்த அல்லது வருட கட்டுப்பணத்தைச் செலுத்தாவிட்டாலும் உங்களது காப்புறுதி தொடர்ந்து ஆயுள்காலம் வரை நீடிக்கும் என்பது உறுதி. அப்படியிருந்தும் ஒரு சில நிறுவனங்கள் தொடர்ந்தும் அதே பணத்தைக் கட்டுவதற்கு அனுமதிக்கின்றன. காரணம், தொடர்ந்து கட்டுவதானால், உங்கள் சேமிப்பும் தொடர்ந்து அதிகரிக்கும் என்பதால், உங்கள் புதிய காப்புறுதித் தொகையும் அதற்கேற்ப அதிகரிக்கும். இதற்கான உதாரணங்கள் பின்னர் ஆராயப்படும்.

மேலும், ஆரம்ப காப்புறுதித் தொகையை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மாறாத காப்புறுதித் தொகையாக இருக்க விரும்பின், அதனை Level death benefit என்றும், ஆரம்பத் தொகை வருடாவருடம் (மாதாந்த வருடக் கட்டுப்பணம் மாறாமல்) விலைவாசிக்கு ஏற்ப அதிகரித்துக்கொண்டு போகும் வண்ணம் ஏற்படுத்தினால் அதனை Increasing death benefit அல்லது Coverage plus என ஆங்கிலத்தில் அழைக்கிறோம். இந்த இரண்டாவது ஏற்பாடு எப்போது சிறப்பாகத் தொழிற்படும் என்பதைப் பின்னர் ஆராய்வோம்.

இம்மாதிரியான ஏற்பாடுகளுடன் கட்டுப்பணம் செலுத்துபவருக்கு மேலதிக சலுகைகளும் அவர்கள் விரும்பினால் வழங்கப்படும். அதாவது, பணம் கட்டிக்கொண்டு வருகையில், நீண்டகால (குறைந்தது 6மாதம்) சுகவீனம் காரணமாக அல்லது பலத்த காயங்கள் காரணமாக ஊனமுற்று இருக்கையில் நிறுவனம் அதிகபட்சம் அனுமதிக்கும் கட்டுத்தொகையை அல்லது ஆரம்பத்தில் இருந்து கட்டிக்கொண்டுவரும் அதே தொகையை நிறுவனமே உங்கள் சார்பாக கட்டிக் கொண்டுவருவதற்கான சலுகை. இந்த சலுகை நிறுவனங்களைப் பொறுத்து பணம் கட்டுபவரின் வயது 60 அல்லது 65 வரை நிறுவனமே உங்கள் சார்பாக கட்டிக்கொண்டு வருவதனால் உங்கள் காப்பறுதி ஒருபோதும், எக்காரணம் கொண்டும் குலையாத காப்புறுதியாக ஆயுள் கால மன ஆறுதல் திட்டமாக அமையும் என்றால் மிகையாகாது. இதனையே ஆங்கிலத்தில் Automatic Payment Benefit (APB) அல்லது Disability waiver on the payor (WP) என்று அழைக்கிறோம்.

அத்துடன் இந்த திட்டத்தில் உங்கள் தற்காலிக பொறுப்புகளான பிள்ளைகளின் படிப்பு, வீட்டு அடமானக் கடன், வங்கிகளுக்கான கடன் இருப்பின் அதனையும் சேர்த்து மொத்தமாக காப்புறுதித் திட்டத்தை ஆரம்பத்திலேயே எடுத்தால், வயது குறைவு, சீரான தேகநிலை காரணமாக குறைந்த செலவில் ஏற்படுத்தலாம். APB அல்லது WP சலுகை இதனையும் பாதுகாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதிரியான திட்டங்கள் குழந்தைகள், வாலிப வயதுடையோர், திருமணமான பெற்றோர், வயோதிபர்கள் என பல்வேறு பட்ட வகுப்பினருக்கும் எவ்வாறு சிறப்பாகச் செயற்படும் என இனி ஆராய்வோம்.

### 1. சிறு குழந்தைகள்

சிறு குழந்தைகளைப் பொறுத்தவரை, அவர்களது காப்புறுதிக்கான காரணியான Cost of Insuranceஇனை வருடா வருடம் 20 அல்லது 25 வருடம் மட்டும் அதிகரிக்கும் காரணியாக (YRT to age 25) அல்லது 20 வருடத்திற்கு மட்டும் ஒருபோதும் மாறாமல் இருக்கும் Level cost of Insurance for 20yrs ஆக ஒழுங்குபடுத்துவதனால் அவர்களின் காப்புறுதிக்கான அறவீட்டுத் தொகையை மிகவும் குறைத்து, மேலதிக பணத்தை காப்புறுதி நிறுவனங்கள் அளிக்கும் சேமிப்புத் திட்டத்தில் சேர்க்கலாம். உதாரணமாக, குழந்தையைப் பொறுத்தவரை அவரது வயது 2 என்றும் பணம் கட்டுபவர் தகப்பன் - அவரது வயது 35, புகைபிடிக்காதவர் என்றும் அவரது தேகநிலையில் ஒருவிதமான பாதிப்பும் கிடையாது எனவும் கருத்திற் கொள்வோம். சேமிப்பு வருமான வரியின்றி, வளர்ச்சியடைவதற்கான மாதாந்த கட்டுத் தொகை விண்ணப்பிக்கும் காப்புறுதித் தொகைக்கு ஏற்ப வேறுபடும் என்பதனால், விண்ணப்பிக்கும் காப்புறுதித் தொகை 200,000டொலர்களாக இருப்பின், மாதாந்தம் தகப்பன் கட்டவேண்டிய குறைந்த மாதாந்தத் தொகை 20டொலராகவும் அதிகப்படியாகக் கட்டக்கூடிய தொகை 260டொலர்களாகவும் இருக்கும். மேலும் தகப்பனார், தனக்கு மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான சலுகைக்கு விண்ணப்பித்தால் (APB on death or disability of the payer) இந்த மாதாந்த குறைந்த கட்டுத்தொகை ஏறத்தாழ 28 டொலராகவும், கூடிய தொகை 290டொலர்களாகவும் நிர்ணயிக்கப்படும். இதன்படி, நிறுவனம் அனுமதிக்கும் அதிகப்படியான அறவீட்டுப் பணத்தை, குழந்தைக்கான மாதாந்த அரசாங்க சலுகைப் பணத்தையோ, அல்லது தனது உழைப்பிலிருந்தோ தகப்பனார் ஒதுக்குவாரேயானால், மேலதிக பணத்தை நிறுவனம் வழங்கும். பல்வேறு சேமிப்புத் திட்டங்களில் ஒவ்வொரு சேமிப்புத் திட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கலாம். இந்த மாதிரியான சேமிப்புத் திட்டங்கள் வங்கிகள், பிரத்தியேக நிறுவனங்கள் போலல்லாது பல்வேறு பலத்த பாதுகாப்புடன் இயங்கும் சேமிப்புத் திட்டங்கள் என்றபடியால், எத்தருணத்திலும் இச்சேமிப்பு எக்காரணம் கொண்டும் குலையாத, பிறர் அபகரிக்க முடியாத நிலையான சேமிப்புத் திட்டங்களாக செயல்படும். காரணம், ஏற்கெனவே முன் இதழ்களில் குறிப்பிட்டபடி, காப்புறுதி நிறுவனங்களால் அளிக்கப்படும் சேமிப்புத் திட்டம் “காப்புறுதி செய்யப்பட்ட” சேமிப்புத் திட்டமாகும். (Insured saving) இதனையே ஆங்கிலத்தில்(Segregated Funds)என அழைக்கிறோம். இந்த சேமிப்புத் திட்டங்களும் Mutual funds போலவே இயங்கினாலும் இதில் 5 முக்கியமான உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படைக் காரணிகள் உண்டு. அவை யாவன:

1. Death benefit Guarantee
2. Stock Market Guarantee
3. Creditor proof Guarantee
4. Probate bipass Guarantee
5. Bonus for long term clients

அத்துடன் இம்மாதிரியான சேமிப்புகளில் பல்வேறு திட்டங்களில் பணத்தை ஒதுக்குவதனால், எத்தருணத்திலும் எல்லா சேமிப்புத் திட்டங்களும் குறைவான அல்லது படுமோசமான வட்டிவீதத்தினைக் கொடுக்கமாட்டாது என்பது உறுதி. அத்துடன், காப்புறுதி நிறுவனம்மூலம் ஆரம்பிக்கும் திட்டம் என்றபடியால், எப்போதும் உங்களுக்கு மன ஆறுதலைக் கொடுக்கும் சேமிப்புத் திட்டமாகவே இருக்கும். வருட முடிவில் இந்த சேமிப்பின் வளர்ச்சி வீதத்தை ஒரு அறிக்கை மூலம் (Annual statement) நிறுவனம் உங்களுக்கு அறிவித்துக்கொண்டே இருக்கும். அத்துடன் எக்குறிப்பிட்ட வருடத்திலும் மொத்தம் 4 தரம் சேமிப்புத் திட்டங்களை நிபந்தனையின்றி மாற்றுவதற்கும் அனுமதிப்பார்கள். ஒருசில நிறுவனங்களைப் பொறுத்

26ம் பக்கம் பார்க்க...

## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி”

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# வீடுவரை உறவு வீதி வரை...

25ம் பக்கத் தொடர்ச்சி...

தவரை சேமிப்புத் திட்டங்களின் வளர்ச்சி தொடர்ந்து கூடிக்கொண்டு போகும்படியான ஒழுங்குகளும் செய்து தரப்படும். இந்த ஒழுங்கினை Market Resetting என அழைப் போம். இந்த சேமிப்பின் வளர்ச்சியினால் காப்புறுதித் தொகையும் வருடாவருடம் அதி கரித்துக்கொண்டு போவதனால் பிள்ளை யின் பல்கலைக் கழக படிப்பிற்குத் தேவைப் படும் பணத்தை ஏற்கெனவே முன் இதழ்க ளில் குறிப்பிட்ட Leveraging concept என்ற அணுகுமுறைமூலம் வருமானவரியின்றி, வங்கியிலிருந்து பணத்தை காப்புறுதி ஒப்பந் தத்தின் பெற்றோர் எடுத்து, பிள்ளையின் படிப்பிற்குப் பிரயோகப்படுத்தலாம். பிள்ளை யின் படிப்பின் தராதரம் எதிர்பார்த்ததைவிட அதிகபட்சம் மேலதிகமாகி, அதன் பிரதி-பலிப்பாக அரசாங்கத்தின் செலவில் மேற் படிப்பைத் தொடர்வாராயின், (இந்த மாதிரி யான அதிர்ஷ்டசாலிகள் எம் தமிழினத்தில் உருவாகியிருக்கிறார்கள்) இந்த மேலதிக சேமிப்பு பிள்ளையின் எதிர்காலத்தில் எந்தத் தேவைக்கும் உதவும் காரணியாக இருக்கும் அல்லது பிள்ளையின் ஆயுள் காப்புறுதி தொடர்ந்து (நீங்கள் பணம் செலுத்தாம லேயே) விலைவாசிக்கேற்ப அதிகரித்துக் கொண்டே போகும்.

## 2. வாலிப வயதுடையோர்

இவர்களைப் பொறுத்தவரையும் காப்புறுதிக் கான காரணிகளை 10அல்லது 15 அல்லது 20 வருடத்திற்கு மட்டும் அல்லது வாழ்நாள் பூராக உத்தரவாதப்படுத்தி, மேலதிகமாக கட்டக்கூடிய தொகையைச் சேமிப்புத் திட்டத் தில் ஒதுக்குவதனால் அவர்கள் இளைப்பா றும் வயதில் (Retirement) தேவையான கணிசமான தொகையை வருமானவரி யின்றி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. அல்லது குறிப்பிட்ட வயது தாண்டியதும் கட்டுப்பணத்தை நிறுத்தினாலும் மனுச்செய்த காப்புறுதி தொடர்ந்து விலைவாசிக்கேற்ப கூடிக்கொண்டு போகும் ஒழுங்கினையும் ஏற்படுத்தலாம்.

## 3. இளந் தம்பதியினருக்கு அல்லது பிள்ளைகள் உள்ள இளம் குடும்பத்தார்க்கு:

இவர்களைப் பொறுத்தவரை, காப்புறுதி ஒப்-பந்தத்தின் முழு அதிகாரத்தையும், உரிமை களையும் தனியே ஒருவரோ அல்லது கணவன், மனைவி ஆகிய இருவருமோ சமபங்கு கோரி (Single or joint ownership) விண்ணப்பிக்க லாம். பிள்ளைகளுக்கான காப்புறுதியை அவரவர் வயது 25 தாண்டியவுடன் தனித்தனி யாக பிரத்தியேகமாக காப்புறுதித் திட்டமாக அந்த வயதிற்கேற்ப மாதாந்த கட்டணத் திற்கு மருத்துவரீதியின்றி மனுச்செய்யலாம். இந்த அணுகுமுறை முழுக் குடும்பமும் தமது செலவை மிகவும் குறைத்து அதிகபட்சம் காப்புறுதிக்கு மனுச்செய்ய முயன்றால் கொடுக்கப்படும் திட்டமாகும். இந்த மாதிரி-யான திட்டத்தை ஆங்கிலத்தில் Multi life Universal Life என அழைக்கிறோம். இதன் பிரகாரம் அதிகபட்சம் 6 குடும்ப உறுப்பின ருக்கும் ஒரே ஒப்பந்தம் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு, அவரவர்க்கான காப்புறுதித் தொகையும் எழுத்தில் கொடுக் கப்படும். இவ்வொழுங்கை வியாபாரத்தில் இருக்கும் பங்காளிகளும் பின்பற்றலாம். இந்த ஏற்பாடு குடும்பமாக இருப்பினும் வியாபார மாக இருப்பினும் யாராவது ஒரு நபர் படுமோசமான தேகநிலையில் இருப்பாரா யின், காப்புறுதித் திட்டத்தின் சேமிப்பு வளர்ச்சி வீதத்தின் பங்குதாரராக அவரை நியமித்து, திடீரென அவருக்கு மரணம் ஏற் படும்போது அந்த சேமிப்பு மட்டும் அவரது வாரிசுதாரருக்குச் சென்றடைய ஒழுங்குகள் செய்யலாம். மேலும், இந்த காப்புறுதி நிறு வனங்களின் சேமிப்புத் திட்டங்களைப் பொறுத்தவரை காப்புறுதி செய்யப்பட்ட (Insured) சேமிப்புத் திட்டங்கள் நிறுவனங் களைப் பொறுத்து 6 சேமிப்புத் திட்டங் களிருந்து ஏறத்தாழ 400 சேமிப்புத் திட்டங் கள் இருப்பதனால், இந்த திட்டங்கள் கடந்த 8அல்லது 10வருடங்களாகக் கொடு -த்த சீரான வளர்ச்சியைப் பொறுத்து (Historical returns) தேர்ந்தெடுக்கக்கூடிய சாத்தி யக் கூறும் வருடாவருடம் ஒருவித நிபந்த னையுமின்றி திட்டங்களை மாற்றக்கூடிய வசதிகளும் உண்டு.

## 4. முதியவர்களுக்கு

முதியவர்களைப் பொறுத்தவரை, இந்த காப்புறுதித்திட்டம் வருடாவருடம் அதிகரித்-துக்கொண்டு போகும் திட்டமாக மாதாந்த கட்டுப் பணம் மாறாத திட்டமாக எடுப்பது சாலவும் சிறந்தது. காரணம், இவர்களது வயது அதிகரிக்க, அதிகரிக்க விலைவாசிக் குத் தக்கபடி மனுச்செய்த காப்புறுதித் தொகையும் அதிகரிக்கும். இந்தக் கட்டுப் பணத்தை இவர்களும் கட்டலாம். (அரசாங்க சலுகையான Welfare அல்லது Old Age Benefit தவிர) அல்லது இவர்கள் சார்பாக பிள்ளைகளோ பேரப்பிள்ளைகளோ கட்ட லாம். (பகுதிநேர, முழுநேரவேலை பார்ப்பவர் களாக 18வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.) அத்துடன், மரணம், ஊனம் என்பது வயதினைப் பொறுத்து நிர்ணயிக் கும் காரணியல்ல என்ற காரணத்தால், காப்புறுதி செய்யப்பட்ட முதியவர் மரணம-டையும் முன்னர், இவருக்காகப் பணம் கட்டும் தமக்கு திடீர் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் தறுவாயில் தமது வயது 60 அல்லது 65 வயதுவரை (நிறுவனங் களைப் பொறுத்து) இந்த வயோதிபரின் கட்டுப்பணத்தை நிறுவனமே கட்டுவதற்கான ஒழுங்கையும் ஆரம்பத்திலேயே செய்ய லாம். இதனையே ஆங்கிலத்தில் Automatic payment benefit on death or Disability of payor என அழைக்கிறோம். இந்த ஏற்பாட்-டை எல்லா நிறுவனங்களும் செய்வதில்லை என்றபடியால், தீர விசாரித்துச் செய்வது உங்களுக்கும் உங்களைச் சார்ந்தோருக் கும் மன ஆறுதல் திட்டத்தைக் கொடுக்கும் திட்டமாக அமையும். உதாரணமாக. 100 டொலர் உங்களது ஆரம்ப மாதாந்த கட்டுப் பணமாக இருப்பின், மேற்கண்ட ஏற்பாட் டைச் செய்யும்போது, நிறுவனம் உங்கள் சார்பாக கட்டவேண்டிய மாதாந்தக் கட்டுப் பணம் 200 டொலராக விண்ணப்பிக்கலாம். இப்படியான ஒழுங்கைச்செய்வதனால் திடீர் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் தறுவாயில் நிறுவனத்தால் கட்டப்படும் மேலதி கத் தொகையான 100 டொலர் (200 - 100) சேமிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு, சேமிப்பு வளர வளர அந்த வளர்ச்சி வீதத்திற்கு ஏற்ப மனுச்செய்த காப்புறுதித் தொகையும் வளர்ச்சியடையும் என்பது உறுதி.

அண்மையில் மருத்துவரீதியின்றி மாதாந்த கட்டுப்பணம் மாறாமல் வருடாவருடம் அதி-கரிக்கும் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்கள். இந்த வளர்ச்சி வருடா வருடம் 3 வீதத்தினால் அதிகரிக்கப்படும். சாதாரண மரணம் ஏற்படின் அந்த சமயம் உள்ள புதிய காப்புறுதித் தொகை வாரிசு காரரை வருமானவரியின்றிச் சென்றடையும். அகால மரணமாயின் இந்த புதிய தொகை யுடன் ஆரம்பத்தில் மனுச்செய்த தொகை ஆகிய இரண்டும் வருமானவரியின்றி வாரிசு தாரரைச் சென்றடையும். இந்த அகால மரணம் பொதுமக்கள் பிரயாணம் செய்யும் வாகனமான (Public carrier) ஆகாய விமானம், வாடகை வண்டி, புகையிரதம், பஸ்வண்டி ஆகியவற்றின் மூலம் ஏற்படின், ஆரம்பத்தில் மனுச்செய்த தொகையுடன் இரட்டிப்பான பணமும் புதிய காப்புறுதித் தொகையும் வருமானவரியின்றி வாரிசுதார-ரைச் சென்றடையும். உதாரணமாக ஆரம்ப விண்ணப்பத் தொகை 30,000 டொலர்களாக வும், மூன்று வருட முடிவில் புதிய காப்புறு தித் தொகை $ 32,700 ஆகவும் இருப்பின் இச்சந்தர்ப்பத்தில் வாரிசுதாரருக்குக் கிடைக் கும் தொகை $ 92,000 (2x30,000+32,000) ஆக இருக்கும்.

இந்தத் திட்டம் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ள திட்டம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு சிறிய இடைவேளைக்குப்பின் விரைவில் மீண்டும் பத்திரிகைவாயிலாக தொடர்பு கொள்வேன்.

■ ■ ■




# காசுமேலே காசுவரும் நேரமிது.



பெரி
முத்துராமன்
- நிதித்துறை ஆலோசகர் -



பங்குச் சந்தை சரிந்துகொண்டேயிருக்கின்றது. பணத்தின் மதிப்பு கூடுவதற்குப் பதிலாகக் குறைந்துகொண்டல்லவா வருகின்றது என்று பலர் கவலைப்படுகின்றனர். தினசரி வாங்கிவிற்கும் சந்தை வணிகர்களுக்கு யோசனைகள் கூறுவது இக்கட்டுரைத் தொடரின் நோக்கமல்ல. ஆனால், அதே சமயத்தில், தொலைநோக்கில், நீண்ட காலத்திற்கு என, குறிப்பாக ஓய்வுகாலம், பிள்ளைகள் படிப்பு என சேமிக்க விளைவோருக்கு பயனுள்ள முதலீடுகள் பற்றிய செய்திகளைக் கூறுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

பங்குச் சந்தை என்பது எப்போதுமே ஏறிக் கொண்டிருக்காது. சிலசமயம் ஏறும் சிலசமயம் இறங்கும். கடந்த பத்து வருடங்களை எடுத்துக்கொள்வோம். தற்சமயம் அமெரிக்க வீட்டுக் கடன்களினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பங்குச் சந்தையில் அடிக்கடி வீழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவாரம் விலை விரல் அளவு ஏறினால் மறுவாரம் கையளவு விலை கீழே இறங்குகின்றது. கவலை, பயம், பீதி, இதெல்லாம் காரணங்கள். ஆனால், இது நிரந்தரமானதா? இல்லை, 2001 செப்ரெம்பரில் அமெரிக்கா பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு ஆளானபோது, விலைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. சில காலத்திற்குப் பிறகு சந்தை ஏறுமுகமானது. திரும்ப 2002ல் என்ரான் (Enron), வேர்ல்ட் காம் போன்ற கம்பனிகளின் அதிருப்தியான நிலைமையால் சந்தையில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டது. சில காலத்துக்குப் பின், சந்தை பழைய நிலைமைக்குத் திரும்பியது. 2003இல் ஈராக் யுத்தம், மீண்டும் விலைச் சரிவு. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். சரித்திரம் திரும்புகின்றது என்பார்கள். அது பங்குச் சந்தையைப் பொறுத்தவரை மிகவும் உண்மை.

இவ்வாறு தள்ளாடும் பங்குச் சந்தையில் எவ்வாறு பணத்தைப் போடுவது? எவ்வாறு லாபம் அடைவது? நிலைமை இவ்வாறு மோசமடையும் சந்தர்ப்பங்களில், பலர் பயத்தின் காரணமாக பங்குச் சந்தையை விட்டு வெளியேறுகின்றனர். பயம் தற்காலிக நட்டத்தை நிரந்தர நட்டமாக்கச் செய்யக் கூடியது. இன்னும் சிலரோ நட்டத்தில் எல்லா வறையும் விற்றுவிட்டு, திரும்ப விலைகள் ஏறுமுகமாய் இருக்கையில் கூடப் பணம் போட்டு பங்குகளை வாங்குவர். இன்னும் சிலரோ இந்த பங்குச் சந்தையே வேண்டாம் என்று பாதுகாப்பான முதலீடுகளை நிரந்தரமாக அணுகுகின்றனர்.

வியாபாரத்தைப் போன்று முதலீட்டிலும் ஏற்ற இறக்கம் இயல்பானது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படிப் புரியவில்லையானால் அதில் இறங்கக்கூடாது. 'றிஸ்க்' நிச்சயம் உள்ளது. 'றிஸ்க்' எடுக்கவில்லை என்றால் ஏறும் விலைவாசியில் உங்கள் 'அசலின்' உண்மையான மதிப்பு (விலைவாசி ஏற்றத்தால்) (Inflation)குறைய வாய்ப்பு உள்ளது. அதைத் தடுப்பதற்காகக்கூட சில பல சமயங்களில் திட்டமிட்ட 'றிஸ்க்' எடுப்பதும் அவசியமாகின்றது. நீண்ட காலத்திற்கு என பங்குச் சந்தையில் முதலீடு செய்யும்போது கிடைக்கும் வருவாய் அல்லது லாபம் வங்கி வைப்புக்களை விட அதிகமாகவே இருந்துவந்துள்ளது.

பலபேருக்கு பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்களைக் கவனிக்க நேரமில்லாமல் இருக்கலாம். புரியாமலும் இருக்கலாம். அத்தகையோர் தகுந்த நிதி ஆலோசகரின் உதவியுடன் மியூச்சுவல் பண்டுகளில் முதலீடுசெய்வது தொலைநோக்கில் பயன் தரலாம். ஏற்றமோ இறக்கமோ மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை இவ்வாறு முதலீடுசெய்யலாம். விலை ஏற்ற இறக்கங்கள் இத்தகைய அணுகுமுறையால் சராசரியாக்கப்பட்டுவிடும். இதை ஆங்கிலத்தில் Dollar cost averaging என்பார்கள். அதற்கும் முன்னதாக முதலீடு செய்வதில் நம்முடைய நோக்கம் அல்லது குறிக்கோள் என்ன என்பது தெளிவாக இருக்கவேண்டும். Diversification என்று சொல்லப்படும் எல்லா வற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் முதலீடு செய்யும் யுக்தியையும் கடைப்பிடிக்க வேண்டும். வங்கி வைப்புகளில் எவ்வளவு? பங்குச் சந்தையில் எவ்வளவு? அரசு கடன் பத்திரங்களில் எவ்வளவு? வங்கி சேமிப்புக் கணக்கில் எவ்வளவு? என்று ஒவ்வொன்றிலும் திட்டமிட்டு முதலீடுசெய்யவேண்டும். ஒவ்வொன்றிலும் எவ்வளவு என்பது அவரவரின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும்.

சென்ற மாதம் குறிப்பிட்டதைப் போன்று, மாதந்தோறும் நூறு டொலர்களை ஒருவர் மியூச்சுவல் பண்டில் சுமார் முப்பது வருடங்களுக்குப் போட்டு வருகிறார் என்றால் இவருக்கு முப்பது வருட முடிவில் எவ்வளவு தொகை உத்தேசமாகக் கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்? 30 வருடங்களில் இவர் கட்டிய அசல் தொகை 36,000 டொலர்கள். இவருக்கு மியூச்சுவல் பண்டில் ஏறத்தாழ 1,56,704 டொலர்கள் கிடைக்கும். ஆமாம் - ஏறத்தாழ ஒன்றரை லட்சம் டொலர்களுக்கு மேல்!

இங்கு நாம் இவருக்குக் கிடைக்கும் வளர்ச்சியை 7.5 சதவீதமாக எடுத்துக்கொண்டோம். நடைமுறையில் இதைவிட கூடவும் கிடைக்கலாம். சற்றே குறையவும் கிடைக்கலாம். உறுதிசெய்யப்பட்ட வங்கி வைப்புகளில் 4 சதவீதத்தில் நூறு டொலரை 30 வருடத்துக்குக் குறையாமல் சேமித்து வந்தால் என்ன கிடைக்கும்? சுமார் 85 ஆயிரம் டொலர்கள் மட்டுமே!

### மேலும் இதில் கவனிக்க வேண்டியவை:

சந்தை ஏற்றமோ, இறக்கமோ முதலீட்டாளரை இங்கு பெரிதாகப் பாதிப்பதில்லை. மேலும் சிறு துளிகள் பெரு வெள்ளமாகின்றது. இல்லையா?

வாழ்வின் வளர்ச்சிக்கு, நல்ல நிதி ஆலோசகர் ஒருவரின் நட்பும் சேவையும் நிச்சயம் தேவையானவற்றில் ஒன்று என்று நான் சொல்லவும் வேண்டுமா?

■ ■ ■

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசகர்
நிதித்துறை ஆலோசனைகளுடன்
கூடிய சேவை

Scotiabank™

Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Financial Advisor

Direct Line: 416.439-3040 x:2010

VJ'S
RENOVATION &
CARPET CLEANING




• HARDWOOD FLOORING
• PLUMBING
• BASEMENT WORKS
• ELECTRICAL WIRING
• CARPET CLEANING (RESIDENTIAL/COMMERCIAL)
• TOTAL RENOVATION

CONTACT: VJ. KUMAR

647.588.2880

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும் எலி. பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416 • 291 • 3997




PAID

DEC. 31.2007 திகதிக்கு முன் வீடு, வியாபார நிலையம் வாங்குபவர்கட்கு சட்டத்தரணிக்கான FEE இலவசம்.

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/ Future Reality Inc.,** *Brokerage*
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com

# 416-399-8093

நட்பான சேவைக்கும்
உங்கள் மனம் நிறைய
வீடு, வியாபார நிலையம்
வாங்க, விற்க...





**Mccowan / Steeles**
2+1 Bedrooms
2 Full washrooms
Close to shopping, bank, schools & TTC




**Kipling / Steeles**
2+1 Bedrooms
2 Full washrooms
Close to shopping, bank, schools & TTC
Laminate floor & new paint




**Williams Pkwy/Vodden**
4 Bedrooms, 4 Washrooms
Finished Basement
Apx Sqft : 2300




**Brimley / Highglen**
3 Bedrooms, 3 washrooms
Freshly painted
New Laminated
Close to school




**Markham / Buroak**
4 Bedrooms, 3 washrooms
Apx Sqft: 2000-2500
Walk to go station & shopping
Built by Senator Homes




**Finch/Staines**
4+2 Bedrooms, 3 washrooms
Sep. Entrance, 9 ft Celling
ork stairs Apx Sqft: 2000-2500
Close to shopping,
schools & TTC

**Restaurant for Sale**
New Market
Long lease, Short hours, LLBO

**Cafe for Sale**
Markham
Surrounded by offices
5.5 days open

**Restaurant for Sale**
401 / Meadowvale
6 days open
LLBO, No competition
Surround by appatments



**PIRABAA NALLATHAMBY**
*Sales Representative*
**(BABU)**

# கடுமையான மலக்குடல் நோய்! விசித்திரமான மாற்றுச் சிகிச்சை!!

**Clostridium Difficile(C.Difficile) என்னும் பக்ரீறியாவினால் ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத வயிற்ரேட்ட நோய்க்கு ஒரு புதிய விசித்திரமான சிகிச்சை!**

குடலில் ஏற்படும் ஒரு வகையான பக்ரீறியா (C.Difficile)க்களினால் ஏற்படுத்தும் மிகவும் கடுமையான நோய் இதுவாகும்.

சிறு காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்றுவலி என்ற நிலையில் தொடங்கி, இது கடுமையான நிலைக்கு - அதாவது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வயிற்றோட்டத்தினை உருவாக்கும். ஒரு நாளுக்கு குறைந்தது பத்துத் தடவைக்கு மேல் மலம் கழிக்க வேண்டிய கொடுமையை எதிர்கொள்ள வேண்டிவரும்.

அனேகமாக வைத்தியசாலைகள், மருத்துவ விடுதிகள் போன்ற இடங்களில் இருந்து இக் கிருமி தொற்றிக்கொள்ளுவதாக வைத்தியநிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் சுமார் 20,000 பேர் இந்நோய்க்கு உள்ளாகின்றனர் என்றும், 2003 இல் கியூபெக் மாகாணத்தில் இந்நோயினால் சுமார் 2,000 பேர் மரணத்தினைத் தழுவியிருந்தார்கள் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நோய்க்கு மருந்தாக ஆரம்ப காலங்களில் அன்ரிபயோற்றிக் (Anti/Biotic) மருந்தினை டாக்டர்கள் வழங்குகினார்கள். ஆனால் இது வயிற்றோட்டத்தினை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்தது. இம்மருந்து சில நோயாளிகளை ஒரு நாளுக்கு நாற்பது தடவை மலசலக் கூடத்தினை நோக்கி ஓட வேண்டிய நிலைமைக்கு உருவாக்கியது என கல்கரி நகரில் இருந்து வெளிவரும் மருத்துவ சஞ்சிகை ஒன்று தெரிவித்திருந்தது.

சாதாரணமான மனிதர்களின் குடலில் நன்மை விளைவிற்கும் பற்றீரியாக்கள் கோடிக்கணக்கில் இருந்து சமிபாட்டிற்கு பெரும் உதவி வகிக்கின்றன. ஆனால் C.Difficile என்ற தீமை விளைவிக்கும் பற்றீரியா மேற்படி நன்மை விளைவிக்கும் பற்றீரியாவை குடலில் இருந்து அறவே அகற்றி விடுகின்றது. இதனால் ஏற்படும் குடல் அலர்ச்சி மூலம் கட்டுப்படுத்த முடியாத வயிற்றேட்ட நிலை ஆரம்பமாகிறது.

ஆனால், குணப்படுத்த முடியாத இந்நோய்க்கு ஒரு புதிய விசித்திர சிகிச்சை முறை மூலம் சுமார் 1,000 நோயாளிகள் பூரண குணமடையச் செய்ததாகத் தெரியவந்துள்ளது.



றஞ்சன் பிரான்சிஸ்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### அது எப்படித் தெரியுமா?

ஆரோக்கியமான ஒருவரின் மலத்தினை எடுத்து, அது ஆரோக்கியமானது என்பதனை மருத்துவ நுண்பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனைசெய்து, அதனை சற்று திரவ நிலைக்கு மாற்றி நோயாளியின் குத வாயில் வழியாக குடலின் உள்ளே செலுத்துவதன் மூலம் இன் நோயாளியின் குடலில் நன்மை செய்யும் பற்றீரியாக்களை மீண்டும் பரவச் செய்கின்றனர். மூலம் இன் நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொன்டுவர முடிகின்றது.

இக்கொடிய நோயிலிருந்து பாதுகாக்கும் சிகிச்சை இப்போது மருத்துவ உலகில் பெரிய வெற்றியாகக் கணிக்கப் படுகின்றது! இதனை முதலில் ஸ்காண்டிநேவியன் நாடுகளில் (நோர்வே, சுவிடன், பின்லாந்து) பரிசோதனை செய்து வெற்றிகண்டு, தற்போது கனடாவிலும், அமெரிக்காவிலும் இச்சிகிச்சையில் வெற்றிகாணும் நிலைக்கு வந்துள்ளனர்.


கனடாவில் கல்கேரி நகர வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியநிபுணர் டாக்டர் ரொம் லூயி (Dr. Tom Louie) ஏராளமான நோயாளிகளுக்கு இச்சிகிச்சையினைச் செய்து, முற்றாகக் குணமடையும் நிலைக்குக் கொண்டுவந்து வெற்றிகண்டுள்ளார். எனினும், நோயாளியின் குடும்பத்தில் ஆரோக்கியமான நிலையில் இருக்கும் ஒருவர் தமது மலத்தினைச் சேகரித்து நன் கொடை செய்யும் நிலைமைக்கு தயாராக இருத்தல் வேண்டும்.

இந்நோயினால் கடந்த பதினான்கு மாதங்களாகப் பாதிக்கப்பட்டு, இச்சிகிச்சையில் வெற்றிகண்ட ரொரன்ரோவைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்கு, மலம் தானமாக உதவிசெய்த அவரது சகோதரி இச்சிகிச்சை பற்றி மருத்துவ சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் பின்வருமாறு கூறியுள்ளார்:

''தாங்கமுடியாத இந்நோயால் பாதிக்கப்பட்ட எனது சகோதரிக்கு மலம் கொடுத்து உதவ நான் முன்வந்தேன். ஐஸ்கிறீம் பெட்டியில் எனது மலத்தினை எடுத்து, ஐந்து நாட்களாக குளிர் சாதனப் பெட்டியில் சேகரித்து வைத்து, இவற்றினை எடுத்துக்கொண்டு, ரொரன்ரோவில் இருந்து கல்கேரி வைத்தியசாலைக்கு விமானத்தில் பயணம்செய்தேன். இதனை எடுத்துக்கொண்டு விமானத்தில் பொதிகளுடன் பொதியாகக் கொண்டு செல்வது சிரமமாக இருந்தது. கல்கேரி வைத்தியசாலையில் இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்த எனது சகோதரிக்கு மலக் குதம் வழியாக எனது மலத்தினை உட்புகுத்தினர். சிகிச்சையில் வெற்றியும் கண்டனர்.''

ஆனால் இது கொஞ்சம் சிரமமான சிகிச்சையாக இருந்தாலும் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகக் குறிப்பிட்டார். கனடாவில் சில வைத்தியசாலைகளில் சில மருத்துவர்கள் மட்டும் நோயாளி, மலம் நன்கொடை வழங்குபவர் ஆகியோர் ஒத்தாசை வழங்கினால் சிறப்பாகச் செய்துமுடிக்கிறார்கள்.
மரணத்தை உருவாக்கும் இக்கொடிய நோயிலிருந்து மனிதகுலம் விடுதலைபெறுவதற்கு வைத்தியர்கள் அல்லும் பகலும் பல கோணங்களிலும் இருந்து சிந்திக்கிறார்கள் என்பதற்கு இம் முயற்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

■ ■ ■




*C. difficile* vegetative cells produce toxins A and B and hydrolytic enzymes (1). Local production of toxins A and B leads to production of tumour necrosis factor-alpha and proinflammatory interleukins, increased vascular permeability, neutrophil and monocyte recruitment (2), opening of epithelial cell junctions (3) and epithelial cell apoptosis (4). Local production of hydrolytic enzymes leads to connective tissue degradation, leading to colitis, pseudomembrane formation (5) and watery diarrhea.

# வீடு வாங்கும்போது கவனிக்க வேண்டிய மேலதிக செலவுகள்



அகிலா செந்தில்
- அடமானக் கடன் முகவர் -

வீடு வாங்க, மற்றும் ஈட்டுக் கடன் எடுக்க இருக்கும் தாய் வீடு வாசகர்களுடன் சில விடையங்களை பகிர்ந்து கொள்ளவேண்டிய தேவை எனக்கு இருப்பதாகவே நான் உணர்கின்றேன். என்னிடத்தில் உங்களில் சிலரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளை யும், உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ள நினைத்தவற்றில் சிலவற்றையும் கேள்வி பதில் வடிவத்தில் தருகின்றேன்.

**ஒரு வாடிக்கையாளருக்கு ஈட்டுத்தரகர் (Mortgage broker) ஏன் தேவை?**

- வங்கியும் ஏனைய கடன் வழங்குவோரும், எந்தவகையான உற்பத்திகளை வாடிக்கையாளர் பெறுகின்றனர் என்பதை விளங்கிக் கொள்வதற்கு வாடிக்கையாளருக்கு சிறந்த அறிவைக்கொடுத்து அவர்களுடன் நாம் வேலை செய்யுமுகமாகவும் எம்முடன் (தரகர்களுடன்) வேலை செய்யுமுகமாகவும் எம்மை தொழில் ரீதியில் வழிகாட்டுகின்றனர். எனவே வாடிக்கையாளர் ஒருவருக்கு இவ்வாறு வழிகாட்டப்பட்ட ஈட்டுக்கடன் தரகர் அவசியமாகும்..

**வங்குரோத்தை (Bankcruptcy) அறிக்கை செய்பவர் ஈட்டுக்கு (Mortgage) விண்ணப் பிக்கலாமா?**

- ஆம். அவர்களுக்கு பணம் கொடுக்க விரும்பும் தனியார் கடன் வழங்குவோர் (Private lenders) எம்மிடம் இருக்கிறார்கள்.

**நுகர்வோர் கோரிக்கையில் (Consum -er proposal) இருப்பவர்களுக்கு ஈடு வழங்கப்படுமா?**

- ஆம். அவர்களுக்கு பணத்தை கடனாகக் கொடுப்பதற்கு எம்மிடம் தனியார் கடன் வழங்குனர்கள் இருக்கிறார்கள்.

**குறைந்த பாதகமான கடனை (Low Bad Credit) கொண்டிருக்கும் வாடிக் கையாளர்கள் ஈட்டினைப் பெறுவார்களா?**

- ஆம். 1வருட தவணைக்கு (சில நிபந்தனைகள் விதிக்கப்படும்) 5.9% வட்டிவீதம் நாம் பெற்றுக் கொடுக்கலாம்.

**ஓர் சொத்தினை வாங்குவதற்கு இது சரியான நேரமா?**

- ஆம்

**ஓர் வாடகை சொத்திற்காக நாம் ஈட்டினை செய்யலாமா?**

- ஆம். நாம் வாடகைகட்கு 95% வரை செய்கிறோம்.

**நாம் ஏன் 25 வருட தவணைகட்குப் பதிலாக 35 அல்லது 40 வருடங்களைத் தெரிவு செய்ய வேண்டும்? இதன் நன்மைகள் யாவை?**

- கொடுப்பனவு மிகவும் இலகுவானதுடன் செலுத்தக் கூடியதாகவும் இருப்பது (Affordable).
- வருமானத்திற்கு வாடிக்கையாளர் தகுதி பெறலாம்.
- அவர்கள் தமது முதல் அளவை (Principal amount) குறைப்பதற்கு மேலதிக பணத்தை இடலாம்.

**காப்புறுதிக் கட்டணத்தை (Insura-nce Premium) தவிர்ப்பதற்கு எவ்வளவு தொகையை முதலில் செலுத்த (Down Payment) வேண்டும்.**

- கொள்வனவு விலையின் 20%.

**உறுதியான வீதமா (Fixed Rate) அல்லது திறந்த மாறுபடும் வீதமா (Open Variable Rate) ஒரு வாடிக் கையாளருக்கு சிறந்தது?**

- எமது ஈட்டு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு "திறந்த மாறுபடும் வீதமே" சிறந்த வழியாகும் எனக் கூறலாம்.

## உங்கள் வீட்டை வாங்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய மேலதிக செலவுகள்

### பூர்த்தியாக்கும் செலவுகள் (Closing Costs)

உங்கள் வீட்டின் கொள்வனவு விலைக்கு மேலதிகமாக, உங்கள் வீட்டை வாங்குவதுடன் இணைந்த சட்ட, நிர்வாக கட்டணங்களுடன் கொடுக்க வேண்டிய பணம் அனைத்தும் பூர்த்தியாக்கும் செலவுகளுள் அடங்கும். இவை வீட்டின் விற்கும் விலையில் 1.5% - 4% வரையிலானதாக சராசரியாகக் காணப்படும். ஒவ்வொன்றையும் விளங்கிக்கொள்ளல், மிகவும் திருத்தமாக உங்கள் வரவுசெலவைத் திட்டமிடவும், மிகவும் சௌகரியமான வீடு வாங்கும் அனுபவத்திற்கும் உங்களை இட்டுச் செல்லும்.

| கட்டணத்தின் வகை | மாதிரி கட்டண அளவுகள் | கட்டணத்தின் நோக்கம் |
|---|---|---|
| நில பதிவுக் கட்டணம். (சில சமயம் நில பரிமாற்ற வரி (Land Transfer Tax), உறுதி பதிவு வரி(Deed Registration fee), சொத்து வாங்கும் வரி (Property Purchase Tax or Tarrif) என சில சமயம் அழைக்கப்படும்). | கொள்வனவு விலையின் 0%இலிருந்து 4%வரையாகக் காணப்படும். | அநேகமான மாகாணங்களில் நீங்கள் வீட்டை வாங்கும் போது ஒரு தடவை வரியை விதிப்பர். சொத்தின் கொள்வனவு விலையின் வீதத்தினை இந்த வரி அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், மாகாணத்திற்கு மாகாணம் வேறுபடும். தற்போதைய வீதத்தை கண்டறி-வதற்கு உங்கள் சட்டத்தரணி அல்லது நொத்தாரிசுடன் கதையுங்கள். |
| சட்ட/நொத்தாரிசு கட்டணங்கள் | $500-$1000 | உங்கள் நலன்களைப் பாதுகாக்க சொத்தினை ஈடுவைத்தலின் போது ஒரு சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அத்துடன் சட்டத்தரணி அல்லது நொத்தாரிசின் கட்டணங்களையும் கொடுப்பனவுகளையும் செலுத்த வேண்டியவர்களாக இருப்பீர்கள். சட்டத்தரணி/ நொத்தாரிசின் கட்டணங்கள் கொடுக்கல் வாங்கல்களின் சிக்கல்தன்மைக்கேற்ப காணப்படுவதுடன் பரந்தளவில் வேறுபடும். |
| தீ அபாய காப்புறுதி | வீட்டினதும் அதன் உள்ளடக்கங் களின் பெறுமானத்தி ற்கேற்ப வேறுபடும் | உங்களுக்கு ஈட்டுக்கடனை வழங்குபவர், உங்கள் புதிய வீட்டை சட்டரீதியாக உடமையாகக் கொள்ளும் நேரத்தில் சொத்துடமை காப்புறுதி அமுலில் இருக்க வேண்டும் என்று கேட்பார். சில காப்புறுதிக் கம்பனிகள் வீட்டுப்பரிசோதனைக்கான நிரூபணத்தைக் கேட்கலாம் அல்லது சில வகையான வாழிடங்கட்கு காப்புறுதி செய்யாமல் விடலாம். நீங்கள் உங்கள் காப்புறுதி நிறுவனத்தை காலதாமதமில்லாமல் பட்டியலில் சேர்த்துக் கொள்வதை உறுதிப்படுத்துங்கள். |
| வீட்டுப் பரிசோதனை(ஒரு புதிய வீட்டை நீங்கள் வாங்குவீர்களாயின் இது தேவையில்லை) | $200-$500 | மீள் விற்பனை வீட்டை வாங்கம்போது, ஒரு தகுதிவாய்ந்த வீட்டு பரிசோதகரிடமிருந்து சுகாதாரம் பற்றிய களங்கமற்ற ஒரு உறுதித்துண்டினை (Bill) பெற்றுக் கொள்ளும்போது இது ஒரு ஆறுதலான விடயமாகும். வீட்டுப்பரிசோதகர்கள், உங்கள் வீட்டின் அமைப்பு, உட்பகுதியில் இயங்கும் தொகுதிகளின் தன்மை என்பவற்றை மதிப்பிட்டு ஓர் எழுத்துமூலமான அறிக்கை தருவார். ஒரு வீட்டுப் பரிசோதனை கட்டாயமானது அல்ல ஆனால் ஒரு வீட்டை வாங்கும் போது இது மனதிற்கு ஆறுதலைக் கொடுக்கக் கூடியது. |
| இடம்மாறிச் செல்லும் செலவுகள் | ஒரு மணித் தியாலத்திற்கு மாறுபடக் கூடியது | நீங்களே செய்யக்கூடிய வேலையின் அளவிலும் மாறிச்செல்லும் தூரத்தின் அளவிலும் செலவுகள் தங்கியிருக்கும். மாதக்கடைசியிலும் கோடைகாலத்தின்போதும் விலை அதிகமாக இருக்கும் |
| அத்தியாவசிய சேவைகளை பொருத்துதல் (உ-ம்:நீர், தொலைபேசி, இணையம், தொலைக் காட்சி இணைப்புக்கள்) | $100-$500 | ஆரம்ப இணைப்புகள், அத்தியாவசிய சேவைகளை வழங்குனரால் நிர்ணயிக்கப்படும். சேவைகளை வழங்குபவருடன் இதற்கான விரிவான தகவல்களைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள். |

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario


# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



**Life Insurance • Critical Illness Insurance • Creditor Insurance**
**Investment • Disability Insurance • RESP • RRSP**



**Guna Selliah**
**Life Insurance Broker**
**416.371.7776**

digi Media

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

759 Warden Ave., Toronto,
Ontario, M1L 4B5
Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220
E-mail: guna@lilandinsurance.com

Connectiong tutors & students in the GTA

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

**தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.**

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

**Call Kuna Today**
**416-291-4684, 905-507-8470, 647-295-5862**

We will visit your home


Over 100 Tutors

Over 1500 Students

JK to GRADE 8 $80.00/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90.00/MONTH

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajex, Malton, New Market

digi Media - 416-467-4952



PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE...............

**One Stop for**
**TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS**

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள் (PROMOTIONAL PRODUCTS) கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும் சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.


புதிய அறிமுகம்

On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்

PRO MAR
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5





The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL

80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# ஒக்ரோபர் புதிய சாதனை படைக்கிறது.

## (ரொறன்ரோ நவம்பர் 5, 2007)

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



ஒக்ரோபரில் 7,915 தனிக்குடும்ப வீடுகள் விற்பனையானதாக TREB அங்கத்தவர்கள் பதிவு செய்துள்ளனர். இது ஒக்ரோபர் மாதத்துக்கான ஒரு சாதனையாகும் என்று TREB தலைவர் மொறீன் ஓ நீல் இன்று அறிவித்தார். இது 2006 ஒக்ரோபரில் பதிவான 6,876 விற்பனைத் தொகையைவிட 15வீதம் அதிகமாகவும் 2003ம் ஆண்டு ஒக்ரோபரில் விற்பனையான 7227 என்ற எண்ணிக்கையைவிட ஏறக்குறைய 10வீதம் அதிகமுமாகும். இதுவே எமது முந்திய சாதனையாகும்.

'ரொறன்ரோ பெரும்பாகத்தில் வீடுகள் மறுவிற்பனை நடவடிக்கைக்கு மிகச் சிறந்த ஆண்டாக 2007 இருக்கச் சகல அறிகுறிகளும் தென்படுகின்றன" என்று திருமதி ஓ நீல் கூறியுள்ளார். 'ரொறன்ரோ மாநகர நிலமாற்றுவரிப் புதியதிட்டத்தின் தாங்கங்கள் 2008ல் நிச்சயமாக உணரமுடியும். வீடு வாங்கி விற்றலை ஒரு நீண்டகால முதலீடாக மக்கள் தொடர்ந்தும் பார்ப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம்' என்றும் அவர் கூறினார்.

செப்ரம்பரின் டொலர் 380,132 விலையைவிட ஒக்ரோபரின் சராசரி விலையான டொலர் 394,646 நான்கு வீதம் உயர்ந்துள்ளது. இது 2006 ஒக்ரோபரின் பதிவான டொலர் 356,423 தொகையைவிட 11வீதம் அதிகமாகும்.

### 2964 மொத்தவிற்பனை விபரம்:

| எண்ணிக்கை | மாவட்டம் | சராசரி | விற்பனை |
|---|---|---|---|
| 28 | மேற்கு மாவட்டங்கள் | $367, 139 | 2,964 |
| 14 | மத்திய மாவட்டங்கள் | $522, 800 | 1,602 |
| 23 | வட மாவட்டங்கள் | $415, 071 | 1,555 |
| 21 | கிழக்கு மாவட்டங்கள் | $307, 950 | 1,794 |

### அயல் வட்டாரச் சதுக்கம் (ஏஜின் கோர்ட்)

ஏஜின் கோர்ட்டுக்குள் (E05, E04 பகுதிகள்) பெரும்பாலான மறுவிற்பனை வீடுகளின் மாதிரித் தனி அல்லது பகுதித்தனி வீடுகளாகும்.

இவ்வருடம் இதுவரை தனிவீடு விற்பனைவிலை சராசரி டொலர் 376,337 ஐவிட ஒரு வீதம் அதிகமாகும். மேலும் 2006ம் ஆண்டு முதல் பத்து மாதத்தில் பதிவான டொலர் 295,800 விலையைவிட ஆறுவீதம் அதிகமாகும்.

| வசிக்கும் வீட்டின் மாதிரி | விற்பனை | % | மீடியன் |
|---|---|---|---|
| 1. Detached | 3,731 | 98 | $407,000 |
| 2. Semi Detached | 973 | 100 | $332,000 |
| 3. Condo Town house | 677 | 98 | $251,000 |
| 4. Condo Apt. | 1,808 | 99 | $237,000 |
| 5. Link | 143 | 98 | $307,000 |
| 6. Alt. Row Townhouse | 535 | 99 | $312,500 |
| 7. Co-Op Apt. | 38 | 97 | $170,500 |
| 8. Det. Condo | 10 | 96 | $237,750 |

### வர்த்தக நிலவரம் (ஒக்ரோபர் 2007)

ஒக்ரோபரில் 800,000க்கு மேல் - குத்தகைக்கு விடப்பட்டது.

'ரொறன்ரோ MLS முறையில் 821,889 சதுர அடிக்கு நிலம் ஒக்ரோபர் குத்தகைக்கு விடப்பட்டதாக TREB அங்கத்தவர்கள் அறிவித்துள்ளனர்.' இந்த ஆரோக்கியமான பெறுபேறுக்கு ஒரு முக்கிய காரணம் நியூமார்க்கட் INC பிரதேசத்தில் 105,110 சதுர அடிக் கட்டிடம் குத்தகையாகும்.' 'ICPI றியல் றேர்ஸ் போன்ற நிறுவனங்கள் MLS முறையில் பட்டியலிடுவதன் சாதகமான விடயங்களை கண்டுகொண்டதே' இதேபோல மேலும் பெரிய சொத்துக்கள் MLS முறையில் தோன்றுவதை நீங்கள் காண்பீர்கள்." என்று கூறினார் வர்த்தக சபைத் தலைவர் காரி லான்டர்.

ஒக்ரோபரில் விலைகள் மேல் நோக்கி போகமுயன்றது, அதற்கு தொழில் இடம் (சகல அளவுப் பிரிவுகளும்) செப்டம்பரில் சற்று உயர்ந்து ஒரு sfn டொலர் 5.83 ஆக இருந்ததே காரணம். ஆனால் வர்த்தக இடம் முந்திய மாதம் இருந்த டொலர் 12.52ஐ விட 12வீதம் உயர்ந்து டொலர் 14.04sfn ஆக இருந்தது.


### விற்பனைச் சந்தையின் முக்கியம்

ரொறன்ரோ MLS முறை 60க்கு மேற்பட்ட தொழில் வர்த்தக சொத்துக்களைக் கண்டது. இவற்றுள் 34 வர்த்தக இடங்கள் (சகல அளவுப் பிரிவுகளும்) இவை சராசரி டொலர் 105.73 ஒரு சதுர அடியாக இருந்தது.
MLS முறையில் இல்லாத இடங்கள் டொலர் 77.95 ஒரு சதுர அடியாக இருந்தது.

■ ■ ■

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர். வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!
416-400-6406

உங்கள் மனைகள் மாளிகையாக அமைந்திட




Century 21
Affiliate Realty Inc. Brokerage.
416-290-1200
80 Corporate Drive
Suite 208, Toronto

சத்தி மருதப்பா
SATHHI MARUTHAPPAH
Direct: 416-816-1500
LOWEST COMMISSION FREE MARKET EVALUATION



Weston / Sheppard
Condo Apt
Bedrooms 2 ,Washroom 2
Law Maintenance
$168,000



TORONTO
Condo Apt.
Sheppard. Kennedy
Bedrooms 3,Washroom 2
$149,900



MARKHAM
Semi Detached 2 Story
Kennedy / Castlemore
Bedrooms 4 ,Washroom 4
$489,900




VAUGHAN
Keele / Major Mac
Semi Detached 2 Story
Bedrooms 3+1 ,Washroom 4
$345,000


Gas Stations
(Petro Canada, Shell, Esso, Sunoco)
Convenience Stores also Available)



Markham
McCowan & 14th Ave.
New, 2 Story
Bedroom 4 Washroom 3
$389,000




VAUGHAN
Weston / Rutherford
Detached 2 Story
Bedrooms 4 ,Washroom 3
$486,500



BRAND NEW CONDOS IN
Scarborough, Downtown
Closeing IN 2010

# முதலாவது வீட்டில் முதன்மை பெறும் நன்மைகள்

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



## வீட்டு உரிமையாளராக இருப்பதால் ஏற்படும் நன்மைகள்

முதல் தடவை வீடு வாங்க இருப்போருக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கும். வீட்டுச் சொந்தக்காரராகினால் வரும் நன்மைகளை ஆராய்வோம். இருந்தாலும் நாம் கீழே கொடுக்கும் சில காரணங்கள் நாம் வீட்டை வாங்குவதற்கான முடிவை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

எமது முதலாவது வீடு ஒரு Condo, Adup-lextlat, a town house அல்லது ஒரு single family வீடாகவும் இருக்கலாம். என்ன வகையான வீடாக இருந்தாலும், நாம் ஒரு வீட்டை வாங்கிய பின்பு, மோட்கேஜை செலுத்துவதாலும், வீட்டின் விலை அதிகரிப்பதாலும் நீங்கள் Equityஐ அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கும். Equity அதிகரிப்பது உங்களுக்கு நிச்சயமாக ஒரு Financial security ஒன்றைத் தேடித்தர வாய்ப்புக்கள் உண்டு. ஆதலால் நீங்கள் மோட்கேஜ் இற்காகச் செலுத்தும் பணம் உங்களது எதிர்காலத்திற்குப் பயன்படும். ஆனால், ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அதற்கு வாடகையைச் செலுத்திக்கொண்டு இருப்பது கடைசியில் எமக்கு ஒன்றும் சேமிப்பாகத் திரும்பி வரமாட்டாது. அத்துடன் நீங்கள் செலுத்தும் பணம் தொடர்ந்தும் ஒரே தொகையாக இருக்கமாட்டாது. ஆனால் நீங்கள் வீட்டை வாங்கி மோட்கேஜைப் பெற்றுக்கொண்டால், அதற்குச் செலுத்தும் பணத்தின் தொகை குறிப்பிட்ட காலத்திற்கு மாறாது இருப்பதோடு, உங்களது கடனின் தொகை அடுத்த தடவை புதுப்பிக்கும்போது குறைந்தும் இருக்கும்.

அதே நேரத்தில் உங்களது சொந்த வீடாக இருந்தால் அதை வாடகைக்கு விட்டோ அல்லது வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டோ வீட்டு உரிமையாளராகிய நீங்கள் ஒடரு மேலதிக வருமானத்தைப் பெற ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

அடுத்ததாக, வீட்டுச் சொந்தக்காரராக இருக்கும்போது உங்களுக்குப் பணத் தேவை ஏற்படுமாயின், நீங்கள் வாங்கிய வீட்டில் அதிகரித்துள்ள equity யை வைத்துக் குறைந்த வட்டிக்குப் பணத்தை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். வீடு இல்லாவிடின் கடன் தேவை ஏற்படும்போது அதிகளவு வட்டியைச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

அத்தோடு அல்லாமல், சொந்தவீட்டு உரிமையாளராக இருப்பது ஒரு திருப்தியைக் கொடுப்பதோடு, எமக்கு மனதில் ஒரு பெருமையையும் கொடுக்கும்.

அடுத்ததாக, நாம் வாங்கிய வீட்டை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கலாம் எனப் பார்ப்போம்.

வாங்கிய வீட்டைத் திருத்தியமைக்கும் போதோ அல்லது பெரிதாக அமைப்பதாக இருந்தாலோ, அதைக் கட்டும்போதோ அல்லது கட்டியபின்போ அந்த வீட்டைப் பாதுகாப்பு விதிகளைக் கவனித்துக் கட்டுவதால் தொடர்ந்தும் நாம் ஒரு பாதுகாப்பான ஒரு வீட்டில் வசிப்பதற்கு உதவியாக இருக்கும்.

### Fire safety:

வீட்டின் கதவுகளோ அல்லது குளோசெற்-றின் கதவுகளோ இலகுவாக உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ திறந்து பூட்டுவதாக இருத்தல் அவசியமாகும். வீட்டில் உள்ள திரைகள், எந்த ஒரு விளக்கின் அருகிலும் இருத்தலாகாது. சில துணிகள் இலகுவாக தீப்பற்றிக்கொள்ளும். அத்தோடு வீட்டில் உள்ள கதவுகளில் இடைவெளி கீழ்ப் பகுதியில் என்றாலும் இருந்தால் ஏதாவது புகை வந்தாலும் நாம் அதைத் தெரிந்துகொண்டு பாதுகாப்புக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு உதவியாக இருக்கும்.

அத்தோடு Heating safety; Electrical safety அத்துடன் மேலும் பாதுகாப்புத் தேவைகளைச் சரியாக அறிந்து அவற்றைச் செய்வதற்குத் தகுதியானவர்களை நாடுதல் முக்கியமானது.

வீட்டைப் பாதுகாப்பாகப் பராமரிப்பது மட்டுமல்லாமல் உங்களது வீட்டின் வெளிப்பகுதியைச் சரியாகப் பராமரிப்பதும் வீட்டின் பெறுமதியைப் பாதுகாப்பதற்கு உதவியாக இருக்கும்.

- வீட்டில் புற்களை வெட்டி அழகாக வைத்திருத்தல் வேண்டும்.
- சிறிய மரங்கள் இருந்தால் அவற்றை ஒரே அளவில் வெட்டித் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும்.
- புதிய பூமரங்களை வளர்ப்பது வீட்டிற்கு கூடிய அழகைக் கொடுக்கும்.
- தோட்ட வேலைக்கு உபயோகப்படுத்தும் உபகரணங்களை அதற்குரிய இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
- கராஜ் கதவுகள், வீட்டின் வாசல் கதவுகள், யன்னல்களை நிறந்தீட்டி வைத்துக் கொள்ளல் வேண்டும்.
- வேலிகளைத் திருத்தி அழகாக வைத்திருக்க வேண்டும்.
- வீட்டின் கூரையில் ஏதாவது திருத்த வேலைகள் இருந்தால் திருத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.
- வீட்டின் ஓடு பாதைகள், நடைபாதைகளைத் துப்பரவாக வைத்துக்கொள்ளல் வேண்டும்.
- கராஜ், ஷெட் என்பவற்றைத் துப்பரவாக ஒழுங்குபடுத்த வேண்டும்.



- வீட்டின் அழைப்பு மணி, லைற் என்பவை வேலைசெய்யும் நிலையில் இருக்க வேண்டும்.

மேலே கூறிய சில தகவல்கள் உங்களது வீட்டின் பெறுமதியை அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கும்.

ஆகவே, நாம் வீட்டு உரிமையாளராக இருப்பதோடு, பலவகையான பாதுகாப்புகளையும் கவனித்து, அத்துடன் அந்த வீட்டைச் சரியாகப் பராமரிப்பதால் நாம் எமது முதலீட்டைப் பாதுகாப்பதோடு, அதனது பெறுமதியையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

■ ■ ■


வீடு வாங்க விற்க



Sutton

Alen Sivasambu
Sales Representative

Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617



alen@sutton.com




MEGA CARPET & DUCT CLEANING LTD.

உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை

• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents

NATHAN: Dir: 416.893.8363, Tel: 416.286.2416, www.megaduct.com



உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு
அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை
"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"
ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Want to become a Mortgage Consultant?
We provide you free workshops, training and seminars to become a certified Mortgage
BonaFide
Mortgage Solutions
1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: 416.548.7475, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com
• Mortgages
• Re-Finance
• Seminar
• Workshops
www.bmsic.com
one stop solution for all your mortgage needs
digi Media Creation




S.P. IMPORTERS
ஒரே பிளாசாவில் நான்கு தனிப்பெரும் ஸ்தாபனங்கள்
மிகப்பிரமாண்டமான (15,000 சதுர அடி) காட்சியறை கொண்ட தளபாட மாளிகை
கண் கவர் தளபாடங்கள் Solidwood Bedroom set, Solidwood Diningroom Set, Leather Sofa Set, Kids Bedroom sets and more..
அனைத்து வயதினருக்கும் தேவையான மெத்தை வகைகள் (orthopedic, CiroPedic, Poster Pedic mattress andmore..)
$100 OFF
with purchase of $1500 of furniture
416-266-3077
www.spimporters.ca
NO PAYMENT INTEREST for 1 YEAR

# WELCOME TO GTA SQUARE
Middlefield/Finch
Scarborough

## MURUGAN BOOK DEPOT


முருகன் புத்தகசாலை
(416) 285 9118

## AJANTAA

PURE VEGETARIAN
INDIAN RESTAURANT
(416) 269 7331

## FAMILY MEDICAL CENTRE
Dr. ஸ்ரீகரன் சின்னத்துரை / Dr. துஸ்யந்தி ஸ்ரீகரன்
(416) 412 7300

## VALUE PLUS PHARMACY
அனோஜா தேவரஞ்சன் (Pharmacist)
(416) 754 1400

## EXPERT BUILDING INSPECTION LTD.

(905) 940 0811

## GNANAMS STUDIOS
(Branch I)

(416) 750 8118

## UNIQUE FINANCIAL

Business Solutions Inc.
(416) 854 6183

## MJS MONEY TRANSFER

(416) 335 3100

## KRISHNA'S

TAILORING, TEXTILES & GIFTS
(416) 497 6427

## RAPHAEL MAHARAJA

Barristor, Solicitor & Notary Public.
(416) 847 7077

## RVL ELECTRONICS
(416) 265 1208

## MAX 2000

(416) 609 2542

TO BUY/LEASE IN
# GTA SQUARE
HomeLife GTA Realty Inc., Brokerage*
Independently Owned & Operated
(416) 321 6969




$ 320,000.



**Mccowan/ McNicoll**
3 BR, 2 WR. Well Maintained Home. Move-In Condition. Steps To Ttc. Established Area Close To Schools, Shopping And Parks.

$ 154,900.



**Mccowan/Steeles**
Corner Unit.Den Has Window, Can Be A 2nd Bedroom. Wrap Around Windows.Unit Is Above Ground Level.Huge Master BR .Ttc At Door,Minutes To Supermarket,Community Centre,School And Church. Low Maintenace Fee

$ 477,000.



**Weston/ Rutherford**
4+1 BR, 4 WR, Extra Bright. Many Windows, Spacious, Wood And Ceramic Floors Through-Out. Very Wide Irregular Side Yard. Convenient To All Amenities.



**Logan Manikkavasagar**
Associate Broker

Century 21 Percy Fulton Ltd.
**416•298•8200**

**416•708•9903**
www.loganhotproperties.com


**Kalai Logan**
Sales Representative



# THINKING OF BUYING OR SELLING PROPERTY

for professional, reliable and honest service

- **Residential-Commercial-Industrial-Investment**
- **List Your Home (Low Commission)**
- **Mortgage, Lawyer, Home Inspection**



**Manickanadarasa Karunahkaran**
Sales Representative
Dir: 647.272.8597

VEEDU REALTY INC. BROKERAGE

1345 Morningside Ave., Suite: 8, Toronto, ON M1B 5K3, Office: 416.759.6000 fax: 416.759.6005
www.veedu.com



I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, AMP
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*


**Cell: 416.895.4321**
104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை


# UPROPERTIES.COM





***Lakeshore/Bathurst***
2+1 Bedrooms,
3 Washrooms, Completely Custom Finished Condo Left With Selective Materials. Surreal View Of The Entire City & Lake. Heated Floor Throughout. All Light Fixtures, Plumping & Wiring Are Upgraded.




***Markham/Elson***
4 Bedrooms,
3 Washrooms, Excellent Location!!! Minutes To Highways, Shoppings, Restaurant, Close To T.T.C Park,Steps Away From School, New Double Door Entry, Easy To Convert W/O Basement




***Bramalea / Queen***
4 Bedrooms,
3 Washrooms, Spacious 4 Bdrm Semi-Detached Double Door Entry House In A Desirable Neighbourhood. Approx. 2058 Sq Ft. Master Bdrm With 5 Pc Ensuite




***Squre one (Mississauga)***
3+2 Bedrooms,
2 piece: 1 Washrooms, Great Neighbourhood, Convenient Location, Child Safety Cul De Sac Street, Potential Complete In-Law Suite, Closer To All Major Hwys, Malls, Restaurants, Schools In Walking Distance.

UTHAYAN

***UTHAYAN NADARAJAH***
*Broker*

**Cell: .416.727.9945**



ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

# எஸ்.பொ. என்றோர் இலக்கிய ஆளுமை



தேவகாந்தன்

எஸ்.பொ. என்று பரவலாகத் தெரியப்பட்டிருக்கும் திரு.எஸ்.பொன்னுத்துரையின் பவள விழா ஆண்டு இது. பவள விழா மலர் வெளியிடப்பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டில் கடந்த மாதமளவில் விழாவெடுத்துக் கொண்டாடப்பட்டுமிருக்கிறது. நல்லது. கலாநிதி கா. சிவத்தம்பியின் பவள விழாக் கொண்டாட்டங்களினைத் தொடர்ந்து இது வந்தமை சந்தர்ப்பவசமானதுதான். எனினும், இந்தச் சந்தர்ப்பம் ஒரு ஒழுங்கில் அமைந்திருந்தது என்பதுதான் இங்கே விசேஷம்.

இது குறித்து ஓர் அலசலைச் செய்யவேண்டியது முக்கியம், ஆனாலும், எஸ்.பொ.வின் இலக்கியத் தகைமைகளை வரையறை செய்வதற்கான ஒரு பின்புலத்தை அமைப்பதே இவ் உரைக்கட்டின் நோக்கமாக இருக்கும். அதாவது, இது தன்னனுபவம் சார்ந்து வெளியிடப்பெறுவது.

ஆம், சிறிதுகாலமெனினும் எஸ்.பொன்னுத்துரையோடு எனக்கு அத்யந்தமான நட்பு இருந்தது. அதன் பகைப்புலத்திலேயே என் எழுத்தினைத் தொடர்வேன்.

நான் 'இலக்கு' சிற்றிதழை தமிழ்நாட்டில் இருந்தபோது ஆரம்பிக்கிறதுக்கிருந்த சில நாட்களின் முன்னதாகத்தான் 1997 இல் அவுஸ்திரேலியாவிலிருந்து எஸ்.பொ. தமிழகம் வந்தார். அந்த இதழின் நேர்காணல் அவரினதாகவே இருந்தது. அன்றிலிருந்துதான் அவரதும் என்னதும் பழக்கம் தொடங்கியது.

அதுவரை அவரது பழைய வாசகனாக மட்டுமே இருந்த நான், அவரது நட்பு வலயத்துள் வந்தது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. வாசகனாக இருந்தவன் சக எழுத்தாளனாகப் பழக ஆரம்பித்தது எனக்கு மகிழ்ச்சி மட்டுமில்லை, பெருமையாகவும் இருந்தது.

நான் அவரை வாசித்த காலம் சிரமங்களுடானது. ஏனெனில் அவரை வாசிக்க ஆரம்பிக்கிற காலகட்டத்தில் எனக்கு முத்தவர்கள் அவரை விருப்பத்தோடு வாசித்துக் கொண்டிருந்தார்கள். நூலகத்துக்கு வரும் வார மலர்களில் எஸ்.பொ.வின் எழுத்து வந்திருந்தால் இரண்டாவது தகவலாகத்தான் எமக்கு அதுபற்றிய செய்தி கிடைக்கும். 'டேய், இண்டைக்குப் பேப்பரிலை பொன்னுத்துரையின்ரை சிறுகதை வந்திருக்காம்' என்று ஒரு அண்ணன் சொல்லிவிட்டுப் போவான். நாங்கள் விழுந்தடிச்சு கொண்டு வாசிகசாலை போனால் ஏதாவது ஒரு பெரிசு அந்தச் சிறுகதையை அல்லது சிறுகதைப் பக்கத்தை வாசித்துக்கொண்டிருக்கும். அதற்கு முறை வைத்துக் காத்திருந்து அவரது கதையை வாசித்தவன் நான்.

'தீ' நாவலை ஒழித்தொழித்துப் படித்தது இன்றும் ஞாபகமாகவே இருக்கிறது. அது அறுபதுக்கள் என்பதை இப்போது நினைத்துப் பார்க்க மலைப்பாக இருக்கிறது.

எஸ்.பொ.வை விமர்சிக்க முடியும். விமர்சிக்கவும் வேண்டும். ஆனால் அதை ஒரு விமர்சக தளத்திலிருந்து செய்வதைவிட, வாசக தளத்திலிருந்து செய்வதே பொருத்தமாக, இப்போதைக்கேனும், இருக்குமென நம்புகிறேன்.

நான் அவரை வாசிக்க ஆரம்பித்த காலத்தில் பெரும் கலகக்காரரென அவர் பரவலாக அறியப்பட்டிருந்தவர். அது எஸ்.பொ.வுக்கு பிடித்தமான 'சொல்' என்பதையும் நான் அறிவேன். ஆனால் கலகத்திலுள்ள முக்கி-



யமான தன்மை என்னவெனில், அதுவே உண்மையாக இருப்பதில்லை என்பதுதான். அது உண்மையைக் கண்டடைவதற்கான ஒரு உந்துதலை உண்டாக்குமே தவிர, அதுவே உண்மையாக இருப்பதில்லை என்பதுதான் அதிலுள்ள சூட்சுமம். 'கலகம் பிறந்தால் வழி பிறக்கும்' என்று ஊரிலே ஒரு சொலவடை உண்டு. 'நாரதன் கலகம் நன்மையில் முடியும்' என்ற சொலவடை, அது எவ்வளவுதான் ஆசாபூதித்தனமானதாக இருந்தாலும், அதனூடாக மக்களிடையில் வழங்கி வந்த அர்த்தம் ஆய்ந்து பார்க்க வேண்டியது. இவ்வாறிருக்கையில், கலகத்தை உண்மையென்று நம்பியதன் விளைவே, எஸ்.பொ. பின்னாளில் அடையாளம் மறந்தவரானதற்குக் காரணம் என்பது இப்போது புரிகிறது. கலகத்தின் மூலம் உண்மையை அறிவதற்குப் பதிலாக, கலகத்தையே கோஷமாக உச்சாடனப்படுத்தியதன் விளைவு அது. 'நற்போக்கு இலக்கியக் கொள்கை' அவர் அதை நிறுவ முனைந்த காலத்திலேயே உயிரோடு இல்லை என்பது எவ்வளவு துர்லபம்! அது ஒரு வெறும் கலகத்தின் எதார்த்தம்.

அவரது கலகக் குரலுக்கு அடுத்ததாய், அவரது கம்யூனிச எதிர்ப்பு முக்கியமானது. தான் இன்னுமே ஒரு மார்க்சீயன் தான் என அவர் இப்போதும் கூறுகிறார். அதை நாம் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. ஆனால் அவரது கம்யூனிச எதிர்ப்பு கவனம் பெற வேண்டியது. ஒருவகையில் அது கலாநிதிகள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றோருக்கு எதிரானதாக மட்டுமே இருந்ததென்று கொள்ளமுடியும். ஒரு அய்ம்பது வருடங்களாக இரண்டு கலாநிதிகளையும் வைத்து வாங்குவாங்கென்று வெளுத்து வாங்குவதற்கு வேறென்ன காரணமாம்? தாம் போட்ட வட்டத்துக்கு வெளியே பார்க்க மறுத்திருந்தவர்கள்தான் கலாநிதிகளும். ஆனால் இதையே தனக்கான பலமாக எஸ்.பொ. கொண்டது தவறான நிலைகளை அடையவே உதவியிருக்கிறது.

இந்த மனநிலைப்பாட்டிலிருந்து எஸ்.பொ. இன்றுவரை மாறவே இல்லை. மாறாதது மட்டுமில்லை, அவர் வளராதும் இருந்து விட்டார். அவர் கேட்பது தனக்கானதை விடவும் அதிகமாகவே என்றும் இருந்திருக்கிறது. இன்றும்கூட நிலைமை அதுதான். அவரது இலக்கிய வழியைப் பின்பற்றும் ஒரு படைப்பாளிகூட இன்று இல்லாதுபோனது அது காரணமானதாயே இருக்கமுடியும்.

அவரை ஒதுக்கிய கலாநிதிகளுக்கு அல்லது அவர் ஒதுக்கிய கலாநிதிகளுக்கு, அவர்களது ஆய்விலிருந்து சற்று விலகியேனும் வளர்ந்த ஒரு வட்டம் இருக்கிறது. இது எதைச் சொல்கிறது என்பது ஒதுக்கக்கூடிய அம்சமில்லை.

எஸ்.பொ. கை வைக்காத இலக்கியத் துறை இல்லை. நாவல், சிறுகதை, நாடகம், செய்யுள், கட்டுரை என பல்வேறு துறைகளில் கால்வைத்தவர் அவர். ஆனால் இவற்றில் பலவற்றில் அவரில்லையென்பதைக் காலமே காட்டியிருக்கிறது.

இவ்வளவும் ஒருவகையில் அவரது பலஹீனத்தின் பக்கமெனக் கொண்டால், அவரது பலமான பக்கம் அவர் அதிகமும் அக்கறைப்படாத எழுத்துச் சார்ந்ததாகவே இருக்கிறது. அதுதான் சிறுகதைத் துறை. எத்தனை கலாநிதிகள் வந்தாலும் தான் அந்த அடையாளத்தை அவரிடமிருந்து அழித்துவிட முடியாது.

'தீ' நாவல் இன்றைக்கு இல்லை. அது வெளிவந்த காலத்தில் 'எழுத்து' சஞ்சிகையில்கூட வாத-பிரதிவாதங்கள் பெரிதாக நடந்தன. மு.த., பிரமிள் போன்றவர்கள் அதில் பங்கு பெற்றிருந்தார்கள். அது நாவலாக வளரவில்லையென்பதை இத்தனை ஆண்டுகள் கழித்து அண்மையில்தான் நான் புரிந்துகொண்டது. அது நாவலாகவே இருக்கட்டும். ஆனால் தமிழ்ப் பரப்பில் அது நிலைக்கவில்லை என்பதுதானே நிஜம். கு.ப.ராஜகோபாலன் அளவுக்குக்கூட அதில் காம உணர்ச்சி கிடையாது. அதிலுள்ளதெல்லாம் வெறும் பாலின அவதி.

ஆனாலும் ஈழத் தமிழ்ப் பரப்பில் அது ஓரிடம் பெற்றிருக்கிறது. சி.வைத்தியலிங்கத்தினை மேவியும். எப்படி என்றெல்லாம் யோசிக்கத் தேவையில்லை. இதெல்லாம் இலக்கிய அரசியல். அதனால் அடுத்த கட்டத்துக்கு நாம் தாவலாம்.

'முறுவல்' தமிழ்நாட்டில் ஏதோ ஒரு வங்கி கொடுக்கும் பரிசினைப் பெற்ற நாடக நூல். அதுதான் முறுவலை வருவிக்கின்றதே தவிர, அதன் கட்டமைப்பல்ல, உள்ளுயிர் அல்ல என்பது நினைத்துப் பார்க்கவேண்டியது.

ஆனால் ஒரு காலத்தில் முடிசூடா மன்னன் போல் எழுத்துத் துறையில் விளங்கிய எஸ்.பொ., சிறுகதையில் சாதித்தது பிரமாண்டம்.

அவரது 'தேர்' சிறுகதை தமிழுள்ளளவும் நிலைக்கக்கூடியது. இன்னும் ஒரு சிறுகதை, 'ஊழி' என நினைக்கிறேன், அது பாதித்த அளவு ஈழத்து எந்த எழுத்தாளரின் எந்தச் சிறுகதையும் என்னைப் பாதிக்கவில்லை. இப்போதும் ஊழிச் சிவனின் ஊழிக் கூத்து என் செவியில் அலைமோதிக்கொண்டே இருக்கிறது. அந்த மொழியும், வசனச் சீரும் காலமுள்ளளவும் என்னில் அழியாது.

இந்தவகையில் பார்க்கப்போனால் அறுபதுக்கள் எஸ்.பொ.வின் தசாப்தம் ஈழத் தமிழிலக்கியத்தில். அவர் இன்னும் ஓரிரு தசாப்தங்களைத் தனக்காகச் சுவீகரித்திருக்க வேண்டியவர். ஆனால், நடக்காது போய் விட்டது. அது ஈழத் தமிழிலக்கியத்தின் துர்ப்பாக்கியமெனவே சொல்லத்தோன்றுகிறது.

■ ■ ■


The Left and the Ethnic Conflict in Sri Lanka: Did the Left Movements Fail the Tamils?

Book Launch and Public Presentation


**Saturday, December 8th**
**3.30 P.M. – 5.30 P.M.**

**Scarborough Civic Centre**

Chair: Mr. K. Kanthasamy
Speakers: N. Sivahurunathan, Prof. Aparna Sundar, Prof. Chelva Kanaganayakam, Mark and Prof. Ravi Vaitheespara.

Ravi Vaitheespara, ***Theorizing the National Crisis: Sanmugathasan, the Left and the Ethnic Conflict in Sri Lanka***, Colombo: SSA, 2007.

The book, which also includes a long introduction by the veteran Left academic Prof. N. Shanmugaratnam, explores the largely obscured history of the Left's engagement with the ethnic conflict in Sri Lanka. It both raises and tries to answer the question: "Did the Left fail the Tamils?" Commentators and experts will address the contribution of this book and speak to the questions raised by the book.



Scarborough Civic Centre
**150 Borough Drive**
**(North-west corner of McCowan Road and Ellesmere Road)**
**Toronto, Ontario M1P 4N7**

**Phone (416) 224-0362**
**(416) 292-1295**

# பாலியல்:
# ஆரோக்கியமான சிறார்களை வளர்த்தல்

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதை நன்குணர்ந்த பெற்றோர்கள் தங்கள் பிள் -ளைச் செல்வங்கள் சரியான வகையில் பாதுகாக்கப்படவேண்டும்; அவர்கள் நல்வழி நடக்கவேண்டும்; வளர்ந்தபின் நற்பிரஜை யாக உருவாக வேண்டும்; சிறந்த ஆளுமை, நல்லாரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என நன்மை நினைத்து, பிள்ளைகளுக்கு நன்மை தீமை புரியவைத்து, புத்திமதி கூறி பொதுவிடய சம்மந்த அறிவுகளை ஊட்டி கல்வியறிவளித்து, வளர்த்து வரும் பெற்

**-றாஜினி தார்சீசியெஸ்-**

-றோர், ஏதோ காரணத்தினால் மரபு என நினைத்தோ, அல்லது பண்பில்லை என நினைத்தோ பிள்ளைகளுடன் பாலியல் பற்றி சிறு வயதிலும்சரி வளர்ந்த பின்னும்சரி கதைப்பதில்லை. பாலியல் பற்றி பெற்றார் பிள்ளைகளுடன் கதைக்கலாமா? எனும் ஒரு மனப்பாங்கும், இது சங்கடமான விடயம் எனவும் யோசித்து பிள்ளைகளுடன் மனந் திறந்து கதைக்கப்பட வேண்டிய இவ்விடயம் தவிர்க்கப்படுகின்றது. கதைக்காமல் விடுவ தானால் ஏற்படுகின்ற பாதிப்புகள் விளைவு கள் அதிகம்.

### ஏன் பிள்ளைகளுடன் பாலியல் பற்றி கலந்துரையாட வேண்டும்?

உடலுறவு பற்றியும் பாலியல் பற்றியும் ஒவ் வொரு நாளும் பிள்ளைகளுக்குத் தங்க ளைச் சுற்றி உள்ள சுற்றாடலில் இருந்து தகவல்கள் கிடைக்கின்றது. உதாரணமாக நண்பர்கள், அயலவர்கள், தொலைக்காட்சி, சஞ்சிகைகள், மற்றும் பொது ஊடகங்கள் மூலமும் நிறையவே கிடைக்கின்றது. அவர் கள் பெறும் சில தகவல்கள் குழப்பமானதா கவும், அவர்களைப் பாதிக்கக் கூடியதாக வும் இருக்கலாம். நாங்கள் பிள்ளைகளுடன் பாலியல் பற்றிக் கதைத்தால், அவர்களுக்கு இருக்கும் குழப்பமான செய்திகளை நாங் கள் தெளிவாக்குவதுடன், சரியான தகவல் களைக் கொடுப்பது மட்டுமல்லாது நல்ல தீர்மானமான தகவல்களையும் எங்கள் குடும்ப அல்லது கலாச்சார விழுமியங் களையும் (values) அவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

### பெற்றோர் பாலியல் கல்வி கற்பிப்பதற்கு முக்கியமானவர்களா?

பிள்ளைகளுடன் கதைத்து, அவர்களுக்கு உதாரண பாத்திரமாக இருப்பதுடன், ஆலோ சனைகள் வழங்கவும், புத்திமதி கூறி, சரி யான பாதை காட்டுவதன் மூலமாக பாலி யல் ஆரோக்கிமான சிறார்களை வளர்ப பதில் பெற்றோர்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள். பலர் நம்புவது மாதிரி இல்லா மல் சிறார்கள் பாலியல் பற்றி தங்கள் பெற்றோருடன் கதைக்கவே விரும்புகிறார் கள் என்பதே உண்மை.

### பாலியல் ஆரோக்கியமான குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள அடிப்படைக்



### கொள்கைளும் தத்துவங்களும்

குழந்தைகள் தங்ளைப் பற்றியும் பாலியல் உறுப்புக்களைப் பற்றியும் நல்ல உணர்வை வளர்ப்பார்கள். தான் ஆண் அல்லது பெண் என்று தம்மைப் பற்றி நல்லுணர்வை வளர்ப் பது மட்டுமல்லாது, மனிதரின் முழுத் திறமைகளும் என்ன என்று பால் வேறுபாடு இல்லாமல் சிறார்கள் அறிந்திருப்பார்கள்.

41ம் பக்கம் பார்க்க...



40ம் பக்கத் தொடர்ச்சி...

உடலுறவு பற்றி கேள்வி கேட்பதும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது என்று சிறார்கள் கற்றுக்கொள்வார்கள்.

சிறார்கள் தங்கள் உடலின் உரிமைகள் பற்றியும் பொறுப்புக்கள் பற்றியும் விளங்கிக் கொள்வார்கள். அதாவது தன் உடலை யார் தொடலாம் - முக்கியமாக தன் பாலியல் உறுப்புக்களை யார் தொடலாம் என்று நிர்ணயிக்கும் உரிமை ஒவ்வொரு ஆண் /பெண்ணுக்கும் உரியது என்று அறிந்து கொள்வார்கள். பாலியல், சிறார்களின் பாலியல் போன்றவற்றின் சரியான தகவல்களைச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் பெறுவதற்கு உதவுவதுடன், குடும்பங்கள், முழுச் சமூகம் போன்றவற்றில் சிறார்களுக்கான குடும்ப பாலியல் கல்வியின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படும்.

பாலியல் பற்றியும், பாலியல் உடலியல் / சுகாதார விடயங்கள் பற்றியும் கதைப்பதனால் கூடுதலான ஒப்புக்கொள்ளும் தன்மையும் சௌகரிய உணர்வும் மக்களிடையே ஏற்படும். சமூகத்தில், குடும்பத்தில் பெற்றோர் சிறார்களுக்கிடையிலான தொடர்பு கூடுதலால் குடும்ப பாலியல் கல்வி பற்றி பெற்றோர் - சிறார்களுக்கிடையிலான உரையாடல்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக இருக்கும். இதன்மூலம் குடும்ப உறவுகள் வலுவூட்டப்பட்டு, சந்ததி இடைவெளி குறைக்கப்பட்ட ஆரோக்கியமான குடும்ப உறவுகள் மலரும். அத்துடன் பதின்ம வயதில் ஏற்படுகின்ற தடுமாற்றங்கள் அதன் பாதக விளைவுகள் குறைக்கப்படும்.

கலந்துரையாடுவதன் மூலம் எங்கள் தனிப்பட்ட பாலியல் பற்றிய மதிப்பீடு, நடத்தை (மனப்பாங்கு), நம்பிக்கைகளை வெளிக்கொண்டுவந்து சிந்தனை செய்வதற்கும், இவற்றை நமது பிள்ளைகளிடம் நிலைநிறுத்துவதற்கும் ஒரு சந்தர்ப்பமாகும். இதனால், மனித பாலியல் பற்றி, மேலதிகமாகத் தெரிந்து கொள்ள உதவி செய்வதுடன் சிறார்களை பாலியல் ஆரோக்கியமாக வளர்ப்பதற்கு முக்கிய பங்கு என்ன என்று மேலும் தெரிந்து கொள்ளவும் பிள்ளைகளுடனான கலந்துரையாடல்கள் உதவுகின்றது.

பாலியலை நோக்குகையில், பிறந்ததிலிருந்து பாலியல் என்பது எங்கள் உள்ளார்ந்த / உள்ளடங்கிய பாகமாக உள்ளது. இது உடல், உடலியல், மனதத்துவ, சமூக, உணர்வுரீதியான, கலாச்சார, ஆன்மீக, பாலுறவு, பாலியல் என்பவற்றின் பரிமாண நெறிக்கொள்கை என்பவற்றை உள்ளடக்குகின்றது. இது மற்றைய வாழ்க்கை அம்சங்களில் இருந்து அகற்றப்பட முடியாதது.

பாலியல்பு, எங்கள் எண்ணங்களுக்குள்ளும், உணர்வுகளுக்குள்ளும், செய்கைகளுக்குள்ளும், ஒருவருடன் ஒருவர் கதைக்கும் முறைகளுக்குள்ளும் உட்பட பலவற்றில் தாக்கம் செலுத்துவதன் மூலம் எங்களை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் எங்களை வசீகரிக்கிறது. உடல்நலம் ஒரு அடிப்படை மனித உரிமை என்ற விதத்தில் பாலியல் என்பதும் ஒரு மனித உரிமை தான்.

நாங்கள் பிள்ளைகளுடன் பாலியல் பற்றிக் கதைப்பதற்கு முயற்சி எடுக்கிறோமோ இல்லையோ, ஆனால் பிள்ளைகள் பாலியலுறவு பற்றி எல்லா விதமான செய்திகளையும் தங்களைச் சுற்றியுள்ள எல்லாச் சூழலில் இருந்தும் எப்போதும் எடுக்கிறார்கள். உதாரணமாக, தொலைக்காட்சி, வானொலி, திரைப்படங்கள் என வெவ்வேறு பல்வேறு ஊடகங்கள் ஊடாகவும், பாடல்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் குடும்ப அங்கத்தவர்கள், வேறு பெரியவர்கள், சிறார்கள், பாடசாலை போன்றவற்றிலிருந்து பாலியலுறவு பற்றிய தகவல்களை நிறையவே எடுக்கின்றனர். இது சிலவேளை பிள்ளைகளுக்கு குழப்பமானதாகவும், பிழையான தகவல்களாகவும், தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் கூட இருக்கலாம். பிள்ளைகள் கற்பதை நீங்கள் எல்லா விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் நீங்கள் அவர்களுக்கு உதவிசெய்யலாம். உங்கள் பிள்ளை தன் நண்பர்களிடமிருந்து கேட்டதையும் பாடசாலையில் இருந்து கேட்டதையும் பற்றி பிரித்தறி-வதற்கு உதவி செய்யுங்கள். பிள்ளைக்கு உங்கள் வழிநடத்தல் தேவையானதுடன் அவசியமானதும் ஆகும். நீங்கள் உங்கள் பிள்ளையுடன் பாலியல் பற்றி இதுவரை கதைக்கத் தொடங்காமல் இருக்கலாம். ஆனால் பிள்ளைகளுடன் பாலியல் பற்றி கதைக்கத் தொடங்குவதற்கு எப்பவுமே சரியான நேரம் என்று ஒன்று இல்லை. பிள்ளையுடன் பாலியல் பற்றி கதைப்பதற்கு குறிப்பிட்ட வயது வேண்டும் என எந்த வரையறையும் கிடையாது. உங்கள் பிள்ளைக்கு வெகு இளம் பராயத்திலிருந்தே கற்பிக்கத் தொடங்குங்கள். பாலியல் பற்றி பிள்ளைகளுடன் கதைக்கத் தொடங்குவதற்கு முன்பே பிள்ளை பிறந்ததிலிருந்து, பிள்ளைக்கு நீங்கள் உங்களை அறியாமலேயே உங்கள் பிள்ளையைத் தொட்டு அணைக்கும் முறையில், பிள்ளை செய்யும் செயல்களுக்கு நீங்கள் பிரதிபலிக்கும் விதத்தில், பிள்ளையுடன் நீங்கள் கதைக்கும் முறை என்பவற்றினூடாக கற்பிக்க தொடங்கி விட்டதுடன் பிள்ளையும் இயல்பாக உங்களிடம் இருந்து கற்கத் தொடங்கி விட்டது. பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்து இருந்து கதைக்க வேண்டிய தேவை நிறையவே உள்ளது.

அவனோ அவளோ என்ன விடயம் என்றாலும் தயங்காமல் உங்களிடம் கேட்கலாம், அத்துடன் அதற்கு விடையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஊட்ட வேண்டும். ஆகவே பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு விடைகொடுக்கப் போகிறீர்கள் என யோசியுங்கள். சில வேளை பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு விடையைத் தேட வேண்டியும் இருக்கலாம். பிள்ளைகள் கேட்கும் கேள்விகள் எதுவும் முதலில் பெற்றோரால் வரவேற்கப்படவேண்டும். கேள்வி கேட்டதை யிட்டுப் பாராட்டி, தொடர்ந்து கேள்வி கேட்கும் தன்மையை வளர்க்க வேண்டும். பிள்ளைகள் கேட்கும் எந்தக் கேள்வியும் கூடாத கேள்வி அல்லது முட்டாள் தனமான கேள்வி என்று ஒன்றுமே இல்லை. அறியும் ஆவலிலும் அவர்களுக்குள் இருக்கும் தேடலிலும்தான் பிள்ளைகள் கேள்விகளைத் தொடுக்கிறார்கள். ஆகவே யோசியுங்கள். நான் எங்கிருந்தேன்? எப்படி வந்தேன்? என பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு பிள்ளைகளின் வயதிற்கு ஏற்ற வகையில் சரியான உண்மையான பதில்களை எவ்வாறு கொடுப்பது என்பதை அறியுங்கள்.

சில பெற்றோர்கள் நினைப்பது போல, பாலியல் பற்றி பிள்ளைகளுடன் கதைத்தால், பிள்ளைகள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்குவார்கள் என்பது தப்பான கருத்தாகும். உண்மையிலேயே அறியாமல் இருப்பது தான் ஆபத்தானது. பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவருடன் ஒருவர் கதைப்பதால், ஒருவர் கூறுவதை மற்றவர் கேட்பதால், பருவமடைதல் பற்றி சிறார்கள் பெரிதாக பயப்படமாட்டார்கள். உடல் தயார்ப்படுமுன் பாலியல் உறவில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைப் பற்றி அவர்கள் அறியக்கூடியதாக இருப்பதுடன், ஆரோக்கியமான முடிவுகளை எப்படி எடுக்கலாம் என்பதைத் தெரிந்து உணர்ந்து செயல்படுவார்கள். அத்துடன் பெற்றோர்கள் உணர்வு பற்றி பிள்ளைகளுடன் கதைப்பதும் அவசியமானதாகும். பிள்ளைகளுக்கு உண்மைகளைச் சொல்லிக் கொடுப்பது முக்கியமானதுபோல், அவர்களுடன் உணர்வுகள் பற்றி கதைப்பதும் முக்கியமானது. பெற்றோர்களுக்குரிய விழுமியங்கள், பெறுமதிகள் பற்றியும் சிறார்களுடன் பகிருதல் மிகமிக அவசியம்.

பாலியல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று கூறுவது எப்போதும் நடைபெறக் கூடியதல்ல. இளம்பராயத்தினர் தாங்கள் பாலியல் உறவில் ஈடுபடலாமா என்று பெற்றோரிடம் கேட்கமாட்டார்கள். ஆனால் என்ன காரணத்திற்காக பாலியலுறவில் ஈடுபடுவதைத் தாமதிக்க வேண்டும் என்ற காரணம் அவர்களுக்கு தெரிந்திருந்தால் - அவர்களுக்குள் விதைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தாமதிக்க முடிவு செய்யலாம்.

### தொடர்ந்து கதையுங்கள்...

- பாடசாலையில் பிள்ளைகள் என்ன கற்கிறார்கள் என்று அறிந்து கொள்ளுவதன் மூலம் வீட்டில் அவ்விடயம் பற்றித் தொடர்ந்து கதைக்கலாம்.
- இளம்பராயத்தில் நடக்கும் மாற்றங்கள், பற்றிய தகவல்கள் பிள்ளைகளுக்கு முற்கூட்டியே தெரியும் என்பதை பெற்றார் நிட்சயப் படுத்திக்கொள்ள வேண்டும்
- ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பருவத்தில்தான் வளர்ச்சி அடைவார்கள் என்பதை பெற்றார் பிள்ளைகளுக்கு மீண்டும் கூறி நம்பிக்கையூட்ட வேண்டும்.
- பிள்ளைகளின் கேள்விகளுக்குத் தொடர்ந்து பெற்றார் விடை கூறுவதன் மூலம் பிள்ளைகள் கேள்வி கேட்பதை நிறுத்தினாலும், பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கதைப்பதற்கு எப்போதும் தயார் என்பதை அவனுக்கோ அவளுக்கோ தெரியப் படுத்தல் நன்று.
- மற்றைய பெற்றோருடன் இவைபற்றிப் பகிர்ந்து கதைப்பதன் மூலம் நமது பிள்ளைகளின் - நமது சமூக பிள்ளைகளின் பாலியல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு பங்களிக்கலாம்.

■ ■ ■


# மூலிகை வைத்தியம்

## Herbal Treatment

கனடாவில் 14 வருடங்களுக்கு மேலாக மூலிகை வைத்தியம் செய்யும் ஒரேயொரு மூத்த வைத்திய நிபுணர்

தேங்காயில் நேரடியாக கொலஸ்ரோல் இல்லை என்று ஆய்வு செய்து கனடாவில் நிரூபித்த டாக்டர்



**நீண்டநாள் வியாதிகள், பிடிவாதமான நோய்கள், ஆய்வுகளில் புலப்படாத நோய்கள் இன்னதென்று கண்டு பிடிக்கப்படாமல் கைவிடப்பட்ட நோய்கள்**

- ஆலோர்ஜிஸ்
- குழந்தைகளின் கிரந்தி
- தோல் வியாதிகள்
- ஆண்மைக்குறைபாடுகள்
- மாதவிடாய் கோளாறுகள்
- கை, கால், கழுத்து, நரம்பு வியாதிகள்
- இடுப்பில் இருந்து குதிக்கால் வரையும் பாயும் நரம்பு வலிகள்
- முள்ளந்தண்டு 4ம் 5ம் விலகல்
- தலை மயிரில் புழு வெட்டுதல்

- Head aches + Migraine
- Allergies
- Skin Diseases
- Male Difficulties
- Menses Problem
- Nervous Disorders
- Sciatica
- Carpal Syndrome (Wrist)
- Pinch Nerve
- Twisted Nerve Nerve in hand & Legs
- Prolapsed disc 4 & 5

இங்குள்ள வைத்திய முறைகளால் உங்கள் வியாதி குணமடையவில்லையா?... இனி என்ன செய்வது!! இலங்கைக்குப் போவோமா? இந்தியாவுக்குப் போவோமா? என்று ஏங்கும் நோயாளிகள் ஒரு தடவை மட்டும் தொலைபேசியில் அழையுங்கள். பல மன உழைச்சல்களும் கவலையும் தீரும்

முன்பதிவு மட்டும் (By Appointment only)

**Tel: 905-209-9464**


கீதவாணிவானொலி, செந்தாமரை, உதயன், உலகத்தமிழர் பத்திரிகைகள் மற்றும் மருத்துவம் சஞ்சிகை புகழ்

**Dr. N. M. குமார்** Prd. MBBS, CNHP ( Canada)

Health Card not covered மருத்துவ அட்டை செல்லுபடியாகாது



# திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



**Thavaraj Logasundaram**
Sales Representative
*thavarajl@yahoo.ca*
***Cell: 416 277 1453***

**HomeLife/Future Realty Inc.** *Brokerage*
*Independently Owned and Operated, REALTOR ®*
262 Markham Road, Scarborugh
Ontario, M1J 3C5
Tel: **416.264.0101**
Fax: **416.261.1519**

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**MARKHAM & ELLESMERE**
1 Room for Rent
10 Tuxedo Court
1 Car Park
Call: 416 430 0140

**BRIMLEY & ELLESMERE**
2 B/R Basement for Rent
1 Car Park, Sc.Centre, TTC
No Smoke
Call: 416 430 0035 / 416 917 8336

**MORNINGSIDE & STAN'S ROAD**
1B/Room Basement for Rent
Near All Facilities
Call: 416 292 3469 / 647 286 1970

**MARKHAM & STEEL**
2 B/Room Walkout Basement for Rent
Near TTC, School (New)
Call: 905 471 9631 / 416 707 0851

**MARKHAM & LAWRENCE**
1B/Room Basement for Rent
Call: 416 439 4489 / 647 284 8494

**MORNING SIDE & SHEPPARD**
3 B/Room Basements for Rent
Separate Entrance
Near All Facilities
Call: 416 283 1984

**DAN FROTH & EGLIN TON**
2 B/Room Basements for Rent
Separate Entrance
Call: 416 898 1469
2002 Covey Cargo Van for Sale
Call: 416 704 8534

**MORNING SIDE & SHEPPARD**
2 B/Room Basement for Rent from Dec.1.
Call: 416 616 1403

**DAN FROTH & EGLIN TON**
2 B/Room Basement for Rent
Separate Entrance
$800.00
Call: 416 707 9278

**BRIMLEY & STEEL**
2 B/Room Basement for Rent
Near School. TTC
Call: 416 704 1671

**WARDEN & FINCH**
3 B/Room Town House for Rent
Family - $1300.00
Call: 416 283 8452

**MORNINGSIDE & SHEPPARD**
2 B/Room Basement for Rent
Free Cable, Parking
Near All Facilities
1992 Honda Civic – 2000km for Sale
Call: 416 616 1403

**MORNINGSIDE & MILLINER**
3 B/Room Basement for Rent
Call: 416 283 1984 / 416 725 1984

**401 & WESTON**
1 B/Room Walk out Basement for Rent
Call: 416 614 9467

**BRAMPTON**
1 B/Room Basement for Rent
Call: 416 840 6864

**MARKHAM & DENISON**
3 B/Room Basement for Rent
Near Schools (Separate Entrance )
Call: 416 457 8206

**BRIMLEY & DENISON**
2 B/Room Basement for Rent
$650.00
Call: 416 315 3819

**BRIMLEY & LAWRENCE**
2 B/Room Basement for Rent
Separate Entrance
Call: 416 430 0035 / 416 917 8336

**BRAMPTON**
1 B/Room for Rent in House
Call: 416 897 1284 / 905 915 0422

## HOUSE / CONDO FOR SALE

**BRAMPTON**
2 Bed Room Condo for Sale
1 W/R, New Renovated
2 APP
Call: 905 793 3243

**OLD FINCH & MORNING SIDE**
4B/R 2 Years Old House for Sale
Also 2500S.F. New Home in Brampton
Call: 416 662 9845 / 416 297 9845

**NEILSON & FINCH**
3 B/R Simi House for Sale
Call: 416 910 0487

**BRIMLEY & STEEL**
Tamil Restaurant for Sale
Call: 416 821 0001

**MARKHAM & EGLIN TON**
3 B/Room 2 Full W/R, ? W/R
1700SF. for Sale
Call: 416 459 0417

**KENNEDY & LAWRENCE**
3 B/Room Bang low House for Sale
Call: 647 989 3158

**OLD FINCH & MORNINGSIDE**
4 B/Room House for Sale
Finished Basement & Double Garage
Call: 416 662 9845 / 416 297 9845

## AUTO FOR SALE

2001 Nissan Sinatra Manual
185 km for Sale
Call: 416 752 8544/647 893 1361/416 890 8384

**2004 BLACK HONDA ACC – 29 KM**
$13.000
Call: 905 940 5282

**1993 TOYOTA COROLLA – 296 KM FOR SALE**
As is 2600
Call: 905 471 7373 / 416 402 1124

**1999 TOYOTA COROLLA FOR SALE**
$147.00
Call: 416 271 9129

**2 TRUCK FOR SALE**
2004 Fndgliner $43,000 - 475HPW
2000 " (120) 3407 – 475 HPW-19,000
Call: 416 428 5221 / 416 819 7356

**NISSAN 93 – 170KM FOR SALE**
$1600
Call: 416 818 8905

**2004 CRV – 50KM (SILVER) FOR SALE**
$18,000.00
2003 Honda civic Silver for Sale – 140 km
$11,000.00
Call: 905 474 2440

**1991 TOYOTA CAMRY – 226KM**
Good Condition
Call: 647 500 8215

CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798

**DINING TABLE FOR SALE**
(6 Pieces)
call: 416 754 9359

**94 HONDA ACC.AUTO**
96 Honda Manual
Call: 416 262 8493

**2002 TOYOTA SIENNA LE 120K.**
Blue
$13,200.00
Call: 416 856 1591

1993 Toyota Corolla for Sale
Call: 905 471 7373 / 416 402 1124

**1999 TOYOTA CAMRY (GREEN) 214 KM FOR SALE**
Call: 905 568 1060

## OTHERS

**MORNINGSIDE & LAWRENCE**
Tuition - Gr.1 – Gr.10 – Math, Science
Call: 416 286 5818

**DAY CARE**
2 – 4 Years (O Han & Ellesmere)
Call: 416 431 8655

**PAINTING FOR HOUSES**
Call: 416 828 5745

வேலைகளுக்கு
ஆட்கள் தேவை.

**Dunforth & Pharmacy**
அமைந்துள்ள Pizza
நிறுவனத்திற்கு
Pizza தயாரிப்பாளர்,
Pizza Delivery
போன்ற வேலைகளுக்கு
ஆட்கள் தேவை.

**416-694 0888**

கூர

கனடா நவீன கலை, இலக்கியத் தொகுப்பு
2008 பனிக்கால ஆரம்பத்தில் வெளிவரவிருக்கிறது.
தெகுப்பிற்கான சிறுகதை, கவிதை, விமர்சனக் கட்டுரை, நூல் மதிப்புரை, மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் வரவேர்க்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு 416 458 9426, 416 551 0087, 416 500 9016.

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்


உங்கள்
சிறு விளம்பரங்களும்
வீடு
பத்திரிகையில் விளம்பரமாவதற்கு
416-646-3422

# எண்ணெய் சிந்திய இரத்தம்



- ரதன் -

Alan Greenspan August 11, 1987 – January 31, 2006 வரை அமெரிக்க மத்திய (Federal Reserve)ன் தலைவராகக் கடமை-



யாற்றியவர். இவர் வெளியிட்ட கருத்தே மேற்கூறிய “எண்ணெய் சிந்திய இரத்தம்”. இவர் மிகத் தெளிவாக ஈராக் போர், எண்ணெய்க்காக என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். புஸ் நிர்வாகம் 2003ல் மிகத் துரிதமாக செயல்படத் தொடங்கியது. ஐ.நா சபையை நிர்ப்பந்தித்து, உலக வங்கி – சர்வதேச நாணய நிதியங்களின் அனுசரணையுடன் ஐ.நா சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் 1483ஆம் சரத்தை அமுல்படுத்தியது. இதன் பிரகாரம் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஈராக் எண்ணெய்க் காசு, ஈராக் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாற்றப்பட்டது. இந்த நிதியை மேற்பார்வை செய்தவர்கள் Paul Bremer மற்றும் சர்வதேச நாணய நிதிய கணக்காளர்கள். அமெரிக்கா செய்யும் ஒவ்வொரு துளி அபிவிருத்திக்கும், அமெரிக்கா அளிக்கும் உணவுக்கும், கேளிக்கைகளுக்கும், இந்த எண்ணெய் விற்ற பணம் மேற் கூறிய கணக்காளர்களால் வாரி வழங்கப்பட்டன. இவற்றுடன் அமெரிக்க ஏற்றுமதி, இறக்குமதி வங்கி (U.S. Export-Import Bank (ExIm) வழங்கிய கடன்களுக்கும், வட்டிகளாக இந்த பணம் மீளக் கட்டப்பட்டது. ExIm ஈராக்கில் தனியார் வங்கிகள், இதர நாட்டு வங்கிகள், ஈராக்கின் நிலைமை காரணமாக கொடுக்கப் பயந்த கடன்களை, தனது உப முகவர்கள் மூலமாக வழங்கி வருகின்றது. இந்த உப முகவர்களை தேர்வு செய்தவர்கள் எண்ணெய் விற்பனை முதலைகள், Bechtel and Halliburton ஆகியோர். மற்றொரு உப சரத்தின் பிரகாரம் எண்ணெய் வருமானம் மூலம் ஈராக் பெறும் வருமானம், அமெரிக்க அரசு, தனியார் நிறுவனங்கள் கொடுக்கும் கடன்களுக்காகவும், சேவைகளுக்காகவும் இந்த நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஈராக்கில் உள்ள அமெரிக்க நிறுவனங்களது நிதிகளும், முதலீடுகளும் பாதுகாக்கப்படுகின்றன. ஈராக் எண்ணெய்க் கிடங்குகள் அமெரிக்க நிறுவனங்களின் கைகளில் உள்ளன. இந்த எண்ணெய் உற்பத்தியில், ஈராக்கியர் சிந்திய இரத்தங்கள் அமெரிக்க பணக் களஞ்சியத்தை நிரப்புகின்றன.



அலன் கீறீன்ஸ்பான் கூறிய “எண்ணெய் சிந்திய இரத்தம்” என்பது மேற் கூறியதையே. அலன் தனது பொருளாதாரக் கொள்கையில் தொடர்ச்சியாக, இடைவிடாத பொருளாதார வளர்ச்சி அமெரிக்காவுக்கு அவசியம் எனத் தெரிவித்தார். அதன் வெளிப்பாடே ஈராக் போர். ஜேர்மனி இரண்டாகப் பிரிந்திருந்த பொழுது, கிழக்கு ஜேர்மனி பொருளாதாரத்தில் மிகவும் முனனேறியிருந்தது. கிழக்கு 75 விகித பொருளாதாரத்தையும், மேற்கு 25 விகித பொருளாதாரத்தையும் கொண்டிருந்தன. கிழக்கின் வளத்தை சோவியத் யூனியன் அனுபவித்தது. பின்னர் இரண்டும் உடைக்கப்பட்ட பொழுது அது அமெரிக்காவுக்கு சாதகமாகியது. இது போன்ற நிலை சீனாவிலும் ஏற்படலாம். அங்கும் கம்யூனிசம் வெகு விரைவில் முற்றாக உடைக்கப்படும். 1985 செப்டம்பர் மாதத்திலிருந்து சவூதி அரேபியா, இங்கிலாந்திற்கு 600,000 barrels crude oil ஒவ்வொரு நாளும் வழங்குகின்றது. 1985ல் தட்சர் அம்மையாரின் ஆட்சியின் போது, சவூதி அரச குடும்பத்தினருக்கும், இங்கிலாந்துக்கும் நீண்ட கால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இங்கிலாந்து போர் விமானங்களையும், இராணுவ தளபாடங்களையும், பொருட்களையும் வழங்கும், அதற்கு பிரதியீடாக சவூதி எண்ணெய்யை வழங்கும். இந்த ஒப்பந்தத்திற்கு மிகவும் ஆச்சரியப்படக் கூடியதும், விசித்திரமுமான பெயர் சூட்டப்பட்டுள்ளது. “Al-Yamamah” (the Arabic word for “the dove”) நற் செய்தி கொண்டு வருபவர், அல்லது அமைதித் தூதர் எனப் பொருள்படும். புறா என்பதும் சரியான பதமே. புறா அமைதியின் சின்னம். BAE, BP, Royal Dutch Shell, Lazard Bank, HSBC (formerly the British East India Company’s Hongkong and Shanghai Banking Corporation), and the Carlyle Group போன்ற நிறுவனங்களுக்கு சுமார் 80-160 பில்லியன் டாலர்கள் வரை வருமானம் கிடைக்கும். உலகமயமாதலில் எண்ணெய் - துவக்கு வியாபாரத்துக்கு சிறந்த உதாரணம் இது எனக் கூறலாம். சவூதி இளவரசர் மாண்புமிகு Bandar bin-Sultan இந்த ஒப்பந்தத்தின் சூத்திரதாரி. இது வரை(2006) சுமார் 160 பில்லியன் டாலர்கள் எண்ணெய் சர்வதேச சந்தையில் மேற் கூறிய நிறுவனங்களால் விற்கப்பட்டுள்ளன. இதன் லாப விகிதம் 40. சவூதிக்கு கிடைத்த இராணுவ உதவி 40 பில்லியன் டாலர்கள். இளவரசர் பெற்ற தரகுப்பணம் சுமார் 2பில்லியன் டாலர்கள். மிகுதிப் பணத்தில் அமெரிக்க கறுப்புச் சந்தையில் பெறப்பட்ட ஆயுதங்கள் ஆபிரிக்க, ஆசிய நாட்டு போராளிகளுக்கும் (அமெரிக்க ஆங்கில இலக்கியத்தில் இதன் பொருள் பயங்கரவாதிகள் எனப் பொருள்படும்) அரசுகளுக்கும் விற்கப்பட்டன.

2000ம் ஆண்டில் டிக் செனியால் கூட்டப்பட்டது “அமெரிக்க பிரித்தானிய படைகளை தனியார் மயப்படுத்தல்” மகாநாடு. அச் சமயம் செனி பிரபல கலிபேட்டன் (Halliburton) எண்ணெய் நிறுவன தலைவராகவும், நிறைவேற்று அதிபராகவும் கடமையாற்றினார். இந்த மகாநாட்டை நடாத்த உதவி புரிந்தவர்கள் ரான்ட் கூட்டுத்தாபனம், மற்றும் (RAND Corporation is a nonprofit global policy think tank first formed to offer research and analysis to the United States armed forces.)( The Ditchley Foundation is a British organisation based at Ditchley House near Chipping Norton, Oxfordshire, which aims to promote international relations, especially Anglo-American relations, through a program of around fifteen annual conferences on matters of international interest.) டிக் செனி, ஜோர்ச் டபிள்யு புஸ் (தந்தை) சி.ஐ.ஏயின் தலைவராக வரக் காரணமானவர். பின்னாளில் 1989-1993 அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றினார். 2000ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க உதவி அதிபராக கடமையாற்றுகின்றார்.

சித்திரை 2000இல் பிரித்தானியாவின் Defence Evaluation and Research Agency தனியார் மயப்படுத்தப்பட்டது. தை 24, 2001இல் Halliburton நிறுவனத்துக்கு சுமார் 600 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள இராணுவ பாரிய வாகனங்களுக்கான உடன்படிக்கை வழங்கப்பட்டது. QinetiQ is a British defence technology company. இதற்கு யூலை 2001இல் மற்றொரு இராணுவ தளபாட ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் 34விகித பங்குகளை மற்றொரு புஸ் குடும்ப நிறுவனமான Carlyle Group வைத்திருந்தது. இதன் அதிபராக முன்னாள் பிரித்தானிய பிரதமர் யோன் மேஜர் 2002இல் இருந்து 2005 வரை கடமையாற்றினார்.

ஈராக் போரின் சூத்திரதாரிகள் டிக் செனி,

48ம் பக்கம் பார்க்க...




CELL TEL MOBILITY
Cell Tel Mobility
For all your cellphone and accessory needs...
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY
NOKIA 6500
MOTOROLA V8
LG KE 970 SHINE
Winter Sale !!!
Geunine Leather Case
From $2.99
Reg. $19.99
Offer Expairs December 31st 2007
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Winter Sale !!!
Smart car charger
From $4.99
Reg. $39.99
Offer Expairs December 31st 2007
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Winter Sale !!!
Hands free
From $3.99
Reg. $29.99
Offer Expairs December 31st 2007
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, PANASONIC
SONY ERICSSON, SAMSUNG.
Display, Antenna replacement
and all other repairs........
PHONE RENTALS
Planning a vacation ? You can rent a world wide GSM phone
We also
UNLOCK (GSM) phones
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776

# காலநிலை மாற்றங்களும் புவி வெப்பநிலை அதிகரிப்பும்



ஜீவா திசைராஜா

ஒவ்வொரு நாளும் நாம் எழுந்தவுடன் தொலைக்காட்சியிலோ அல்லது வானொலியிலோ இன்று என்ன மாதிரியான வானிலை இருக்கும் என்று பார்க்கத்தான் விரும்புவோம். இந்த வானிலை நிலைமைகள் கோடை, மாரி, வசந்தம், இலையுதிர்காலம் போன்ற பருவகாலங்கட்கு இடையில் மட்டுமல்லாது காலப்போக்கிலும் மாறிவருவதை நாம் எமது வாழ்க்கைக் காலத்திலேயே நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த மாற்றங்கள் எவ்வாறு காலத்திற்குக் காலம் ஏற்பட்டன என்பதையும் இதற்கு என்ன காரணம் என்பதையும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வெப்பநிலை, மழைவீழ்ச்சி, வளிமண்டல நீராவியின் அளவு, முகிலின் தன்மை போன்றவை வானிலைக்கூறுகள் என அழைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிலவும் இவ்வளிமண்டல நிலைமைகளின் தொகுப்பே வானிலையாகும். நீண்ட காலத்தில் குறிப்பாக 30 வருடங்கட்கு மேற்பட்ட காலத்தில் நிலவும் வளிமண்டல நிலைமைகளின் சராசரி கால நிலை எனப்படும்.

இவ்வானிலை நிலைமைகள் மெதுவாக மாறிவருவதை நாம் அவதானிக்கக் கூடிய தாகவுள்ளது என நோக்கினோம். குளிரான பிரதேசங்கள் வெப்பமாகவும், கோடை காலங்கள் நீண்டு, மழைகாலங்கள் மாறுபடுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கிழக்கு அங்கிலியா பல்கலைக்கழகத்தின் காலநிலை ஆராய்ச்சிப் பிரிவின் தலைவரான ரெத் விக்லி (Tom Wigley) போன்ற காலநிலையாளர்கள் நீண்ட கால வானிலை அறிக்கைகள், மரங்களின் வளையங்கள் (Tree rings), வண்டற்படிவுகள், பாறைகள், பனிக்கட்டி உள்ளீடுகள் (Ice Cores) என்பவற்றின் மூலம் கடந்த கால வானிலை நிலைமைகளின் தளம்பல்கட்கான காரணங்களைப் பிரித்தறிந்து நாம் வெப்பமான அல்லது குளிரான அல்லது ஈரமான அல்லது காற்று மிகுந்த காலநிலையை நோக்கிச் செல்கின்றோமா என்பதை முன்னறிவிக்க முயல்கின்றனர்.

1988,1998 இன் அதி தீவிர வரட்சிகள், புயல்கள், வெள்ளப்பெருக்கு என்பன கால நிலை மாற்றங்களின் ஒரு பகுதியாக வேறுபட்ட வானிலை நிலைமைகளையும் காலநிலைகளையும் அறிவிக்கின்றது. காலநிலை நிலைமைகள் மாறிவருவதை காலரீதியாகவும் இடரீதியாகவும் நோக்குவோமாயின் ஐரோப்பாவில் கி.பி.900-1200 இற்கு இடைப்பட்ட காலத்தில் ஒப்பீட்டளவில் வெப்பமான நிலைமை காணப்பட்டது. தற்போதுள்ளதை விட ஓர் சிறியளவு வெப்ப அதிகரிப்பு நிலவியது. நியூசிலாந்து தரைக்கீழ் குகைகளில் கி.பி. 1200 இலிருந்து சராசரியாக வெப்ப நிலை 10.2பாகை கெல்வினாகக் காணப்பட்டது தற்போது 9.4பாகை கெல்வினாக உள்ளது. தஸ்மேனியாவின் மரவளையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளும் இந்த மத்தியகால வெப்பகாலத்தை (Medieval Warm Period) காட்டின.

ஆண்டுகட்குள்ளேயே விரைவாக மாற்றமடையலாம் என்பதை கிரீன்லாந்தின் பனிக்கட்டிக் கவிப்புகளின் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

- காலநிலை மாற்றங்கள் புவியெங்கும் ஒரு சீராக இல்லை. தாழ் அகலாங்குகளை(Low latitudes)விட உயர் அகலாங்குகளில் (High latitudes) அதிகமாகவும் தென் அரைக்கோளத்தை விட வட அரைக் கோளத்தில் அதிகளவிலும் இம்மாற்றங்கள் காணப்பட்டன.



தென் அமெரிக்காவில் குவெல்காயா (Quelccaya) சிகரத்தின் உச்சியில் 5,670 மீற்றர் உயரத்தில் கி.பி.700 இலும் கி.பி.1050-1500 காலப்பகுதியிலும் 160மீற்றர் தடிப்புள்ள வருடாந்த பனிப்படலம் காணப்பட்டது. கி.பி. 1500-1700 காலப்பகுதியில் ஈர நிலைமைகளும் கி.பி 1850 வரை வரட்சி நிலைமைகளும் இப்பகுதியில் நிலவியதாகக் கூறப்படுகின்றது. கி.பி 1540-1880 இற்குமிடையில் தற்போதுள்ளதை விட குளிரானதாகவே காணப்பட்டது. பின்னர் வெப்பமாகிவரும் நிலைமை அவதானிக்கப்பட்டது.

கி.பி 1450- 1850 வரை உலகெங்கும் காணப்பட்ட குளிரடைந்த நிலை சிறிய பனிக்கட்டி யுகம்(Little Ice Age) என அழைக்கப்பட்டது. கடந்த பனியாற்றுக் காலத்தின் பின் தோன்றிய நான்காவது குளிரான காலமாக இது கூறப்பட்டது. குவெல்காயாவின் உச்சியில் கோடை காலத்திற்கும் மாரி காலத்திற்கும் இடையில் அதிகரித்த வேறுபாடு காணப்பட்டது. அதாவது கோடையில் அதிக உருகுதலும் மாரியில் குளிர்ந்த வளியில் குறைந்தளவு ஈரப்பதனும் அவதானிக்கப்பட்டது.

இக் குளிரான காலத்தில் உலகின் சில பாகங்கள் வரண்டதாகவும் சில பாகங்கள் ஈரலிப்பானதாகவும் இருந்துள்ளன. சிறிய பனிக்கட்டியுகமானது எந்தவொரு இடத்திலும் தொடர்ச்சியாக குளிரானதாக இருக்கவில்லை. இது இடைவிட்ட பல குளிர்காலங்களை வெவ்வேறு இடங்களில் கொண்டிருந்தது.

### கடந்த கால குழப்பமூட்டும் காலநிலை நிலைமைகளில் இருந்து பின்வரும் முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- புவியின் வெப்பநிலையானது பல மில்லியன் ஆண்டுகளில் ஆகக் கூடியது 10 கெல்வின் வரையே வேறுபட்டுள்ளது. குவாட்டினறி (Quaternary) யுகத்தில் அண்மைய நூற்றாண்டுகளிலேயே வெப்பமான காலநிலைமைகள் நிலவியுள்ளன.
- எந்த ஒரு இடத்திலும் காலநிலை நிலைமைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. எமது வாழ்நாளிலேயே காலநிலை நிலைமைகள் மாறிவருவதை அவதானிக்கலாம்.
- வெப்பநிலையானது நூறு அல்லது முப்பது ஆண்டுகட்குள்ளேயே ...
- குளிரான காலங்கள் அநேகமான இடங்களில் வரண்ட காலங்களாகக் கருதப்பட்டன. இதற்கு சமுத்திரங்களில் ஏற்பட்ட குறைந்த ஆவியாக்கம் காரணமாகும். கடல் மட்டத்திற்குக் கீழாகவும் பரந்து காணப்படும் அவுஸ்திரேலிய, அயன ஆபிரிக்காவின் பாலைவன மணற்குன்றுகள் பனியாற்றுக் காலத்தின்போதும் நிலம் வரண்டதாகவும் கடல் தாழ்வாகவும் காணப்பட்ட போது தோன்றியிருக்கலாம்.

வெப்பமான காலத்தில் அதிக வரட்சியின் போது ஏற்படும் அதிக ஆவியாக்கமும் வரள் நிலைமைகளைத் தோற்றுவிக்கும். எனவே வரட்சிக்கும் வெப்ப நிலைக்கும் இடையே உள்ள தொடர்பை எளிதாக விளக்க முடியாது.


காலநிலை மாற்றங்கட்கு பல்வேறு காரணிகள் வழிவகுக்கின்றன. இவை எல்லாம் ஒருங்கிணைந்தே செயற்படுகின்றன. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- எரிமலை வெடிப்புகள்.
- சூரியனைச் சுற்றி வரும் புவியின் அச்சிலும் ஒழுக்கிலும் ஏற்படும் மாற்றங்கள்.
- வளிக்கோளம், கற்கோளம், நீர்க்கோளம், உயிர்க்கோளம் என்பவற்றுக்கிடையே உள்ள ஒழுங்கான சக்திச் சுற்றோட்டம் குழப்பப்படுதல். உதாரணமாக புவியின் சமுத்திரங்கள் அதிகளவில் ஆவியாகும் போது உருவாகும் பச்சைவீட்டு வாயுவான (Green house gas) நீராவி பச்சை வீட்டு விளைவை (புவியினுள் பெறப்படும் வெப்பம் உறிஞ்சி வைக்கப்பட அது வெளியேறமுடியாத நிலை ஏற்படலே பச்சை வீட்டுவிளைவு எனப்படும்) ஏற்படுத்துதல்.
- மனித நடவடிக்கைகள், உதாரணமாக காடழிப்பு, விவசாயம் என்பவற்றால் மேற்பரப்பு வெப்பநிலை மாற்றியமைக்கப்படுவதுடன் நகர, கைத்தொழில் வளி மாசடைதலால் வளியின் இரசாயனக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படலும் நகர

46ம் பக்கம் பார்க்க...


N.K.S

Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# காலநிலை மாற்றங்களும்...

45ம் பக்கத் தொடர்ச்சி...

வெப்பமடைதலும்.

20ஆம் நூற்றாண்டின் காலநிலை மாற்றங்களை நோக்குவோமெனின், 1900-1940 இற்கிடையில் புவி வெப்பமடைதல் அதிக அளவில் ஏற்பட்டது. இக்கால வெப்பமடைதலுக்கு பச்சை வீட்டு விளைவு காரண மல்ல. உயிர்ச்சுவட்டு எரிபொருள் பாவனை இக்காலத்தில் ஏற்ற அளவிலேயே இருந்தது.

1920 ஆம் ஆண்டு வெப்பமாதலுக்கு எரிமலைகளால் வளிமண்டலத்தில் தூசுப்போர்வை அகற்றப்பட்டமை காரணமாகலாம். ஆனால் நியூசிலாந்தில் 1900-1935 இற்கிடைப்பட்ட காலம் குளிர்காலப்பகுதியாகக் காணப்பட்டது. எனவே காலநிலை மாற்றங்கள் ஒரு சீராக இருக்கவில்லை என்பதை நோக்கலாம். 1940-1970 இடையில் வட அரைக்கோளத்தில் 0.3 கெல்வினால் குளிரடைதல் காணப்பட்டது. இதற்கு நிலக்கரி எரிதலால் ஏற்பட்ட சல்பேற்றால் வளி மாசடைந்தமை காரணமாக இருக்கலாம். சல்பேற் தூசுதுகள்கள் முகில் ஒடுங்கும் மூலக் கருக்களாக இருப்பதனால் இவை உயர் முகில்களை உருவாக்கி அதிக ஞாயிற்றுக் கதிர்களைத் தெறிக்கச் செய்கின்றன. மாறாக தென் அரைக்கோளத்தில் மிகக் குறைவான நிலக்கரி எரிதலும் மிகக் குறைவான சல்பேற் உருவாக்கமும் குளிரடைதல் நிலைமை காணப்பட்டமைக்கு காரணமாகும்.

ஈக்குவடோரின் மத்திய கோட்டுப்பகுதியின் குவிற்றோவில் 1940-60 இற்குமிடையில் உறைபனி அதிகமாகக் காணப்பட்டது. தஸ்மேனியாவின் மரவளையங்கள் 1900-1946 இற்கிடையில் கோடை வெப்பநிலையில் வீழ்ச்சி காணப்பட்டதையும் 1970களில் அதற்குச் சமனான அதிகரிப்பு காணப்பட்டமையையும் இந்நிலை தொடர்வதையும் காட்டுகின்றன.

அண்மைக்காலத்தில் குறிப்பாக 1979 இலிருந்து புவியின் வெப்பநிலையானது அதிகமான இடங்களில் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. உலகின் அநேகமான எல்லாப் பனியாறுகளும் உருகி கண்டப் பகுதிகளிலிருந்து பின்வாங்கிக்கொண்டே இருக்கின்றன. கடந்த இதழில் கனடாவின் வடக்கே ஆக்டிக் கடற்பிராந்திய பனிக்கட்டி எவ்வாறு சுருங்கியது பற்றி பார்த்தோம். 1910 இற்கும் 1980 இற்கும் இடையில் கடல் மட்டமானது 13 செ.மீற்றரால் உயர்ந்துள்ளது. இதற்கு புவியின் கடல் மேற்பரப்பு வெப்நிலைகள் 0.5 கெல்வினால் அதிகரித்தமை காரணமாகும்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான அரசாங்கங்கட்கிடையிலான குழு (Intergovernmental panel on Climate Change) தனது இறுதி மதிப்பீட்டு அறிக்கை(2007)யில் உலகு வெப்பமடைந்து வருவதையும் காலநிலை அமைப்பில் ஏற்பட்டுவரும் ஏனைய மாற்றங்களையும் பற்றி ஒரு தெளிவான அறிக்கையை வழங்கியுள்ளது. இதன்படி அவதானிக்கப்பட்ட காலநிலை மாற்றங்களுக்கான உதாரணங்களாக பின்வருவன முன்வைக்கப்பட்டுள்ளது.

- 20ஆம் நூற்றாண்டில் புவியின் சராசரி மேற்பரப்பு வெப்பநிலை 1பாகை பரனைட்டால் அதிகரித்துள்ளமை
- 20ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் பனிக்கவிப்புக்களினதும் (Snow cover)கடற்பனியின் அளவும் மலைப்பனிக் கட்டியாறுகளும் அளவில் குறைந்தமை
- புவியின் சராசரி கடல்மட்ட அதிகரிப்பும் சமுத்திர நீர்வெப்பநிலைகளின் அதிகரிப்பும்
- வட அரைக்கோளத்தின் மத்திய (Middle) மற்றும் உயர் அகலாங்குகளிலும் (High latitudes)அயன (tropical) நிலப்பகுதிகளிலும் சராசரி படிவுவீழ்ச்சி (Precipitation) அதிகரிக்கக் கூடிய தன்மை
- உலகின் சில பகுதிகளில் அடிக்கடி அதிகூடியளவிற்கு (Extreme) படிவுவீழ்ச்சி ஏற்படக் கூடிய தன்மை

**இதனை விட அவதானிக்கப்பட்ட பௌதிக, சூழலியல் மாற்றங்கட்கு உதாரணங்களாக பின்வருவன கூறப்பட்டுள்ளன.**

- உறைபனி உருகுதல்
- தாவரங்களும் விலங்குகளும் முனைவை நோக்கி வடபுறமாக பெயர்தல்
- சில தாவர, விலங்கினங்கள் குறைவடைதல்
- மரங்கள் காலத்திற்கு முந்தி பூத்தல்
- காலத்திற்கு முந்தி சில பூச்சியினங்கள் தோற்றம் பெறல்
- பறவைகள் காலத்திற்கு முந்தி முட்டையிடல்

20 நூற்றாண்டின் இந்த புவி காலநிலை மாற்றங்களுக்கு மனித நடவடைக்கைகளே காரணம் என காலநிலை மாற்றங்கள் தொடர்பான அரசாங்கங்கட்கிடையிலான குழு (Intergovernmental panel on Climate Change) தனது இறுதிக் கூட்டத்தில் (2007 நொவம்பர்) முடிவைத் தெரிவித்துள்ளது.

இத்தகைய பாதகமான காலநிலை மாற்றங்கள் மனித குலத்தையே காலப்போக்கில் அழித்து விடக்கூடியது. மனிதராகிய நாம் அனைவரும் இத்தகைய அழிவைத் தவிர்த்துக் கொள்வதற்கு பங்களிப்பது இன்றியமையாததாகின்றது. மனிதன் எவ்வாறு இக் காலநிலை மாற்றங்கட்கு காரணமாகின்றான் என்பதையும் இவற்றை எவ்வாறு நாம் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதையும் அடுத்த இதழில் நோக்குவோம்.

■ ■ ■

**உலகத் தமிழர் சமூக நூலகம் உங்களை அழைக்கிறது!**

புலம்பெயர் நாடுகளிலேயே மிகப் பெரிய நூலகம்!

15,000க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள்!

சிறுவர் முதல் பெரியோர்வரை பயன்பெறக்கூடிய நூல்கள்!

வருடமொன்றிற்கு 200க்கும் மேற்பட்ட புத்தகங்களை வாசிக்கக்கூடிய அதிர்ஸ்டம்!

இணையத்தளம் www.tamillibrary.ca ஐப் பார்வையிடுங்கள்.

இன்றே அங்கத்தவராகிப் பயன் பெறுங்கள்.

தொடர்புகளுக்கு:

39, Cosentino Dr.

Scarborough, ON

M1P 3A3

Midland/Progress

**Tel: (416) 335 0622**



# சுடுநீர் சூடேற்றிகள்: தீர்மானிப்பதற்கு சில ஆலோசனைகள்

**செல்வி அதிநி**

வீட்டின் தண்ணீர் சூடேற்றி பழுதாகிய பின்னால்தான் அதைப் பற்றிய யோசனை தோற்றுகின்றது. எமது தண்ணீர் எவ்வாறு சூடேற்றப்படுகின்றது. எவ்வகையான சூடேற்றிகள் உள்ளன என்பது பற்றிய அறிவும் எமக்கு அதிகமாக இருப்பதில்லை. இனியும் கடைசி நிமிடம் வரையும் காத்திருக்காமல், புதியது வாங்கும் போது உங்களை நீங்கள் தயார்ப்படுத்தல் நல்லதல்லவா? அதற்காகத்தான் இந்தக் கட்டுரை வருகி றது. அடிப்படையில் உங்கள் சுடுநீர் தேவையை நீங்கள் தீர்மானிக்கவேண்டும். அடுத்தது குறைந்த செலவில் நிறைந்த பயன் தரும் வழியை பின்பற்றவேண்டும், அத்தோடு சரியான வழியில் சூடேற்றி பொருத்தப்படல் வேண்டும்.

### இன்று பாவனையில் உள்ள சில நீர் சூடேற்றிகள்

கடந்த சில வருட காலமாக பாவனையாளருக்கு வெவ்வேறு வகை சூடேற்றிகள் அறிமுகமாகியுள்ளன. அவையாவான:

- சுடுநீர் தாங்கியுடைய மரபுமுறை சூடேற்றிகள் (Storage Water Heaters)
- தேவைக்கு ஏற்ப நீரை சூடேற்றல் (Demand Water Heaters)
- வெப்பப் பம்பு சூடேற்றிகள் (Heat Pump Water Heaters)



- தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி (Tankless Coil Water Heaters)
- சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் (Solr Water Heaters)

### சுடுநீர் தாங்கியுடைய மரபுமுறை சூடேற்றிகள் (Storage Water Heaters)

இவ் முறையில் நீரை சூடேற்றுவற்கு பல வழிமுறைகள் உள்ளன. மின்சாரம், எரிவாயு, மண்எண்ணை அல்லது எண்ணை. பொதுவாக 75.7 லீற்றர்- 302.8 லீற்றர் கொள்ளவு கொண்ட தாங்கிகள் விற்பனையில் உண்டு. கனடாவில் பொதுவாக பாவிக்கப்படும் சூடேற்றிகள் இவ்வகையினதே. சூடுநீர் தேவைப்படும் போது தாங்கியின் மேல் உள்ள குழாயினால் வெளியேறுகிறது. அத்துடன் தண்ணீர், தாங்கியின் கீழ் பகுதியினால் உள்ளே சென்று தாங்கியை நிறைத்து வைத்திருக்கும்.

தாங்கியில் உள்ள நீரை தொடர்ச்சியாக சூடேற்றிக் கொண்டிருக்கும். நாங்கள் பாவிக்காத பொழுதுகளிலும் நீர் சூடேற்றப்படுவதால் சக்கி வீணே விரயமாகிக் கொண்டே இருக்கும். இதை தயார்நிலை வெப்ப இழப்பு எனக் கூறுகிறோம். தற்போது விற்பனைக்கு வந்துள்ள தயாரிப்புகள் இவ் வெப்ப இழப்பை குறைப்பதற்கான தொழில் முறைகளை உள்ளடக்கியதாய் உள்ளன. பெரும்பாலும் இவற்றின் தொழில் முறை குறிப்பிலும், சக்தி சேமிப்பு குறிப்பிலும் மேலதிக விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

### தேவைக்கு ஏற்ப உடன் நீரை சூடேற்றல்

தண்ணீர் இவ் சூடேற்றிக்கூடாக செல்லும் போது சூடு நீராக்கப்படுகிறது. இவ் தொழில் நுட்பத்தில் தாங்கிகள் இல்லை. எனவே சுடு நீர் தேவைப்படும் போது உடனுக்குடன் நீர் சூடேற்றி வழங்கப்படுகிறது. இதன் ஊடாக தயார்நிலை வெப்ப இழப்பு முற்றிலும் தவிர்க்கப்படுவதுடன் 20வீதத்திலிருந்து 30வீதம் வரையில் சக்தி சேமிக்கப்படுகிறது. சூடேற்றுவதற்கு எரிவாயு அல்லது மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இதனால் நீங்கள் குளிக்கும்போது சுடுநீர் இல்லாமல் போகும் நிலை வராது. ஆனாலும் நீர்ப்பாச்சல் வீதம் மட்டுப்படுத்தப்பட்டதாயே இருக்கும். பொதுவாக, இம்முறை மூலம் 7.6 லீற்றர்- 15.2 லீற்றர் ஒரு நிமிடத்துக்கு என்ற பாச்சல் வீதமே இருக்கும். குறிப்பிட்ட ஒரு தேவைக்காய் மட்டும் சுடு நீரை பாவிக்கும் போது இவ் நீர்ப்பாச்சல் வீதம் போதுமானதாயே இருக்கும். ஒரே தடவையில் குளிப்பதும், சலவை இயந்திரமும் இயங்கும் சந்தர்ப்பங்களில் சுடுநீர் போதுமானதாக இருக்காது. தேவைக்கு ஏற்ப சமாந்தரமாக வேறு பம்புகளை பொருத்துவதன் மூலம் தேவையை சமாளிக்க முடியும்.

எரிவாயுவை பாவிக்கும் போது நீர்பாச்சல் வீதத்தை அதிகரிக்க முடியும். ஆனால் மின்சாரத்திலிலும் விட அதிகளவு சக்கி எரிவாயுவினால் விரயமாகிறது. ஏனெனில் பைலட் விளக்கு தொடர்ந்தும் எரிந்து கொண்டிருப்பதால் அதற்கான வாயு விரயமாகிறது. ஆயினும் இது மிகவும் குறைந்தளவே.

### வெப்பப் பம்பு சூடேற்றிகள் (Heat Pump Water Heaters)

வெப்பப் பம்பு மின்சாரத்தினால் இயக்கப்படுகிறது. மின்சாரத்தினால் நேரடியாக வெப்பத்தை உண்டாக்காமல், வெப்பத்தை ஒருபகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு கொண்டு செல்வதற்கே இங்கு மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இவ் வகையான சூடேற்றிகள் நீர்தாங்கிகளுடனும் வருகின்றன. அல்லது உங்களது தற்போதைய நீர்தாங்கியையும் இதனுடன் பாவிக்கமுடியும். இத்தகைய பம்புகளை பொருத்துவதற்கு செலவு பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் பம்புகள் பொருத்தும் இடம் குறிப்பாக 4.4 சென்றிகிரேட்-32.2 சென்றிகிரேட் வெப்பநிலையில் பேணப்படவேண்டும். அத்தோடு பம்பைச் சுற்றிய சூழல் குறைந்தது 1000 கன அடியாக இருத்தல் வேண்டும். இவ் பம்பு சிறப்பாக தொழில் படுவதற்கு எரிவாயு அறைக்குள் இவற்றை பொருத்துவதே உசிதமானது. குளிர் கூடிய இடங்களில் இவை சிறப்பாக வேலை செய்வதில்லை.



### தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி (Tankless Coil Water Heaters)

சுடு நீரைப்பாவித்து உங்கள் வீட்டை சூடேற்றும் முறையை பாவிப்பவர்களுக்கு இம்முறை இலகுவாய் இருக்கும். இவற்றுக்காக கொதிகலன் பாவிக்கப்படுகிறது. இதுவொரு தாங்கியல்ல. குளிர் காலங்களில் வீட்டை சூடேற்றுவதற்காக கொதிகலன் பாவிக்கப்படுவதால், சுடு நீர் தேவைப்படும்போது தண்ணீர் வெப்ப மாற்றியூடாக சென்று சுடு நீராக எமது தேவைக்கு வருகிறது. இங்கு வெப்ப மாற்றி பாவிக்கப்படுகிறது. இவ் மாற்றியே கொதிகலனை தேவை கருதி கட்டுப்படுத்தி வைக்கிறது. குளிர் காலங்களில் வீட்டைச் சூடேற்றுவதற்கும் இம்முறை பாவிக்கப்படுவதால், சுடு நீர்த் தேவையும் இலகுவாக பூரணப் படுத்தப்படுகிறது. ஆனால் கோடை காலங்களில் சுடு நீரைப் பெறுவதில் சிறு சிக்கல்கள் உண்டு.

### சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் (Solr Water Heaters)

சூரிய சக்தியைக் கொண்டு நீரை சூடேற்றி எமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். பல்வேறு தயாரிப்புகள் வெளிவந்துள்ளன. ஆயினும் கனடா போன்ற குளிர் நாட்டில் துணைக்கு (பின்பலமாக) மற்றய சூடேற்றிகளில் ஏதாவதொன்று இருப்பது நன்றே.

■ ■ ■


J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி
• Loans
• Mortgages
• Insurance Claims
• Traffic Ticket
• Auto/Life Insurance
• Scholarship Plan (RESP)
• Real Estate Related
• Credit Counselling
• Accounting
• Tax Services

R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

# எண்ணெய் சிந்திய இரத்தம்...

43ம் பக்கத் தொடர்ச்சி...

அலன் கீறீன்ஸ்பான், மற்றும் Halliburton and Carlyle Group. Carlyle Group இன் ஆலோசகர்களாகவும், அதிகாரிகளாகவும் பின்வரும் அரசியல் அதிகாரிகள் கடமை யாற்றியுள்ளனர்.
James Baker III, George H. W. Bush, George W. Bush, Frank C. Carlucci( former United States Secretary of Defense from 1987 to 1989), Liu Hong-Ru ( former chairman of China's Securities Regulatory Commission), John Major( former British Prime Minister, Chairman, Carlyle Europe from 2002 until 2005), Frank McKenna (Canadian ambassador to the United States and former member of Carlyle's Canadian advisory board), Mack McLarty ( White House Chief of Staff under President Bill Clinton), Fidel V. Ramos( former president of the Philippines, Carlyle Asia Advisor Board Member until the board was disbanded in 2004), Anand Panyarachun( former Prime Minister of Thailand (twice), former member of the Carlyle Asia Advisory Board until the board was disbanded in 2004), Thaksin Shinawatra( deposed Prime Minister of Thailand), Luis Téllez Kuenzler( Mexican economist).

ஈராக் குவைத்தைப் பிடித்த பொழுது, குவைத்தை நாசப்படுத்தியதற்காக சுமார் 27பில்லியன் டாலர்கள் நட்ட ஈடாக குவைத் துக்கு கொடுக்க வேண்டும் என அமெரிக்க புஸ் அரசு அறிவித்தது. இதனை சேகரிக்க அமெரிக்கா Carlyle Group ஐயே நியமித்தது. 9/11க்குப் பின்னால் இந்த நிறுவனம் பல அரச ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்டது. U.S. Investigative Services, USIS என்ற நிறுவனம் (Carlyle Group own 100%) அமெரிக்க அரசு தொழிலாளர்களின் பின் புலம், அடையாளம் போன்ற பாதுகாப்பு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அந்திராக்ஸ் மருந்தால் பாதிக்கப்பட்ட Hart Senate Building in Washington, D.C.ஐ துப்பரவு செய்யும் பணி இந்த நிறுவனத்துக்கே வழங்கப்பட்டது. இவற்றுடன் பாது காப்பை பலப்படுத்தும் பல ஒப்பந்தங்களை இந்த நிறுவனம் பெற்றுக் கொண்டது.

இந்த நிறுவனம் சவூதி அரச குடும்பத்தின் பணத்தை அமெரிக்காவில் முதலீடு செய்தது. அது மாத்திரமல்ல -சவூதியின் பிரபல Binladin Group. It's about a $5 billion construction company பணத்தையும் அமெரிக்கா வில் முதலீடு செய்தது.

Halliburton பல தவறுகளை இழைத்துள் ளது. உதாரணமாக ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகளுக்கு உணவு, எண்ணெய், வீடு, போக்குவரத்து போன்றனவற்றை ஏற்பாடு செய்வதற்காக சுமார் 8 பில்லியன் டாலர்கள் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதனை சரியாக செய்யாததுடன், சுமார் 40 விகிதம் அதிகமாகவும் பெற்றுள்ளது. 42,000 உணவு பொதிகள் வழங்கியதாக அரசிடம் பணம் பெற்ற நிறுவனம், வெறும் 14,000 பொதிகளையே வழங்கியுள்ளது.

ஈராக்கில் உற்பத்தியாகும் சோடா (24 போத் தல்கள்) 45 டாலர்கள் ஒரு கேசிற்கு அறவிட்டுள்ளது. ஒரு சலவை பை கழுவ வதற்கு 100 டாலர்கள் அறவிட்டுள்ளது. ஆனால் அங்கு வேலைசெய்யும் தொழிலா ளிகளுக்கு வெறும் 50 சதங்களையே ஒரு மணிக்கு வழங்கியுள்ளது.

சுமார் 85,000 ரக்குகள் செயலிழந்துள்ளன. துருக்கி, பிலிப்பைன் தொழிலாளர்களுக்கு எச்சில் பண்டங்களை உணவாக வழங்கி யுள்ளது.

ஈராக்கின் வட பகுதியில் இருந்து ஏற்றுமதி யாகும் எண்ணெய்யின் அளவு பெருமளவு குறைந்துள்ளது. எண்ணெய்க் கிடங்குகள் அனுமதியற்ற இடங்களில் தோண்டியுள்ள துடன், பிழையான முறையிலும் தோண்டி யுள்ளார்கள். ஒரு நாளைக்கு எண்ணெய் ஏற்றுமதி 5 மில்லியன் டாலர்கள். இதனால் ஈராக்குக்கு நட்டம். அப்படியிருந்தும் அமெரிக்கா தொடர்ச்சியாக இவர்களுக்கு பணத்தை வழங்கியுள்ளது.
Halliburton went from paying $302 million in company taxes in 1998 to getting an $85 million tax refund in 1999 (இந்த இரு நிறுவனங்கள் பற்றியும், அடுத்த இதழில் விரிவாக பாரப்போம்)

அங்கோலா பெற்றோலியமும், வைரங்க ளும் நிறைந்த ஆபிரிக்க நாடு. நீண்ட கால உள் நாட்டு யுத்தத்தால் நாடு வறுமையில் வாடுகின்றது. இங்கு கூட புஸ் விட்டு வைக்கவில்லை. இங்கும் இரத்த ஆறை ஓட வைக்கும் அங்கோலா அரசுக்கு சுமார் 750 மில்லியன் டொலர்கள் எண்ணெய் பணத்திற்கு, ஆயுதங்களை வழங்கியுள் ளது. அங்கோலா அதிபரின் மனைவி சோனியா (முன்னாள் பொலிவியா அழகி), புஸ்ஸின் தேர்தலுக்குப் பணம் வழங்கியுள் ளார். அங்கோலா அரசுக்கும் செனியின் Halliburton and its subsidiary Brown & Rootக்கும் தொடர்புகள் உள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதே அங்கோலா சீனா விற்கு, ஆயுதங்களைப் பெறுவதற்காக எண்ணெய் ஏற்றுமதி செய்கின்றது இதே மாதிரியே இந்தோனிசியாவும் எண்ணெயைக் கொடுத்து ஆயுதங்களைப் பெறுகின்றது.

மத்திய ஆபிரிக்க நாடான சாட்(Chad)ல் எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதற்காக உலகவங்கி 3.7 மில்லியன் டாலர்களை வழங்கியது. அமெரிக்க நிறுவனங்களான ExxonMobil and Chevron ஆகியவை எண்ணெயை கமரூன் ஊடாக மற்றைய நாடுகளுக்குக் கொண்டு செல்கின்றன. எண்ணெய் வருமானத்தை சாட் அதிபர் Idriss Deby ஆயுதங்கள் வாங்குவதற்கா கவே செலவிடுகின்றார்.

சூடானின் வருமானத்தில் 40விகிதம் எண்ணெய் வியாபாரத்தில் பெறப்படுகின்றது. இதில் சுமார் 60 விகிதத்தை ஆயுதங்கள் வாங்க செலவிடுகின்றனர். சூடான், கொங்கோ, எகிப்து போன்ற நாடுகள் எண்ணெயைக் கொடுத்து சீன ஆயுதங்களைப் பெறுகின்ற னர். Mauritania, Algeria , Zimbabwe போன்ற நாடுகளிலும் சீன ஆயுதங்களைக் காணலாம்.

Venezuela's populist president Hugo Chavez உடன் சீனாவும், வட கொரியாவும் எண்ணெய் - ஆயுத பேரம் பேசுகின்றன. இது சீனா, வட கொரியா, வெனிசுலா, கியுபா போன்ற நாடுகள் ஐக்கியமாகி மீண்டும் ஓர் இடது, வலது போரை வெளிப்படுத்தலாம் என ஐயப்படுகின்றனர் மேற்கத்திய இராஜ தந்திரிகள்.

2006 சித்திரையில் ரஷ்யாவும், பர்மாவும் எண்ணெய் - ஆயத ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளன.

பிரான்ஸ், சவூதி, குவைத், சிரியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் எண் ணெய்க்கு மாற்றீடாக ஆயுதங்களை வழங்கு கின்றது. பிரான்ஸ் ஆயுத ஏற்றுமதியில் மூன்றாம் இடத்தில் உள்ளது. முதலாவது இடம் அமெரிக்காவுக்கே. சுமார் 50க்கு மேற்பட்ட நாடுகளுக்கு பிரான்ஸ் ஆயுத ஏற்றுதி செய்கின்றது.


இந்தியா, பாகிஸ்தான், அங்கோலா போன்ற நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு ஆயதங் கள் வாங்குகின்றன. சீனா ஆயுத உற்பத்தி யில் முன் நிற்கின்றது. மிகக் குறைந்த விலையில் நல்ல ஆயுதங்களை வாங்க லாம் என்ற பெயரும் சீனாவிற்குண்டு.
இன்று அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்தும், மூன்றாம் உலக நாட்டு மக்க- ளின் சதைக்கும், இரத்தத்துக்குமாக அலை கின்றார்கள். புஸ், பிளேயர் எனத் தொடரும் பட்டியல் வாசிகள் துப்பாக்கியை கொடுத்து பணம் சம்பாதிக்கின்றார்கள். எண்ணெய்ப் பணத்துக்காக பல்வேறு தில்லு முல்லு- களைச் செய்கின்றார்கள்.
இவர்களைத் தான் உலக மக்கள் தெய்வ- மாகப் பூசிக்கின்றார்கள்!

■ ■ ■



# நித்தம் நித்தம் மாறுவது எத்தனையோ?

இராஜசேகர் ஆத்தியப்பன்



நீர் மாசுபடுதல் (Water Pollution), காற்று மாசுபடுதல் (Air Pollution) என்று இரண்டு வகை மாசுகளைப் பற்றித்தான் இதுவரை நாம் தெரிந்து வைத்திருந்தோம். அதனால் தான் நாம் தண்ணீருக்கு விலை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். சில பட்டணங்களில் ஆக்சிசன் பூத் என்று திறந்திருக்கிறார்கள். சுத்தமான பிராணவாயுவை ஒரு மணிநேரம் சுவாசிக்க இந்தியாவில் ரூ. 30.00 வாங்குகிறார்கள்.

மூன்றாவது வகையான மாசு என்னவென்பதை நாம் தெரிந்து கொண்டு அதிலிருந்து தப்பித்தால் நலவாழ்வு நமதே! மின்னணு மாசு (Electro Pollution) என்பது தான் நம் கண்ணுக்குப்புலப்படாத பயங்கரமான மூன்றாவதுவகை மாசு. 1879ம் ஆண்டு தோமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கைக் கண்டுபிடித்த பின், படிப்படியாக நமது வாழ்வில் நுழைந்த இந்த மின்னணு மாசு கடந்த சில ஆண்டுகளில் வேகமாக அதிகரித்துள்ளது. அதாவது நூறாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை இப்போதுள்ள நிலமையோடு ஒப்பிடுவோமானால் 200மில்லியன் மடங்கு அதிகமான மின்காந்தக் கதிர்வீச்சுக் கடலின் - சமுத்திரத்தின் நடுவில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். நாம் பயன்படுத்தும் மின்னணு தொலைபேசிகள் (செல்போன்), வலையம் (Internet), இவைகளுக்காக நிறுவப்பட்டுள்ள நுண் அணு கோபுரங்கள் (Microwave towers), இதர கருவிகள் எல்லாம் சேர்ந்து இந்த மின் காந்தக் கதிர்வீச்சை அழிவு ஆற்றலாக உயிரினங்களின் மீது அன்றாடம் வீசிக் கொண்டிருக்கின்றது.

நமது உடம்பின் நரம்பு மண்டலமும், நாளமில்லாச் சுரப்பிகளின் மண்டலமும் இணைந்து செயல்பட்டு உடலின் சமனிலையைப் பேணிப் பாதுகாக்கின்றன. ஆனால் இந்த அமைப்பைச் சார்ந்த முக்கிய சுரப்பிகள், EMR- மின்காந்த கதிர்வீச்சினால் (Electro magnetic radiation) பாதிக்கப்படுகின்றன. உடலின் சமனிலை என்பது மிகவும் கேள்விக்குறியான ஒன்று.

உயிர் இரசாயன செயற்பாட்டினால் நமது உடம்பிலுள்ள 100 டிரில்லியன் செல்களும் மெதுவான மின்காந்த சமிக்கைகள் மூலமாகத் தொடர்பு கொள்கின்றன. உடம்பின் செயற்திறனுக்கான கட்டளைகள் யாவும் இந்த சமிக்கைகளின் பாதையில்தான் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பாதை-வழிகள் தொடர்ச்சியான வெளிப்புறத் தாக்குதலான EMRன் மூலம் நோய்வாய்ப்பட நேரிடுகின்றது. எப்படியென்றால் செல்சைட்டோபினாசம் பாதிக்கப்பட்டு, சத்துக்கள் செல்லினுள் நுழையமுடியாமல் அதேசமயம் செல்லின் உள்ளே உள்ள கழிவுப் பொருள்கள் வெளியே வரமுடியாமலும் ஒரு உயிரியல் குழப்பம் நிகழ்கின்றது.

EMRஐப் பற்றிய நூற்றுக் கணக்கான ஆய்வுகள் எப்படியெல்லாம் நமது நரம்பு மண்டலங்கள், சுரப்பி மண்டலம், நோய் எதிர்ப்பாற்றல், கற்கும் திறன், பழக்க வழக்கங்கள் ஆகியன பாதிக்கப்படுகின்றன என்பதை நிரூபித்துள்ளன.

நமது உடம்பில் சுரக்கக்கூடிய மெலட்டனின், இன்சுலின் ஈஸ்டிறேஜன், (Estrogen) டெஸ்டோஜ்டிரோன் போன்ற ஹார்மோன்கள் மிக நுண்ணிய அளவில் பாதிக்கப்பட்டாலும் அவை உடலில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். நம்முடைய நவீன வாழ்க்கைமுறை (Life Style)பல அச்சுறுத்தல்களை நமது சுரப்பிகளின் மண்டலத்திற்கு தினந்தோறும் கொடுக்கின்றது. மன அழுத்தம் (Sterss), நச்சுத்தன்மை (Toxicity), மோசமான உணவுப்பழக்கம், தூக்கக்குறைபாடு (Sliip Disorder), நாம் எடுக்கும் மருந்துகள் (Pharma Products) இவையெல்லாம் ஹோர் -மோன்களை தொந்தரவு செய்யும் காரணிகள். எல்லாவற்றையும் விட நாம் கவனித்து விலக்கவேண்டிய ஹோர்மோன் தொந்தரவு காரணி EMR.



மூளையின் உட்பகுதியில் பினியல் சுரப்பி என்ற மிக மென்மையான உணர்வு கொண்ட சுரப்பி உள்ளது. வெளிச்சம் பட்டால்க் கூட பாதிக்கும் தன்மையுள்ள இதைத்தான் நமது முன்னோர் ‘மூன்றாவது கண்’’ என்று சொன்னார்கள். தேவையற்றது என்று கருதப்பட்ட பினியல் சுரப்பி தற்காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. 50 ஆண்டுகளுக்கு முன்னர்தான் ‘மெலட்டனின்’ என்ற ஹோர்மோன் சுரப்பதே கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மெலட்டனின் சுரப்பதற்கு மூலகாரணமே பினியல் சுரப்பி தான் ‘மெலட்டனின்’’ ஒரு அற்புதமான ஹோர்மோன். நமது உடல வளர்ச்சி, தூக்கம், ஆரோக்கியம், மற்றும் புற்றுநோய் எதிர்ப்பாற்றல் போன்றவை இந்த ஹோர்மோனில்தான் அடங்கியுள்ளது. ஒரு மனிதன் நித்திரை செய்யத் துவங்கி 90 நிமிடங்கள் கழித்துத்தான் இந்த ஹோர்மோன் சுரக்கத் தொடங்கும். நடு இராத்திரியில்தான் இதன் அளவு அதிகமாகின்றது. இந்த ஹோர்மான் தான் நமது நித்திரை – விழிப்புச் சுழற்சியை நிர்ணயிக்கின்றது. செல் பிரிதலை ஊக்குவிக்கின்றது. ஈஸ்டரோஜன் சுரப்பதற்கும், மார்புப் புற்றுநோயைத் தடுப்பதற்கும் இந்த ஹோர்மோன் உதவுகின்றது. நோய்க்காரணிகளை அழிக்கவல்ல லிம்போசைட்டுகளை வீரியப்படுத்துகின்றது. விட்டமின் D-யுடன் சேர்ந்து கட்டிகள் வளரவிடாமல் தடுக்கும் ஆற்றல் இந்த ஹோர்மோனுக்கு உள்ளது. எனவே தினந்தோறும் ‘மெலட்டனின்’’ சுரப்பது மிகவும் அவசியமான ஒன்று. ஆனால் நமது படுக்கை அறையில் நாம் வைத்திருக்கும் செல்போன், தொலைபேசி, சி.டி பிளேயர், டிவி, Tape Recorder இன்றும் இதர கருவிகள் மெலட்டனின் உற்பத்தியை கடுமையாகக் குறைக்கின்றது. மெலட்டினின் குறைபாட்டால் மார்பகப் புற்றுநோய், புராஸ்டேட், குடல்புற்று, தோல்புற்று (மெலனோமா), கர்ப்பப்பை புற்றுநோய், இரத்தப்புற்றுநோய் ஏற்படுகின்றன என நிரூபிக்கப்பட்டாயிற்று. இதன் முக்கிய காரணியான EMR மின்காந்த கதிர்வீச்சு உபகரணங்களை நாம் தோழமையோடு சொந்தம் கொண்டாடுவது ஏன்?

செல்போன்கள் அருகே, Cordless phone, தரமில்லாத மின் இணைப்புகள், மின்சார கேபிள்கள், இவற்றின் அருகே தூங்குவதால் இரவுநேர மெலட்டனின் உற்பத்தியை நாம் தடுக்கின்றோம். எலக்ட்ரீஷியன்கள், தொலைத்தொடர்பில் பணிபுரியும் பணியாளர், பொறியாளர் போன்றவர்களைச் சோதித்துப் பார்த்ததில் அனேகர் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டது.

தற்கொலைக்குக் காரணம்: EMR (மின் காந்தக் கதிர்வீச்சு) நியூரோ டிரான்ஸ்மீட்டர் என்று அழைக்கப்படும் நமது உடலின் சிறப்புவகை ஹோர்மோன்களையும் பாதிக்கின்றது. இவற்றுள் செரட்டோனின் மற்றும் டோப்பமின் என்பவை நமது உணர்வுகளை மாற்றக் கூடியது. Depression ஏற்படுவதற்கு முக்கிய காரணமே செரட்டனின் குறைபாடு தான். இது தற்கொலை உணர்வுகளைக் கொண்டுவருகின்றது,

என்ன செய்யலாம்?: நமது செல்போன், மின்னணு சாதனங்களை, வயரில்லாத தொலைபேசிகளை, நமது படுக்கை அறையைவிட்டு எடுத்துவிடுவது குறைந்தபட்ச நடவடிக்கை. நகர எல்லையைக் கடந்து அமைதியான கிராமச் சூழ்நிலையில் வாழ்-வது இன்னும் நலம்பயக்கும். உணவு முறையில் மஞ்சளை அன்றாடம் பயன்படுத்துங்கள். நெல்லிக்காய், வல்லாரை, அருகம் புல், வெள்ளைப்பூண்டு, புதினா, கொத்தமல்லி, வெந்தயம், மிளகு, வெங்காயம் இவைகளைத் தவறாமல் சேர்த்துக் கொள்-ளுங்கள். பொரித்தல், வறுத்தல் போன்ற முறைகளைத் தவிர்த்து அவித்தல், வெதுப்பல் முறைகளிலுள்ள உணவுவகைகளை உட்கொள்ளுங்கள். அதிக மின்னமுத்தம் செல்லக்கூடிய இடங்களின் அருகே வீடுகளை வாங்காதீர்கள். அன்றாடம் பயன்பாட்டில் மின்னணுச் சாதனங்களைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். சுருக்கமாக தமிழரின் பாரம்பரிய வாழ்க்கைமுறைதான் சிறந்தது. Life Style… Life Style!

வாழ்க வளமுடன்!

இரவுத் தூக்கம் இனிதே தழுவட்டும்!

இன்பம் என்றும் எமக்கே உண்டாகட்டும்!

நித்தம் நித்தம் மாறுவது எத்தனையோ…

■ ■ ■



# கோரமான வாயை திறந்து காத்திருக்கும் "எயிட்ஸ் அசுரன்"

## டிசம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினம்

- சிவா சுப்ரா -



கடந்த இருபத்திஆறு வருடங்களில் இருபத்து எட்டு மில்லியன் உயிர்களை பலி எடுத்த நோய் தான் இந்த எயிட்ஸ். இனம், மதம், நாடு, பால் என்று எந்தவித தயவு தாட்சணியமும் இன்றி உயிர்குடிக்கும் ஒரு கொடிய நோய் இந்த எயிட்ஸ். வருங்காலத்தில் இன்னமும் பல கோடி உயிர்களை பலி எடுப்பதற்காக தனது கோரமான வாயை திறந்து வைத்திருக்கின்றது இந்த எயிட்ஸ்.

இந்த நோயில் இருந்து விடுதலை அடைய இதுவரை எந்த மருத்துவமும் கண்டுபிடிக்கப்படவில்லை. டிசம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினமாக கொண்டாடப்படுகின்றது.

ஆங்கிலத்தில் AIDS என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற இந்த நோயின் முழுமையான பெயர் Acquired Immunodeficiency Syndrome என்பாதாகும். இந்த எயிட்ஸ், நோய் உள்ளவர்களின் உயிரை மட்டும் குடிக்காது. மற்றவர்களின் உயிரையும் குடிக்கக் கூடிய கொடிய நோய் இது. இந்த நோய் உள்ளவர்கள் ஒரு தற்கொலை குண்டுதாரி போல் அலைந்து கொண்டிருக்கின்றனர் என்றும் சொல்லலாம். இவர்களிடம் இருந்து நாம் தான் எம்மை காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

இந்த நோய்க்கு காரணமாக இருப்பது HIVஎன்கின்ற வைரசாகும். இது இயற்கையில் உருவாகியதா? இல்லை செயற்கையாக அமெரிக்க உளவுத்துறையால் ரைசியாவுக்கு எதிராக உருவாக்கப்பட்டதா? என்கின்ற விவாதமும், சந்தேகமும் இன்று வரை தொடர்கின்றது. எது எப்படி இருப்பினும் அது இன்று அமெரிக்காவையும் பாதித்துள்ளது.

அமெரிக்காவில் 70,000 பேர் இந்த HIV கிருமியால் பாதிப்படைந்துள்ளனர். அதை விட மோசமான நிலைமை என்ன வென்றால் அமெரிக்காவில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒருவர் இந்த நோயால் தான் பாதிக்கப்பட்டுள்ளேன் என்பதை அறியாமல் இருக்கின்றனர். வேறு சில நாடுகளில் பத்தில் ஏழு பேர் தமக்கு இந்த வைரசு வந்துள்ளதை அறியாமல் இருக்கின்றனர். நீங்கள் கூட இந்த நோயால் பாதிக்கப்பட்டு இருக்கலாம்.

2006ம் ஆண்டு UNAIDS அறிக்கையின் படி ஆசியாவில் பல மில்லியன் மக்கள் HIV யால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிய வந்துள்ளது. இது நமக்கு ஒரு எச்சரிக்கை. பாதுகாப்பு அற்ற பாலியல் தொடர்புகளால் இந்த நோயால் பாதிக்கப்பட்ட பல தமிழர்கள் கனடாவிலும், இலங்கையிலும் மரணம் அடைந்தும் உள்ளனர். இவர்களின் மனைவிகளுக்கும் இந்த நோய் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனில் 760,000 மக்களுக்கு இந்த HIV கிருமி தொற்று உள்ளது. ஐரோப்பா, மற்றும் மத்திய ஆசியாவில் 2.4 மில்லியன் மக்களுக்கு இந்த HIV தொற்று உள்ளது.

பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள் (Vaginal, Anal, and Oral sex), ஒருவர் பாவித்த ஊசியை மற்றவர்கள் பாவிப்பது (போதை மருந்து பாவிப்பவர்கள் பெரும்பாலும் இதை செய்கின்றனர்), தொற்று நீக்கம் செய்யப்படாத ஊசிகளை மருத்துவ நிலையங்களில் பாவிப்பது, இந் நோய் உள்ளவர்களின் இரத்தம் நமது காயப்பட்ட இடங்களில் படுவது, அல்லது நமது உடலில் ஏற்றப்படுவது போன்ற காரணங்களாலும் இந்த நோய் நமக்கு வரலாம். அது மட்டுமல்ல இந்த நோயால் பாதிக்கப்பட்ட தாயின் முலைப் பாலை குடிப்பதாலும் ஒரு குழந்தைக்கு இந்த நோய் வரலாம்.



அதே சமயம் ஒருவரின் கையைப் பிடித்து சந்தோசமாக குலுக்குவதாலோ, ஒருவர் பாவித்த மலசல கூடத்தை இன்னொருவர் பாவிப்பதாலோ, ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக்கொள்ளவதாலோ, நீர்ச்சல் குளத்தை பகிர்ந்து கொள்வதாலோ, சாப்பாட்டுக் கோப்பையை, கரண்டியை பகிர்ந்து கொள்ளவதால் இந்த எயிட்ஸ் நோய் பரவமாட்டாது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த சமயத்தில் ஆவது நீங்கள் பாதுகாப்பு அற்ற பாலியல் தொடர்பை மேற்கொண்டு இருந்தாலோ, அல்லது மேலே நாம் கூறிய விடங்களில் ஏதாவது ஒன்றோடு தொடர்பு கொண்டு இருந்தாலும் நீங்கள் உடனடியாக உங்களை மருத்துவ பரிசீலனைக்கு உள்ளாக்குவது நல்லது. உங்கள் உயிரை பாதுகாப்பாதற்கு இது முக்கியமானது.

உங்களுக்கு HIV கிருமி தொற்று உள்ளதா என்று நீங்கள் கனடாவில் பரிசோதனை செய்து கொள்ள முடியும். இந்த விடயம் இரகசியமாக இருக்கும். உங்களைத் தவிர வேறு ஒருவருக்கும் இது தெரியாது. அவர்கள் தெரியப்படுத்தவும் மாட்டார்கள். நீங்கள் விரும்பினால் பின்வரும் ஏதாவதுஒரு தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்களை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

### Anonymous HIV Testing Sites in Tronto

| | |
|---|---|
| *Public Health | 416-338-7600 |
| *Anishnawbe Health Toronto | 416-360-0486 |
| *Bay Centre for Birth Control, Women's College Hospital | 416-351-3700 |
| *Birth Control & Venereal Disease Information Centre | 416-789-4541 |
| *Central Toronto Community *Health Centres | 416-703-8482 |
| *Centre francophone de Toronto | 416-922-2672 |
| *Hassle Free Clinic - Women's clinic | 416-922-0566 |
| *Hassle Free Clinic - Men's clinic | 416-922-0603 |
| *Rexdale Community Health Centre | 416-744-0066 |

■ ■ ■


# KESAVAN LAW OFFICE



- *Real Estate*
- *Business Law*
- *Immigration Law*
- *Family Law*
- *Last Wills*
- *Power of Attorney*
- *Affidavits*

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
**கேசவன் சட்ட நிறுவனம்**

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

**THANGAVEL M. KESAVAN**
*Barrister & Solicitor*

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
**TEL: (416) 754-9843**
**Fax: (416) 754-2362**


tvi
Tamil Vision Int.
செய்திக்கண்ணோட்டம் - வியாழக்கிழமை இரவு 9:00 மணிக்கு
உங்கள் tvi ல்
வேட்டையாடு விளையாடு திரைப்படம் - வெள்ளி இரவு 9 மணிக்கு
மஸ்தானா மஸ்தானா - சனி பகல் 1 மணிக்கு
FilMinutes (குறுந்திரைப்படப் போட்டி) - சனி ஞாயிறு மாலை 5:30க்கு
பாட்டுக்குப் பாட்டு - சனி இரவு 7:30க்கு
காலைத்தென்றல் - ஞாயிறு காலை 10 மணிக்கு
CROSS ROADS (live) - ஞாயிறு பகல் 1 மணிக்கு
நாதன் நீதன் நேதன் (நாடகம்) - ஞாயிறு இரவு 7 மணிக்கு
உங்கள் விழித்திரைக்கு எங்கள் ஒளித்திரை tvi
To order Call
Tel: 416-593-9300 Or Toll-free: 1-888-836-6834
www.tamilvision.tv
Tvi 50% off for 2 months
ROGERS Channel: 621
Tvi + Basic Channels for only $42.99
$10 Credit for 10 Months
Bell ExpressVu Channel: 707
Tvi + Basic Channels for only $54.99
Or Watch Anywhere in the world
tvi ON LINE DEMAND
www.tviondemand.com


Whatever your dream is ...
Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.
• Up to 100% financing on purchase
• Discounted interest rates O.A.C
• Mtg. computer analysis - amortization schedules
• Second mortgages guaranteed for very low interest rates
• Debt Consolidation to 100% of value
• Mortgage investment opportunities
• Bank refusals restructured
• Real estate project (acquisition + development + construction)
• Residential, Commercial & Industrial
LOOKING AFTER YOUR BEST INTEREST!
SHANJITH (SHAWN) SATKUNANANTHAN
Senior Mortgage Consultant (AMP)
RAJANI SHANJITH
Mortgage Consultant
CENTUM Advance Realty Inc
647.281.1315 (416).290.1200
80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca


என்றும் முதலிடத்தில்
ONE VISION ONE NETWORK
TAMIL ONE
ON THE AIR
FIRST & FAST WITH ONLY தமிழ் CREW
செய்திகள்
தேசிய நிகழ்வுகள்
தாயக பதிவுகள்
TAMIL ONE
TROne
24 மணிநேரமும் உங்களுடன்... அதிரவைக்கும் அலைவரிசை
தொடர்புகளுக்கு 416-299-0118

# M and M CONSULTANTS

**Serving 22years in Canada**
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# SERANDIBTRAVEL1

## AROUND THE WORLD WITH SERANDIB




Serandib Travel1

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# மாங்கிளியும் மரம் கொத்தியும்



திரு மகேசன்

கனடாவில் குளிர் வாட்டி எடுக்கத் தொடங்கிவிட்டது. எழுந்து யன்னல் ஊடாக வெளியே பார்க்கும்போது, தலையே விறைப்பெடுத்துவிடுகிறது. Frozen chicken போல் இனி விறைத்துப்போய், வீட்டினுள் அடைந்து கிடக்க வேண்டியதுதானா என்று எண்ணத் தோன்றுகிறதா? சரி, கனடாவை விடுவோம். ஊருக்குப்போய் வரலாம் என்றால் ரேடியோ, தொலைக்காட்சி எல்லாம் Breaking News என்று குண்டு வெடிப்பைச் சொல்லி - காட்டி, குரல்வளையை நசுக்குகின்றன. போனமுறை ஊர்போனபோது உடுப்பெல்லாம் அள்ளிக் கட்டிக்கொண்டு வந்து கனடாவில் கொட்டி விட உதவிய No Limit இன் Limit ஐயே குண்டு கொண்டுபோய்விட்டது. கொழும்பில கால் வைக்கமுன் பாதி உயிர் போய்விடும். கொழும்பில் உள்ளே போக மிச்சம் சொச்சம் இருந்ததும் போய்விடும். சரி, கொழும்புக்குத்தான் போய்ட்டம் என்று பார்த்தாலும், ஐயையோ, திரும்பவும் பிறேக்கிங் நியூஸ் - வவுனியாவுக்குப் போன யாழ்தேவி இனி அநுராதபுரத்தோட சரியாம். அநுராதபுரத்தில் இறங்கி, பஸ்பிடித்துப் போகவேணுமாம். சனிப் பெயர்ச்சி, குருப் பெயர்ச்சி எல்லாம் ஒண்டாய்க் கூடி நிண்டு கும்மாளம் போடுது! மண்டையைச் சொறிந்துகொண்டு இருந்த வேளையில்தான் வந்து விழுந்தது பாட்டொன்று ரேடியோவிலை... "கடலின் அக்கர போனோரே காணாப் பொன்னிலம் போனோரே போய்வரும்போது என்ன கொண்டுவரும்...". மண்டையில பக்கென்று அப்பத்தான் லைற் எரிந்தது. இருக்கவே இருக்கிறது அழகிய நீளக்கூந்தல் அழகிகள் எம்மை நடனமாடி வரவேற்கும் கேரளா! வாருங்கள் கேரளா போவோம்!

கேரளா என்றவுடன் நாக்கில் ஈரம் ஊறுகிறது. மலையாளக் கரையோரம் தொக்குச் சாப்பாடு எமக்காகத் தொங்கிக் கொண்டிருப்பதாக ஒரு கனவு. இந்தியாவில் பச்சை மாநிலம் என்று பலராலும் விபரிக்கப்படும் கேரளா மாநிலம் எமக்கு சாதகமான சூழலுள்ள ஒரு இடமே. திரும்பிய இடமெல்லாம் பச்சையாய் காட்சியளிக்கும், பூக்கள் பூத்துக் குலுங்கும், பட்சிகள் நாதமிடும். கேரள மண்ணின் மகிமையை மலையாள சேச்சிகளின் கொஞ்சும் தமிழில் வழிகாட்டும்போது கேட்கவா வேண்டும்!

கொச்சின் விமான நிலையத்தில் கால் வைத்தவுடனேயே நமக்கு ஒரு Boost கொடுத்ததுபோல் மனதில் ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம் தொற்றிக்கொள்கிறது. கணீரெனக் காதில் வந்துவிடும் மலையாளக் கொஞ்சும் மொழி நமக்கு ஒரு புத்துணர்வைக் கொடுக்கிறது. உல்லாசப் பயணத்துறையில், ஒரு புரட்சிகரமான முறை கேரளாவில் கையாளப்படுகிறது. வரும் எந்த நாட்டு உல்லாசப் பிரயாணியாக இருந்தாலும் சரி, அவர்களை விமான நிலையத்தில் முகம் மலர 'நமஸ்காரம் சுவாகதம்' (Hello, Welcome) என்று வரவேற்பதற்காக, தமது தேசிய உடை தரித்த மலையாள மங்கைகள், நமது விமானம் தரை இறங்கியவுடன் விமான வாசற்படி அருகே காத்திருக்கிறார்கள். மலையாளம் மட்டு மல்ல, சகல நாட்டுப் மொழிகளையும் சரளமாகப் பேசி எம்மைத் திக்குமுக்காட வைக்கிறார்கள் கேரள மாநில உல்லாசப் பயணத்துறையினர். தமது வருமானத்தில் பெருமளவை உல்லாசப் பயணத் துறையிலேயே இவர்கள் அள்ளிக் குவிக்கிறார்கள். அதற்காக மிகவும் பரிவுடனும், பாசத்துடனும் உல்லாசப் பிரயாணிகள் வரவேற்கப் படுகின்றனர்.

"It is a Purified world" என்று விஞ்ஞானிகளால் பரிந்துரைக்கப்படுகின்றது. நீண்டுயர்ந்த மரங்கள் காற்றைத் தூய்மை செய்து குளிர்சாதனம் இயங்குவது போல் இயற்கையான குளிர்ச்சியை அள்ளி வழங்குகிறது. 41 ஆறுகள் கேரளாவில் குறுக்கறுத்துச் செல்கிறது என்றால் இயற்கைச் செல்வத்தைச் சொல்லவா வேண்டும்! கேரளாவானது இந்தியாவின் 25 வீதமான அரிய தாவர வகைகளில் 15,000 மர வகைகளைக் கொண்டுள்ள மாநிலமாகும். தேக்கு, சந்தனம், Rose wood, மஹோகனி போன்ற விலைமதிக்க முடியாத மரங்கள் இங்கே சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றன. 40,000ஆண்டுகளுக்கு முந்திய மர வகைகள் ஏராளம் உண்டு. மாமரங்களின் வகைகளையும், அதில், கொத்துக் கொத்தாகத் தொங்கும் மாம்பழங்களையும் பார்க்கும் போது, யாழ்ப்பாணத்து மண்ணின் வாசனை தூக்கியடிக்கிறது. தென்னை மரத்து அழகைக் கண்டு நம் கண்களில் கண்ணீர் வருகிறது.



கேரளாவின் சரித்திரத்தைப் பற்றிச் சொல்லும் போது, இது ஆண்டவனால் படைக்கப்பட்டது என்ற ஐதிகமே நிலவுகிறது. மகா விஷ்ணு, மலையின் உச்சியில் இருந்து தனது கோடரியால் கடலில் வெட்டியதாகவும் அப்படி வெட்டப்பட்டு, பெறப்பட்ட துண்டுப் பிரதேசமே கேரளாவாக ஆனதாகவும் கதைகள் சொல்லப்படுகின்றன. கேரளா 560கி.மீ. நீள அளவிலான பிரதேசமாகும். அகழ்வாராய்ச்சி நிபுணர்களின் கருத்துப்படி, கேரளாவின் முதல் குடிமக்கள் வேட்டையாடி வாழ்க்கை நடத்திய Negrito பழங்குடிகளாவர். இவர்களின் பழக்க வழக்கங்கள் அவுஸ்திரேலியாவில் வாழும் பழங்குடி மக்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது.



## - உல்லாசப் பயணக் கட்டுரை -

போத்துக்கீசர்கள் ஐரோப்பாவிலிருந்து கடல் மார்க்கமாக கேரளாவை அடைய வழிவகுத்தவர் வாஸ்கொடகாமா என்பவர். இவர்களின் வரவைத் தொடர்ந்து, கிறிஸ்தவ மதம் கேரளாவில் பரவத் தொடங்கியது. முதலில் நாம் நமது பயணத்தை திருவனந்தபுரத்திலிருந்து ஆரம்பிப்போம். திருவனந்தபுரமே கேரளாவின் தலைநகரமாகும்.



திருவனந்தபுரம் என்பதன் அர்த்தம் The place of the Sacred serpent என்பதே. இதனால்தான் இங்கே புகழ்பூத்த பத்மநாபசுவாமி ஆலயம் கண்களைக் கவர்கிறது. அனந்த சயனத்தில் ஆதிசேசவன் அமர்ந்திருக்கும் இவ்வழகிய ஆலயம் வரலாறு சார்பாக கணிக்கப்படவில்லை. 'திருவனந்தபுரம் சென்றோம்' என்று யாராவது சொன்னால் உலகின் எந்தப் பகுதியில் இருப்பவர்களும் முதலில் கேட்கும் கேள்வி, "பத்மநாதசுவாமி கோவில் போனீர்களா?" என்பதுதான். பாவ பரிகாரங்களுக்கு மிகச் சிறந்த ஆலயமாக விளங்குவதோடு, 'பிரசன்னம்' என்று சொல்லப்படும் சோளி உருட்டி பலன் பார்க்கும் சோதிடக் கலையின் மூலமே இவ்வாலயம்தான். உலகின் மிகப் புகழ்பெற்ற ஜோதிட விற்பன்னர்கள் உருவாகியிருப்பது கேரளாவிலேயாகும். இந்த ஆலயத்தினுள் புகுந்து வெளியில் வரும்போது, உடலில் ஒரு புதிய உயிர் உருவாகியிருப்பதுபோன்ற உணர்வு ஏற்படுகிறது. சங்கு முகம் கடற்கரை இங்கே பிரகாசமாக உல்லாசப் பயணிகளைக் கவர்கிறது. இவை மட்டுமன்றி, Varkala Beach கவர்ச்சிக்குக் குறைவின்றி இருக்கின்றது. ஜனார்த்தன சுவாமி ஆலயம், சிவகிரி போன்ற ஆலயங்களும் பக்தர்களுக்கு மனதில் அமைதி கொடுக்கின்றன.


திருவனந்தபுரத்திலிருந்து 29கி.மீ. தொலைவில் இருக்கும் நாயர் அணைக்கட்டு, Wild life Sanctuary நோக்கி நகர்கின்றோம். 25 கி.மீ. பரப்பளவில் அமைந்திருக்கிறது இந்த வன காப்பகம். அகஸ்திய மலையும், நீர் வீழ்ச்சியும் இந்த வன காப்பகத்திற்கு அழகு சேர்க்கிறது. யானை, கரடி, சிங்கம் ஏன் புலிகள் கூட உண்டு. Lion Safari Park அமைப்பில் அமைந்திருக்கும் இந்த வன விலங்குக் காப்பகத்தில், 4 ஏக்கர் பரப்பளவில் 1977ஆம் ஆண்டு முதலைகள் பண்ணை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. கேரள உல்லாசப் பயணத் துறையினரின் உதவியுடன் நாம் Boat இல் உங்களை அழைத்துச் சென்று மிக அருகில் வன விலங்கு முதல், முதலை வரை கண்டு களிக்கும் பாக்கியத்தை ஏற்படுத்தித் தருகின்றோம். அனைத்து உயிரினங்களுமே எந்த வித கட்டுப்பாடுமின்றி, பகிரங்கமாகவே சுற்றித்திரிவதனால், எம்மை மிகுந்த பாதுகாப்போடுதான் அழைத்துச் செல்கின்றார்கள். இதே Boat இலேயே எம்மை நாயர் அணைக்கட்டுக்குச் சமீபமாகக் கொண்டுசென்று காட்டுவதால், யானைகள் நீரில் குளித்து மகிழும் காட்சியை வெகு அருகில் இருந்து நம்மால் பார்க்க முடிகிறது. சகல வயதினரையும் இப்பிரதேசம் கவர்ந்திழுக்கும்.

திருவனந்தபுரத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் நம்மை திக்குமுக்காட வைக்கும் கோவளம் கடற்கரையானது "Paradise of the south" என்று பலராலும் விபரிக்கப்படுகிறது. கோவளம் ஹோட்டலில் நம்மை, யானையுடனும் இசை பாடல்களுடனும் வரவேற்கிறார்கள் கேரளப் பெண் குட்டிகள். நமக்கு கோவளத்தின் அருமை, பெருமைகளை 4 பேராகப் பிரித்து விளக்குகிறார்கள். அழகிய தமிழில், நம்மைவிட அழகாக அவர்களில் பலர் கோவளத்தை விபரிக்கும் பாணி எம்மைப் புல்லரிக்க வைக்கிறது. 30வருடத்திற்கு முன்னர் கோவளம் "ஹிப்பி"களின் உல்லாசபுரியாக இருந்தது. கோவளம் என்தன் கருத்து "Grove of coconut trees" என்பதாகும். அடர்ந்து செழித்து நிற்கும் தென்னை மரங்களின் ஊடாக காலில் செருப்பின்றி, நாலுமுழ வேட்டியுடன் ஒரு நடை நடக்கும்போது, 'ஆகா, வந்துவிட்டது நமது மண்ணின் அதே வாசனை. எம்மோடு வந்த பலரும் கண்களில் நீர் மல்க 'ஊரிலை நடந்தது மாதிரி இருக்கல்லோ' என்று எமக்குச் சொன்னபோது என் மனமும் கனத்தது. அதிலும் எம்மை இந்தத் தென்னை மரத்திலும் இருத்தி உடனடியாக இறக்கிய இளநீர் பருகக் கொடுத்தபோது, எம்மை மறந்தோம். பனங்கள்ளுப் பிரியர்களுக்கு புத்தம் புதிய தென்னங் கள்ளை காலையிலே கொண்டுவந்து வழங்கி, குஷிப்படுத்துவதோடு, பெரிய றால், நண்டு, மீன் போன்ற கடலுணவு வகைகளையும் கடற்கரையோரத்தில் இருந்து வழங்கி, இன்னமும் களிப்பூட்டுதலைக் கூட்டுகின்றார்கள். "தம்பி, இது கசோரினா பீச்சை அடிச்சிட்டுதடா" என்று சொன்ன முதியவர்கள் பலர் இன்னமும் கோவளத்திற்கு வருடாவருடம் சென்று வருகின்றார்கள். 100 மீற்றர் தூரத்திற்கு நீங்கள் தெளிவான தண்ணீரில் கடல் உயிரினங்களைப் பார்க்கக்கூடியதாக நடந்துசெல்ல முடியும். பல கலாச்சாரப் பின்னணி கொண்டவர்களும் இங்கே எந்தவித பயமுமின்றி உலாவித் திரிவதைப் பார்க்க முடிகிறது. மொத்தத்தில் "மாங்கனியும் மரங்கொத்தியும் வீடு திரும்பத் தடையில்லை. நாங்க மட்டும் உலகத்தில நாடு திரும்ப முடியல்ல" என்றவர்கள் கோவளம் சென்று அந்த நம் மண்ணின் சாயலை சற்று அனுபவித்து வரலாம்!

■ ■ ■

PROPERTY MAX®
HIGHER ACHIEVEMENTS

Realty Inc.Brokerage
203-3321 Mcnicoll Ave, Toronto, ON. M1V 5B3
416.291.3000



Mohan Subramaniyam
Broker Of Record/President
Cell: 416-321-2300

# WIN!!! WIN!!! WIN!!!

## With Property/Max & PMCI

**Top Student award for the year of 2006 - 2007.**

**1st Price -** Top scored first year university student will be awarded with $1,500.00

**2nd Price -** Top scored grade 12 student will be awarded with $1,500.00

*** Some Conditions May Apply ***

Please submit on or before 10th of January, 2007 before 4:00p.m
Please submit your transcript by fax - 416-298-9963, for more information call us @ 416-291-3000

*One stop shopping for all your Real Estate and Mortgage Needs*

PMCI
PROPERTY MORTGAGE CANADA INC
416.332.9464

- New Mortgages
- New Immigrants
- 1st, 2nd Mortgages
- Commercial Mortgage
- Solution for Bad Credit
- Re-Financing
- New Home Buyers

Just Financed By



PMCI

***Please mention PROPERTY/MAX when enquiring about Properties***

# கதவுகள் பலவிதம்



மஞ்சுளா ராஜலிங்கம்

கதவு என்பது ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஒரு இன்றியமையாத, மிகவும் அத்தியாவசியமான, மறுக்க முடியாத பாதுகாப்பாகும். கற்கால மனிதன் குகைகளில் வாழ்ந்த காலங்களில், அவனுக்கு கதவின் முக்கியத்துவத்தைப்பற்றி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனால் காலப் போக்கில் நாகரிகம் முற்றியபோது, பாதுகாப்பு உணர்வும் மனிதனை விட்டு அகல மறுக்க, கட்டடம் என்ற ஒன்று இருந்தால், கதவென்ற ஒன்று இல்லாமல் இல்லை என்பதை அவன் தெளிவாகப் புரிந்து கொண்டான். விதவிதமான கதவுகளை, அளவுகளை, வடிவமைப்புக்களைக் கண்டுபிடித்தான். இன்று ஒரு வீட்டுக்கு முதல் பார்வையே கதவில் தான் படும் என்பதும் ஒரு மறுக்க முடியாத உண்மை. கதவுகளில் பலவிதமான அமைப்புக்கள் உள்ளன, எனினும் அவற்றை இரண்டு பெரும் பிரிவுகளின் கீழ் வரிசைப் படுத்தலாம்.

1. உட்கதவு
2. வெளிக்கதவு

இரு கதவுகளும் அமைக்கப்பட்டுள்ள (அதாவது, கதவுகளின் வெளித்தோற்றம்) நமக்கு முக்கியமல்ல. ஆனால், உள், வெளிக் கதவுகள் அமைந்திருக்கும் அல்லது பூட்டப் பட்டிருக்கும் முறைகள் தான் நமது கண்ணோட்டத்திற்கு மிக முக்கியமானவை. கதவுகளைப் பதிக்கும் விதம், தாங்கிகளின் அமைப்புக்கள் போன்ற வற்றை சற்று விமர்சிப்போம்

வெளிக்கதவு எனப்படுவது கட்டிடத்தின் உள்ளே இருந்து வெளிப்புறத்தை நோக்கித் தள்ளித் திறக்கப் படுவதாகும். இக் கதவுகள் பெரும்பாலும் சின்னச்சின்ன இடையூறுகள், தூசு, ஆபத்தான உயிரினங்கள், ஜீவராசிகள் வடிவத்தில் வீட்டின் உட்புறத்தினை தாக்காதவாறு அல்லது, நுழையாதவாறு அமைக்கப் பட்டிருக்கும். வெளிக்கதவின் ஒரு உயரிய பாதுகாப்புச் சேவை இதுவாம். இம்மாதிரி வெளிக் கதவுகள், அளவில் மிகவும் பருமனாகவும், உறுதியாகவும் செய்யப் பட்டிருக்கும். காரணம், வெளிப்புறக் கதவுகள் எந்த ஒரு கடுமையான சிதைவுகள், பாதிப்புக்கள், அழிவுகள், போன்றவை வெளியிலிருந்து வீட்டின் உட்புறத்தைத் தாக்காதவாறு பாதுகாப்பு வழங்கவே இந்த ஏற்பாடு. இம்மாதிரி வெளிக்கதவுகளைப் பொருத்தியிருக்கும் ஒரு தந்திரத்தின் மூலம், இக்கதவுகள் இலகுவில் திறக்கப்படக் முடியாதவையாகவோ சட்டென்று திருடர்கள் முதலானவர்கள் உள் நுழைய முடியாதபடியோ அமைக்கலாம். அது இம்மாதிரி கதவுகளின் தனித்தன்மையும் மிகுந்த பாதுகாப்பும் ஆகும். “Dutch” கதவு என்று சொல்லப்படும் கதவானது, ஓரிரண்டு சிறப்பு அம்சங்களைக் கொண்டிருக்கும். இந்த “Dutch” கதவுகளில், மேலும் ஒரு சிறு கதவு, சிறிய ஜன்னல் வடிவில் கதவின் கீழ்ப்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில், வீட்டில் நாம் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களாக இருந்தால், உதாரணத்திற்கு நாய், பூனை போன்றவை தம் இஸ்டத்திற்கு, இச்சிறு கதவின் வெளியே உலா சென்று வருவதைக் காணலாம். அது ஒருவித வசதியும் கூட.

உட்கதவுகளின் தனித்தன்மையாவன என்ன? உட்கதவுகள் வீட்டின் அல்லது ஒரு கட்டிடத்தின் ஒவ்வொரு அறைகளையும் அல்லது பல வித பகுதிகளையும் பிரிக்குமாற் போல் அமைக்கப்பட்டிருக்கும். சொந்த, தனிப்பட்ட வீடுகளில் உள்ள கதவுகள் தம்முள்ளே மறைந்திருக்கும் மரத்தின் பெரும்பகுதி அகற்றப்பட்டு, உட்திணிவுகள் வெளியேற்றப்பட்டு, வெறும் பாரமற்ற பலகைகளை மட்டுமே இறுதியில் தமக்குள் செலுத்தி வடிவமைக்கப் பட்டவையாக இருக்கும். இக்கதவுகள் வெளிப்புறக் கதவுகளைப் போல உறுதியானவை கிடையாது. இந்த மாதிரி அமைப்புக்களைக் கொண்ட கதவுகளால் அறைக்கு அறை எந்த பாதுகாப்புமே கிடையாது. பார்க்க அழகாக, அறைகளை, இன்னது இன்னதென்று பிரித்துக் காட்டும். இவை மனத்துக்கு பிரத்தியேகமான, உணர்வைத் தருவனவேயன்றி, பாதுகாப்பதில், எவ்வித செயற்பாடுகளிலும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதில்லை. இவை வசிக்கும் வீடுகளுக்குப் பொருந்தும். ஆனால் பெரிய அலுவலகங்கள், வேலைத் தளங்கள், போன்றவற்றில் இந்த இடத்தில் பொருத்தப்படும் கதவுகள் பாதுகாப்பு, மற்றும் இதர வசதிகளைக் கருத்தில்கொண்டு, வெளிப்புறக் கதவுகளைப் போன்ற உறுதியான மரச் சட்டங்களினால், பொருத்தியமைக்கப் பட்டிருப்பதை பெரும்பாலும் திணைக்களங்களில் காணக் கூடியதாக இருக்கும்.



கதவுகளின் திறக்கப்படும் முறையைக் கொண்டும், கதவுகளை விதவிதமாகப் பாகுபடுத்தலாம். பெரும்பாலான கதவுகள் கொழுக்கிகளின் உதவியைக் கொண்டு பொருத்தப் பட்டிருந்தாலும், இவை பெரும்பாலும் இருபுறம் நோக்கியும் திறக்கக் கூடியதாக சில இடங்களில் அமைக்கப் பட்டிருக்கும் அதாவது, உள்ளிருந்து வெளி நோக்கியும், வெளியிலிருந்து உட்நோக்கியும் தள்ளித் திறக்கக் கூடியதாக அமைந்துள்ள விதம். சில வகையான கதவுகள் மடித்து பூட்டக் கூடியதாக இருக்கும். அத்துடன் இம்மாதிரிக் கதவுகளாவன பல வித பலவித அமைப்புக்களைக் கொண்டும் வடிவமைக்கப் பட்டிருக்கும். நகர்த்தக் கூடிய கண்ணாடிக் கதவுகள், பாரமான இரும்பால் ஆன வெளிக்கதவுகள், மற்றும் பாரம் மிகவும் குறைந்த மடிக்கும் கதவுகள் போன்றவற்றை உதாரணத்துக்குக் கூறலாம்.

ஜன்னல்களைப் போன்றே, கதவுகளும் ஒரு கட்டிட அமைப்பில் ஒரு முக்கியமான பெரும்பங்கை ஆற்றுகின்றன. ஆனால் அதே சமயம், கட்டிடத்திற்கு ஒரு மிகுதியான அழகையும் கொடுக்கின்றன. ஒரு கதவின் இடப் பிடிப்பையும், மூலப்பொருளையும் அதனைப் பொருந்தியிருக்கும் இடத்தைப் பொறுத்து அடையாளம் காணக் கூடியதாக இருந்தாலும், கதவை முதலிலேயே அழகாகச் செய்விப்பதன் மூலம், கட்டிடத்திற்கே ஒரு உயரிய அழகை வெளிக் கொணரலாம். அதாவது, கதவு என்பது பாதுகாப்பு என்ற சட்டத்தை மீறி அழகு என்ற பதத்தையும் கொண்டு வருமானால் தப்பில்லை, மேலும் கட்டிடத்திற்கே பெருமிதம் தான்.

ஆனாலும் கதவின் பொருத்தத்தில் நீங்கள் மேன்மையாகப் பாராட்ட வேண்டிய முக்கிய பகுதி எது தெரியுமா? கதவுகளை மரச் சட்டத்துடன் இணைத்திருக்கும் பிணைச்சல்கள்தான். நீங்கள் எப்போது இதைப்பற்றி கவலைப் பட்டிருப்பீர்கள் அவை கறல் பிடித்து, கதறும் போது, அது உங்கள் சிந்தனையை ஊடறுத்துச் சென்றிருக்கும். ஆவைகளின் கிறீச்சிடும் சத்தம் உங்கள் காதுகளுக்கு ஈயம் காய்ச்சி ஊற்றியது போல் இருக்கும். எவ்வளவு WD40ஐ நீங்கள் அதற்குத் அடித்துவிட்டாலும், இந்தச் சத்தம் நிரந்தரமாய் நின்று விடாது. துரதிஸ்ரவசமாக, கதவின் பிணைப்புக்கள் துருப்பிடித்து, காலப்போக்கில் பழுதடைந்து கொண்டு போவதைத் தடுக்க முடியாது. அவற்றின் இயல்பு அப்படித்தான். அதனாலேயே கிறீச்சிட்ட சத்தமும், இணைப்பே உடைந்து விழுமாற் போன்ற சத்தமும் போகப் போக அதிகரித்துக் கொண்டே போகும். அவற்றின் உழைக்கும் காலம் அவ்வளவு தான். ஏனோதானோ என்று தம் வேலையைச் செய்யும்.

ஒருசில பிணைப்புக்கள் தான் பழுதடைந்திருந்தாலும், நீங்கள் அழகும் பொருத்தமும் பார்க்கும் பட்சத்தில், எல்லாக் கதவுகளின் பிணைப்புக்களையும் மொத்தமாக மாற்றி விடுவதே நல்லது. அத்துடன் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசமாக இருந்தால், பார்க்க பொருத்தமின்றி இருப்பதைவிட, எல்லாம் ஒரே அளவில், வடிவில் இருந்தால், பார்க்க கண்களுக்கு அழகாக இருக்கும்.

கூடியளவு விற்பனைக்கு உள்ள கதவுகள், மாட்டக்கூடிய மாதிரி பிணைப்புக்களைப் பொருத்தியே விற்பனைக்கு வைக்கப் பட்டிருக்கும். இவை பெரும்பாலும் எல்லா வீட்டுக் கதவுகளுக்கும் பூட்டக்கூடியதாக இருக்கும். எனினும் நீங்கள் உங்கள் வீட்டுக் கதவு பொருத்தும் இடத்தை மாற்றி வடிவமைத்திருந்தால், இங்குவாங்கப் பட்டவை உங்கள் வீட்டுத் தற்போதைய மாற்றத்துக்குப் பொருந்தக் கூடியதா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். பிணைப்புக்களைப் பொருத்தும் ஓட்டைகளைப் பார்த்து அவை உங்கள் கதவுடன் பொருந்தக் கூடியதா என சரி பார்த்துக் கொள்வது நல்லது. இதில் உள்ள ஒரு நல்ல விடயம் என்னவெனில் இந்த பிணைப்புக்களைக் கதவுகளின் அளவுக்கேற்றாற் போல் நகர்த்தி சரி பண்ணி, பொருந்தச் செய்யலாம்.

இந்தப் பிணைப்புக்களில் பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று ஓட்டைகள் தான் இருக்கும். எந்த வடிவத்தை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்துத் தான், இவற்றை நீங்கள் பயன் படுத்தும் விதமும் இருக்கும். மூன்று ஓட்டைகள் கொண்ட பிணைப்புக்களையுடைய கதவினை நீங்கள் மாற்றுகிறீர்கள் என்றால், நீங்கள் முதலில் நடு ஓட்டையில் ஆணியைப் போட்டுப் பிணைக்கவேண்டும். இரண்டாவதாக, அடியில் உள்ள ஓட்டையில் அடுத்த ஆணியைப் போட்டு கதவைப் பொருத்த வேண்டும். கடைசியாகத் தான் மேல் ஓட்டையின் இணைப்பைப் பொருத்த வேண்டும். இதை அலமாரிகளுக்குரிய கதவுகளில் பொருத்தும் பொழுதும் இந்த முறையை நீங்கள் பின்பற்றலாம். இதன் மூலம் கதவு சரிநேராக இருப்பதுடன் கதவைச் சுலபமாகப் பொருத்தவும் முடியும். இரண்டு ஓட்டைகளைக் கொண்ட கதவுகளாக இருப்பின், இந்த வேலை சற்றுச் சிரமத்தைக் கொடுக்கக் கூடும். இதை எப்படி இலகுவாக்குவதென்றால், இன்னொருவரின் உதவியை இதில் நாடினால், உங்கள் வேலைப்பளு மிகவும் இலகுவாகி விடும். ஒருவர் கதவைப்பிடிக்க மற்றவர் ஆணிகளை சரியான இடத்தில் மாட்ட வேண்டியது தான். வேண்டுமானால், அந்தக் கதவை எதிலாவது சார்ந்து கொள்ளக்கூடிய மாதிரி அடியில் கனம் கொடுத்தீர்களானால், உங்களுக்கும் மிகவும் இலகுவாக இருக்கும்.

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# 2008 இல் தனிநாடு...



மாமூலன்

1ம் பக்கத் தொடர்ச்சி...

குழப்பநிலை ஏற்படாதிருப்பது அமெரிக்க அரசு எடுக்கும் நிலைப்பாட்டில்தான் தங்கியுள்ளது என்று செர்பியா தரப்பு கூறியுள்ளது.

## இது ஒரு வகையான மிரட்டலாகும்.

ரசியாவின் ஆதரவுடன் இருக்கும் செர்பியா தனக்கு அருகில் உள்ள துருக்கி முதலான நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துவிட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறது.

அதன் உள்ளங்கைக்குள் இருக்கும் சொசோவோவும் பிரிக்கப்பட்டுவிட்டால் கோதி வைக்கப்பட்ட மாங்கனியின் நிலையில் செர்பியாவின் நிலப்பகுதி இருக்கும். சுற்றிவுமுள்ள நாடுகள் அனைத்தும் ரசியாவுடன் முரண்பட்டு நிற்கின்றன என்பதனையும் இங்கு ஒப்பு நோக்கவேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து வந்த பேச்சு வாரத்தை முறிந்துபோன்து கடந்த கிழமையில்தான்.

பேச்சு வார்த்தை முறிந்தபின்னர் 'எமது நிலத்தில் ஒரு சிறு அங்குலத்தையும் விட்டுத்தரமாட்டோம்' என்றது செர்பியத் தரப்பு.

'நாங்கள் இன்னும் 100 ஆண்டுகளும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார். ஆனால் தனி நாடு என்ற எங்கள் கோரிக்கையில் இருந்து இறங்கிவரமாட்டோம்' என்கிறது கொசோவோத் தரப்பு.

## ஐ.நா. தலையீடு:

1999இல் ஐநாவின் கண்காணிப்புக்குழு கொசோவோப் பகுதியில் பொறுப்பேற்றது. 2001இல் கோசோவோவில் 120உறுப்பினர் கொண்ட ஓர் அரசை அமைக்கலாம் என்பதற்கான அனுதியை ஐ.நாவின் கண்காணிப்புக் குழு வழங்கியது.

ஐநாவின் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட கோசோவா தீர்மானம் எண் 1244 படியே கொசோவாவின் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஐ.நா. தலையிட்டது.

அதன் வழியாகவே 2006 இல் கோசோவோவின் சிக்கலைத் தீர்ப்பதற்கு 'இறுதி முடிவெடுப்பது' என்ற வகையில் அண்மைய பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. ஐ.நாவும் ஐரோப்பிய ஒன்றியமும் அண்டை நாடுகளும் பேச்சு வார்தைகளை ஒழுங்குபடுத்தின.

தற்போது முறிந்துவிட்ட பேச்சுவார்த்தையால் அல்லது இப்படித்தான் சென்று முடியும் என்று தீர்மானிக்கப்பட்ட பேச்சுவாரத்தை முறிந்து விட்டதால் கொசோவா தனது கூட்டாளி நாடுகளின் துணையுடன் தனது சுயாட்சியை அல்லது விடுதலையை அறிவிக்கப்போகின்றது. அந்த அறிவிப்பு 2008 இன் முற்பகுதியில் வரலாம் என நம்பப்படுகிறது. அரசியல்யாப்பு முதலான தயாரிப்பு வேலைகளுக்கே இந்தத் தவணை எனப்படுகிறது.



நேட்டோ செயலாளர் நாயகத்துடன் கொசோவா பிரதமரும் ஜனாதிபதி Dr.Fatmir Sejdiu யும்.

## துருக்கி-ஒட்டோமான் பேரரசு:

இந்த அறிவிப்பினால் ஐரோப்பிய ஒன்றியத் திற்குள்ளேயே முறுகல் நிலை வரலாம் என்பதும் வெளிப்படுகிறது. ஐ.ஒன்றியத்தின் படைகள் நேட்டோ படைகளுடன் சேர்ந்து பிரியப்போகும் கொசோவோவின் பகுதிகளை பாதுகாக்க அல்லது கண்காணிக்க உள்ளன.

ஆனால் கொசோவோவில் இந்த நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடான துருக்கி தனது எதிர்ப்பை மறைமுகமாகச் செலுத்தி வருகிறது.

59ம் பக்கம் பார்க்க...

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION
Tirunelveli - 627 012 Tamil Nadu E-Mail: tvl_distance@sancharnet.in Ph: (0462) 2321620, 2321614

தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி
TAMIL ACADEMY OF CULTURE & TECHNOLOGY

ADMISSION NOTIFICATION (ACADEMIC YEAR 2007- 2008)

I. UNDER GRADUATE COURSES - 3 YEARS -BACHELORS-
Eligibility: (A/L Pass / +2 Pass / its equivalent)

| | | | | |
|---|---|---|---|---|
| B.A. | 1. Tamil | 3. Music | 5.History * | 7.B.Com* |
| | 2. English | 4. B.Litt Tamil | 6. B.C.A. | 8. B.B.A |

II. POST GRADUATE COURSES - 2 YEARS - MASTERS -

M.A 2 years 1. Tamil Eligibility: (Any degree with part I Tamil)
2. English (Any degree with part II English)
M.Com * 2 years Eligibility: (B.Com. / B.B.A. / B.B.M / M.B.A. )

M.PHIL. Eligibility: PG with 50% in the discipline concerned.

| | | | |
|---|---|---|---|
| 1.Tamil | 3.History * | 5.Commerce | |
| 2. English | 4.Education | 6. Mathematics | |

III. DIPLOMA COURSES
DIPLOMA in... (Eligiblity: A/L Pass / +2 Pass / its equivalent)

| | | |
|---|---|---|
| 1.FunctionalTamil | 3.Epigraphy | 5.Art Music |
| 2.Functional English | 4. Devotional Music | 6.Hotel Management |

IV. OTHER COURSES *
1. Bachelor of Library and Information Science

V. CERTIFICATE COURSES * 1 year
CERTIFICATE Eligibility: Xth Std/Equivalent , Eligibility: +2 / Equivalent
1.Music #

புலம்பெயர்வு மண்ணிலிருந்து மட்டுமல்ல எங்களைக் கல்வியிருந்தும் தூரத்திருக்கிறது.

கனடாவில் விருப்புக்காக மட்டும் கல்வி கற்க முடியாதவாறு கல்விக் கட்டணமும் பணி நெருக்கடியும் இருக்கின்றன.

பாதியில் தொலைந்துபோன கல்விக் கனவுகளை மீட்டுத் தருவதற்காக இந்த அஞ்சல் வழிக் கல்வி தொடக்கப்பெற்றிருக்கிறது.

கல்விக் கதவுகள் கனடாத் தமிழருக்காகத் திறக்கப்பட்டிருக்கின்றன.

தமிழருக்காக இயங்கிவரும் தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி கல்விப்பயனைப் பெற மகிழ்வுடன் உங்களை அழைக்கிறது

' விட்டுப்போன கல்வியைத் தொடரலாம் வீட்டிலிருந்தே அலைவுறும் படிக்கலாம் '

தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி
TAMIL ACADEMY OF CULTURE & TECHNOLOGY
3150 EGLINTON AVE. E, # 6,
SCARBOROUGH, ON M1J 2H2
TEL: 416 757 9601 FAX: 416 757 2006
www.tamilacademy.org
REG.#: 1506103

* Tamil & English Medium

தொடர்பு : Email: disted@tamilacademy.org
416 757 1870 | 416 757 9601 | 416 757 2541
(திங்கள் முதல் வெள்ளி: காலை 10:00 - மாலை 9:00 )

# 2008ல் தனிநாடு...

58ம் பக்கத் தொடர்ச்சி...

துருக்கியில்தான் முந்நாள் கொசோவோ வின் ஆதிக்கநாடான ஒட்டோமான் பேரரசு

அமைந்திருந்தது முதலாவது காரணம். துருக்கி 1974 இல் கைப்பற்றிய சைப்பிரசு தீவுகள் குறித் சர்ச்சையில் தற்போது கண்காணிப்பில் இருக்கும் கூட்டுப்படைகள் பற்றிய கேள்வியை துருக்கி தவிர்க்க விரும்புகிறது என்பது இரண்டாவது காரணம். அல்லது சைப்பிரசும் தன்னாட்சி நிலைக்கு வந்துவிடக்கூடாது என்று துருக்கி விரும்புவதும் எனலாம். துருக்கியும் ஓர் இசுலாமிய மதப் பெரும்பான்மையுடைய நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## பின்புலம்:

கொசோவோவின் மக்கள் தொகை 18 லட்சமாகும். அதில் கணிசமானோர் அகதிக ளாகவும் பிற நாடுகளிலும் வாழுகின்றனர்.

அல்பானிய இனத்தவர் அதிகமாகவுள்ள கொசோவோவில் ஒட்டோமான் பேரரசு அதைக் கையகப்படுத்தும் முன்னர் கிறித்த வரும் முசுலிம்களும் சரிக்குச் சரி இருந்த னர். துருக்கியின் ஒட்டோமான் பேரரசின் வீழ்ச்சி பல கிறித்தவர்களைப் படிப்படியாக வெளியேற வைத்து முசுலிம் பெரும்பான்மையை உருவாக்கி வைத்துள்ளது.

செர்பிய கிறித்தவர்கள் சிறுபான்மையினராக வாழுகின்றனர். ஆனால் தற்போதைய கொசோவோப் பகுதிக்குள் பெருந்தொகைச் செர்பியர்கள் மக்கள் ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் குடிபெயர்ந்து வந்து தங்கியுள்ள சான்றுகள் உள்ளன.

ஆக கொசோவோவின் விடுதலை முழக்கத் துக்குப்பின்னால் எந்நதவொரு 'இன' அடையாளமும் தனிமுனைப்பாக இல்லை. அது மதமாகவே இருக்கின்றது. அதே வேளை அது முசுலிம் மதமாகவும் இருக்கின் றது. அதாவது அல்பானிய இனத்து முசுலிம்கள்.

இருப்பினும் கூட முசுலிம் நாடுகள் பல வற்றில் பல வகைகளிலும் தனது காலை வைத்துள்ள அமெரிகாவும் அதன் கூட்டாளி நாடுகளும் கொசோவோவில் முசுலிம் இனத்தவருக்குச் சார்பாக தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்று அதன் சுதந்திரத்தை அங்கீகரிப்பதுதான் வெளிப்படையாகப் பார்த்தால் அரசியல் ஆச்சரியம்.

ஆனால் எனக்கு மூக்குப் போனாலும் போகட்டும் எதிரிக்குச் சகுனப் பிழையாக இருக்கவேணும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் சோவியத்தின் உருவமாகவே தற்போதைய ரசியாவைப் பார்க்கின்ற மனப்பாங்குதான் இங்கு ஆதிக்கம் செலுத்து கின்றது.

## நிலவியல் அரசியல்:

வெண்கல நாகரீகக் காலத்திலேயே மனிதர் வாழ்ந்த சான்றுகளைக்கொண்ட கொசோவோ கி.பி. நான்காவது நூற்றாண்டிலிருந்து இன்றுவரை அடிமைப்பட்டே கிடக்கிறது. கொசோவோவுக்கென்று தனியான அரசுகள் அமைந்திருந்ததற்கான வரலாற்றுச்சான்று கள் இல்லை.

நான்காவது நூற்றாண்டில் அலெக்சாந்தரி னால் கைப்பற்றப்பட்டு பின்னர் தொடர்ந்து இன்றுவரை மாறிமாறி ஏதாவது ஓர் பிற அரசுகளின் ஆதிக்கத்திலேயே கொசோவோ இருந்து வருகின்றது.

ஒட்டோமான் அரசின் வீழ்ச்சி வரை அதாவது இரண்டாவது உலகப்போருக்குச் சற்று முன்னான ஆண்டுகள்வரை கொசோவா ஒட்டோமான் பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது. இடையில் 3ஆண்டுகள் இத்தாலியின் பிடியில் இருந்த பால்கன் பகுதிகள் பல இரண்டாவது உலகப் போரின் பின்னர் ரசியாவின் பிடியில் வந்தன.

முன்னாள் சோவியத் ரசியாவின் பிடிக்குள் இருந்த யுகோசுலாவியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பால்கன் நாடுகளில் உள்ள மக்கள் தங்கள் இனக்குழுக்களின் அடிப்ப டையில் பிரியத் தொடங்கினார்கள்.

யுகோசுலாவியா, சுலோவானியா, மசெடோனியா, பெசுனியா மற்றும் கெர்சகோவினா எனப்பிரிந்தது. அதேவேளைளை தற்போதைய செர்பியாவும் மொன்ரநீக்ரோவும் சேர்ந்து யுகோலாவியக் குடியரசாகியது. இதில்தான் செர்பிடன் மிகைலோவிச் என்று அண்மையில் உல அரங்கில் தனது அரசியல் குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டவர் தலைவராக இருந்தார்.

முன்னர் இருந்த சோவியத் 'யுகோசுலாவியாவை உறுதியாக வைத்திருக்க (அப்போதைய) செர்பியா பலமற்றதாக இருக்க வேண்டும்.' செர்பியா பலமற்றதாக இருக்க கொசோவோவுக்கு சிறிது பலத்தைக் கொடுக்க வேண்டும் என அப்போதைய தலைவர் மார்சல் டிட்டோ முடிவு செய்ததன் விளைவாகவே தோன்றியது கோசோவோவுக்கான அதிக அதிகாரம்.

1980 களில் சிறு பான்மை செர்பியர்கள் வசிக்கும் சொசோவோவில் முறுகல் இருந் தது. நடுவு நிலை வகித்து பேச்சுவாரத்தை ஏற்படுத்த அப்போதைய அமைச்சரான மிகைலோவிச் வந்தார். அங்கு எதிர்ப்புக் குரல் காட்டிய செர்பியர்களை கொசோவோ காவல் துறை தடிகளால் தாக்கியது. 'செர்பியர்களை ஒருவரும் தாக்க விடமாட் டேன்' என்றார் மிகைலோவிச். அந்த இனவாத உணர்வூட்டலால் செர்பியர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் அதிபரானார் மிகைலோவிச்.

அந்த இனவாத உணர்வூட்டலின் மறுதலை விளைவாக உருவானது தனியான கொசோவோ என்ற எண்ணம். அப்போதைய செர்பியாவின் ஒரு மாகாணம் தான் தற்போது விடுதலையைச் சுதந்திரத்தை அறிவிக்க இருக்கும் கொசோவா.

## விடுதலையின் விளிம்பில்:

கொசோவோ பெருளாதாரா வகையில் எவ்வித சிறப்பான உற்பத்திகளையும் பிண்ணிகளையும் கொண்டதல்ல. ஆயினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வணிகப்போக்கு வரத்தின் மையமாக உள்ளது. மற்றும் பால்கன் பகுதியில் ரசியாவிலிருந்து வேறுபட்டு நிற்கக் கூடிய நாடாகவும் உள்ளது. நிலக்கரியையும் சில பிற கனி வளங்களையும் தவிர நாட்டில் தோண்டியெடுக்கவும் எதுமில்லை. இதைத்தவிரவும் எவ்வித பொருளாதார முதன்மையும் கொசோவா வின் விடுதலைக்கு கொடுக்கப்பட முடியாததே. இதுவரைநாளும் சோவியத் சார்ந்த யுகோசுலாவியாவின் சிறப்பு நிதி உதவியில் இருந்த பகுதி.

கொசோவோவின் நிலப்பகுதி 4 ஆயிரம் சதுர மைல்கள் மட்டுமே. மக்கள் தொகை 18 லட்சம்.

ஆயினும் கொசோவோ தனது சுதந்திரத்தை, விடுதலையை, தன்னாட்சியை மிக உறுதி யாக 2008இல் அறிவிக்கிறது.

இங்கு சில நாடுகளின் பெயர்களை மட்டும் மாற்றிப் போட்டால் உலகெங்கும் நடக்கும் பல பகுதிகளின் அரசியல் நடவடிக்கைகள் பொருந்தி வரும். வாய்ப்பாடு எங்கும் ஒன்றுதான். அமெரிக்கா, ரசியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பல புறக் காரணிகளின் விருப்பு வெறுப்புக்கள்தான் முடிவுகளைத் தீர்மானிக்கின்றன.

இந்நாடுகளின் ஆதரவுநிலையை வெல்வதே இன்றைய உலகப் போக்கில் உண்மை யான அரசியல் வெற்றி.

அதைச் சாதித்திருக்கிறது கொசோவோ. அல்லது கொசோவோவின் புறச்சூழல் (ரசியா என்ற அமெரிக்க எதிரி) அதைக் கொசோவோவுக்குச் சாதித்து தந்திருக்கிறது.

■ ■ ■

LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS
"Dedicated and determined to provide the best results for your personal injury claims"
30 மில்லியன் டொலர்கள்
2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்

• வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
• விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
• உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
• காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
• இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?


Rocky Lofranco
Senior Partner
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
LOFRANCO CHAGPAR
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்
தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
இலங்கதாஸ் பத்மநாதன்
TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York
416 223-8333
MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1
905 275-8806
FREEE CONSULTATION
LANKATHAS PATHMANATHAN
416 774-8122
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER


Miss Tamil Toronto
PRESENTED BY
Arajen
BEAUTY CENTER
Queen of Angels 2007
DEC
16
sunday
5.30 pm
@Princess Banquet Hall
3330, Pharmacy Ave. Scarborough, ON. M1W 2V8
To participate & for more info:
416.261.0019, 416.509.7978



Your Neighbourhood Real Estate Specialist ...
At Your Service
Sell
Buy
Lease
Residential
Commercial
Sale of Business
I Can Help You With Arranging Mortgage / Financing
Lawyers Appraisals Home Inspections
And All Other Aspects of Your Real Estate Needs
Darshan
Sivaanadarajah
Sales Representative
Mobile: 416 414 4589
24Hrs: 416 491 4002


MOBILE MORTGAGE SPECIALIST
I will Serve You at Your Preferred Location
Good Credit - Bad Credit - No Credit
New Immigrants - Bankruptcy - 0% Down
NO PROBLEM!
Suresh Nand
Direct: 647 888 2663
Tel: 416 292 0394
Fax: 647 477 8342


Universal Window Decor
Sutha
Tel: 416-895-4859


MORTGAGE LOAN
J.R.B
UNIVERSAL INC.
R.R.Rajkumar 416-937-9081
416-752-7555


RE/MAX
Cell: 647 836 6502
Office: 416 293 1100
Fax: 416 293 6700


We Can STOP Collection Agencies Calling and Harrasing
Credit Reform Canada
416-264-1010


ONE STOP REAL ESTATE & MORTGAGE NEEDS
PROPERTY MAX
Realty Inc. Brokerage
1st Office in Canada
• RESIDENTIAL
• COMMERCIAL
• INVESTMENT
416.321.2300
416.857.1780
www.themohan.com



SOUTH ASIYAN SUPERMARKET
CONVENIENCE & VIDEO



DR.(MRS.) VASANTHAKUMAR


ScotiaMcLeod


MAHEN SINGARAJAH


AUTO INC.


BANU JEWELLERY INC.


MELENI DAVID


ROYAL LEPAGE


Indran Sweets


Are you facing a criminal charge?
Call me direct
Jude Anthonypillai


RANI MAHAL
Takeout & Catering
Santha
416 757 4494
416 499 1994
1201 Ellesmere Rd
Ellesmere & Midland
www.ranimahal.com


JET TRAVELS
N. Sathasivam (Sivam)


Quality Professional Remodeling

# மாகோஸா கடன் ஒன்றியம் (Margosa Credit Union)

## ஓர் புதிய உதயம்

ஒன்ராறியோவில் வசிக்கும் கனேடிய இலங்கையருக்கான ஒரு கடன் உதவி சங்கம் கடந்த செப்டம்பர் 12 2007அன்று உருவாக்கப்பட்டது. இப்படியான ஒரு அமைப்பு 7வருடங்களுக்குப்பின் ஒன்ராறியோ அரசாங்க அனுமதியுடன் உருவானது நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி.

இலங்கை மக்கள் குறிப்பாக புதிய குடிவரவாளர்கள் (New immigrants), வயது முதிர்ந்தவர்கள் (Seniors), சிறிய வியாபார உரிமையாளர்கள் ஆகியோர் சிறியளவில் கடன் பெறுவதற்கும், அதிக வட்டி அறவிடும் பிரதான வங்கிகள் மற்றும் கடன் வழங்குவோரில் தங்கியிருக்கக் கூடாது, எமது தாய்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் இருப்பதைப் போல கனடாவிலும் இலங்கை மக்களுக்காக கடன் நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என எண்ணிய சில தனிநபர்களின் தூரநோக்கே இந்த மாகோஸா கடன் ஒன்றியமாகும்.

இதனடிப்படையில் உருவான மாகோஸா கடன் ஒன்றியமானது ஒன்ராறியோவின் நிதி சேவை ஆணைக்குழுவின் (Financial Services Commission of Ontario –FSCO) அனுமதியைப் பெற்று செப்டம்பர் 28, 2007இல் ஒருங்கிணைக்கப்பட்டது (Incorporated). கனடாவின் ஒன்ராறியோவில் இருக்கும் இலங்கை மக்கள் சமூகத்திற்காக முதன் முதலில் உருவாக்கப்பட்ட கிரெடிட் யூனியன் இதுவாகும்.

இலங்கை மக்களாகிய உங்களுக்கு கூட்டுறவு நிதி தொடர்பாக நன்கு பரிச்சயமுண்டு. ஓர் கடன் ஒன்றியத்தின் தனிப்பட்ட அங்கத்தவரின் நலன்கள் எப்போதும் முதன்மைப்படுத்தப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் கடன் ஒன்றியங்கள் அங்கத்தவர் - உரிமை (Member – right) கொண்டவை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இத்தன்மையானது கடன் ஒன்றியங்களை வங்கிகளில் இருந்து சிறப்பாக வேறுபடுத்திக் காட்டுகின்றது.

பொதுவாக $100 இற்கு ஓர் அங்கத்துவ கட்டணம் (Member fee)வாங்குவதன் மூலம் அங்கத்தவர்/ வாடிக்கையாளர் கடன் ஒன்றியத்தின் (Credit Union)அனைத்து வங்கி சலுகைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஓர் புதிய கடன் ஒன்றியத்திற்கு அங்கத்துவ பணத்தை விட அதிக முதல் தேவைப்படுகின்றது. ஈடு போன்ற ஒவ்வொரு $1000 பெறுமதியான சொத்துகட்கும் கடன் ஒன்றியமானது சட்டத்தின்படி (By Law) குறைந்தது $50ஐ பிடித்து வைக்க வேண்டும். மாகோசாவின் முதலாம் வருடத்தில் ஈடுகள் மற்றும் கடன்களில் $4மில்லியனாகவும் 5ஆம் வருடத்தில் $3.5மில்லியனாகவும் மாகோசாவின் முதல் வளர்ச்சியடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தான் கடன் ஒன்றியமும் Caisses Popularities சட்டமும் அங்கத்தவர்கட்கு முதலீட்டு பங்குகளை விற்பதன் மூலம் மேலதிக முதலை திரட்ட இடம் கொடுக்கிறது. ஒன்ராறியோவில் உள்ள கடன் ஒன்றியங்கள் இம்முறையைப் பயன்படுத்தி வெற்றிகரமாக வளர்ச்சி கண்டுள்ளன. புத்தம் புதிய கடன் ஒன்றியத்திற்கு இக்கதை வேறுமாதிரியாக இருக்கும். முதலீட்டு பங்குமூலம் அத்தியாவசியமான ஆரம்ப முதலை திரட்டுவதே சரியான வழிமுறையாகும். இதன்மூலம் வைப்புகளைப் பெற்று கடன்களை வழங்கக் கூடியதாக இருக்கும்.

### முதலீட்டுப் பங்குகள்

செப்டம்பர் 2007இல் ஆரம்பித்து ஓர் வரையறுக்கப்பட்ட காலம் மார்ச் 2008வரை மாகோஸா கடன் ஒன்றியத்தின் அங்கத்தவர்கட்கு மட்டுமே கிடைக்கக் கூடியதான ஓர் புதிய முதலீட்டு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. மாகோஸாவில் முதலீட்டு பங்குகள் உச்ச வட்டி வீதத்தைக் கொடுக்கும். இன்றைய குறைந்த வட்டிவீத சூழலில் இது கவர்ச்சிகரமானது. நொவம்பரின் ஆரம்பத்தில் தற்போதைய வீதத்தை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் வீதம் 5.2% மாக இருக்கும்.

மாகோஸாவானது அதன் அங்கத்தவர்கள் வாங்கக் கூடியதாக A வகுப்பு பங்குகள், B வகுப்பு பங்குகள் என 2 வகையான முதலீட்டுப் பங்குகளை உருவாக்கும். நீங்கள் வேறு வங்கிகளில் RRSP முதலீடு செய்திருந்தால் அம்முதலீடுகளை மாகோஸா கடன் ஒன்றியத்திற்கு மாற்றுவதன் மூலம் அத்தொகையின் பெறுமதிக்கு மாகோஸா கடன் ஒன்றியத்தில் பங்குகளை வாங்கலாம்.

**Aவகுப்பு பங்குகள்: (A class shares):** இது ஆகக் குறைந்தது $500 இற்கும் ($1 பெறுமதியான 500பங்குகள்) ஆகக் கூடியது ($1 பெறுமதியான 5000 பங்குகள்) $5000 இற்கும் வாங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டன. இதன் பங்கிலாபங்கள் திரளக்கூடியவை. எனவே ஆரம்ப வருடங்களில் மாகோஸா உறுதியான இலாபத்தன்மையை அடையும் வரை வெளிப்படுத்தப்படாத எந்த பங்கிலாபமும் பிந்திய வருடங்களில் வெளிக்கொணரப்படும்.

**- மகேன் சிங்கராஜா -**

**B வகுப்பு பங்குகள் (B class shares):** இவை ஆகக் குறைந்த சந்தா அளவாக $5000 உம் அதிகூடியதாக $25000ஐயும் கொண்டிருக்கும். கடன் ஒன்றியம் தாபிக்கப்படுவதற்கு உதவும் ஆவலால் உந்தப்படும் முன்னணியில்இருக்கும் வர்த்தகஉரிமையாளர்கள், தொழில்சார் நிபுணர்கள், ஏனைய சமூக தலைவர்கள் பொதுவாக இவ்வகையான பங்குகளை வாங்க விரும்புவர்.

இந்நிறுவனம் பற்றி அறிதல் இலங்கை மக்கள் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் இலாபமடையச் செய்வதுடன் $1.5 மில்லியன் சேர்க்கப்படும்வரை இந்நிறுவனம் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது என்பதையும் உணர வேண்டும். செல்வந்த முதலீட்டாளர்கள் அதிகளவு

63ம் பக்கம் பார்க்க...



# கிறிஸ்மஸ் மர அலங்காரம்

நத்தார் அலங்கார மரத்தை அலங்கரிக்கும் முறையைக் கொஞ்சம் மாற்றி அழகு படுத்திப் பார்த்தால் என்ன? உங்கள் கற்பனா சக்தியை தாராளமாக பயன் படுத்துங்கள். இம்மாதிரி நத்தார் விடுமுறையில் தான் உங்களுக்குப் பிடித்த அலங்கார, தொங்கும் பொருட்களை விரும்பியபடி அழகழகாக வரிசைப்படுத்தி கண் கொள்ளா அழகிய கிறிஸ்மஸ் மரத்தை உருவாக்கலாம். மற்றவர் பார்த்து மிகவும் பாராட்டக் கூடிய ஒரு விடயமாக இது இருக்குமல்லவா? உங்கள் கலையார்வத்தையும், கற்பனை-யையும் அதில் வெளிக் கொணரலாம். இங்கு கொடுக்கப் பட்டுள்ள குறிப்புக்களை ஒருவாறு படித்து அதன்படி முடிந்தளவு, உங்கள் மரத்தை அழகு படுத்த முயன்று பாருங்கள். பாராட்டை கேட்காமலே பெறு வீர்கள்.

**- சுகன் சிவராஜா -**

## தேவையான பொருட்கள்

- ஒரு கிறிஸ்துமஸ் மரம் (அளவில் ஏழரை அடி உயரம் இருக்கலாம் - இயற்கை, செயற்கை மரம் எதுவானாலும் பரவாயில்லை)
- சின்னஞ்சிறு வெள்ளை ஒளியைத் தரக் கூடிய மின்குமிழ்கள் (25 பெட்டிகளை வாங்குங்கள், அவற்றில் ஒவ்வொரு பெட்டியிலும் 70 மின்குமிழ்கள் இருக்க வேண்டும்)
- அழகிய நிற நாடாக்கள் (சிகப்பில் இருந்தால் மிகவும் எடுப்பாக இருக்கும். ஒவ்வொன்றும் 9யாராக இருக்க வேண்டும், ஒவ்வொரு முடிச்சுக்கும்
- 36கண்ணாடிப் பந்துகள் - சிறிய, பெரிய, மிகப்பெரிய அளவுகளில் ( பாரம்பரிய மர அலங்கரிப்பு முறைக்கு இது மிகவும் அழகு சேர்க்கும்)
- 36விதவிதமான தொங்கட்டான்கள் சிறிய, பெரிய, மிகப்பெரிய அளவுகளில்
- 15 இன்னும் வித்தியாசமான அழகு தொங்கு சாதனங்கள்

இரண்டாவது வகை அலங்கார மர வகைக்கு மெருகூட்டும் மற்றைய அலங்காரங்களாவன:

- 42 பூத்தண்டுகள் - மூன்றிலிருந்து ஐந்து விட்டம் வரையிலானவை (இதில் தான் சின்னச் சின்ன உருவங்களைத் தொங்க விடலாம்)
- கலர் நாடா – 20 யார்கள் (மரத்தைச் சுற்றிப் படர விடுவதற்கு)
- 10 அளவில் மிகவும் பெரியதான தொங்கு அலங்காரப் பொருட்கள் - தேவதைகள், வயலின் போன்ற உருவகங்கள்

மரத்தைச் சுற்றி அலங்கரிக்கும் மின்குமிழ்களை இன்னது தான் என்ற அளவில் எத்தனை குமிழ்கள் உள்ளன என்ற கணக்கை வைத்துக் கொள்ளாதீர்கள். எவ்வளவுக்கெவ்வளவு, மின்குமிழ்களின் எண்ணிக்கையைக் கூட்டுகின்றீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உங்கள் மரமானது சொல்-லொணா அழகுடன் மிளிரும். பார்க்க மிகவும் ரம்மியமாக இருக்கும்.

சின்னஞ்சிறு அழகிய மின்குமிழ்களையே எப்பொழுதும் வாங்குங்கள். மின்சாரக் குமிழ்கள் முன்னமேயே உங்களிடம் இருந்தால் அது வேறு கதை, இவை தான் இன்று மிகவும் பிரபல்யமானவை. இவை மரத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் எந்த ஒரு அலங்காரப் பொருளையும் மிகவும் மிகைப் படுத்தி கூடுதல் அழகுடன் தெரியச் செய்யும். கடைகளில் இம்மாதிரியான மின் குமிழ்களைத் தெரிவு செய்யும்போது, வழமையாக 3அங்குல இடைவெளியுடன் கூடி அமைக்கப் பட்டிருக்கும் மின்னலங்காரங் களை வாங்காது, குறைந்தது 7 அங்குல இடைவெளியில் அமைந்திருக்கும் மின் குமிழ் அமைப்புக்களையே வாங்குங்கள். இவைகளை மரத்தின் கிளையின் முனைகளில் செருகிவிட மிகவும் வசதியாக இருக்கும். 7 அடி மரத்துக்கு நிச்சயம் 25 சோடி மின்குமிழ்கள் 70 அடங்கியதாக இருத்தல் அவசியம். மரத்தை அலங்கரிக்கத் தொடங்கு முன், கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த எல்லா மின்குமிழ்களையும் ஒன்றுக்கு இரண்டாக, அவை ஒழுங்காக வேலை செய்கின்றனவா, எல்லா மின்குமிழ்களும் தொல்லையின்றி வெளிச்சம் தருகின்றனவா என பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

எப்பொழுதும் மரத்தின் அடிப் பாகத்திலிருந்தே அலங்காரத்தைத் தொடங்குதல் நலம். மின்குமிழ் இணைப்பை மரத்தின் அடிப் பாகத்திலிருந்து மெது மெதுவே சுற்றிக் கொண்டு மேல் நோக்கிக் கொண்டு வர வேண்டும். பின்னர், ஒவ்வொரு கிளைகளையும் கூட தனித்தனியாக கவனித்து இந்த இணைப்புக்களைக் கொண்டு நல்ல நெருக்கமாக சுற்றி இணைத்துக் கொண்டு வாருங்கள். நெருக்கமான சின்னச் சின்ன மின்னொளியைக் காணும் போது கண்களுக்கும், வெளியே இருந்து இரவில் பார்ப்பவர்களுக்கும் கூட மிக அழகாக இந்த மரம் காட்சியளிக்கும். சின்னச் சின்னக் கிளைகளையும் பெரிய கிளைகளையும் மாற்றி மாற்றி மின்விளக்குகளால் அலங்கரித்துக் கொண்டு வந்த பின், மரத்தின் பின் பக்கத்-தையும் (இந்த இடத்தில் பின்புறம் எனப்படுவது, வீட்டின் மூலையை அண்டியிருக்கும் மரத்தின் பகுதியாகும்) ஓரளவுக்கு கண்ணில் படக்கூடிய பகுதியை மட்டுமாவது அலங்கரித்து விடுங்கள். சரி, மின்விளக்குகளால் மரத்தை அலங்கரித்து விட்டீர்களா? இனி மற்ற அலங்காரப் பொருட்களை மரத்தில் தொங்க விடுவதைப் பற்றி அலசுவோம்.

## பாரம்பரிய மரபு முறை அலங்காரம்

மரத்தைப் பார்த்தீர்களானால், மரம் கீழே பெருத்தும், மேல்ப்பாகத்தில் சிறுத்தும் காணப் படும். எனவே, எப்பொழுதும் பாரம் குறைந்த அலங்காரச் சோடனைகளை மரத்தின் மேல் புறத்தின் மேல் தொங்க விட்டால் தான், மரம் பாரம் தாங்காமல் கீழே சாய்ந்து விட வாய்ப்பில்லாமல் இருக்கும். எனவே சிறு அணிகளை மரத்தின் மேற் புறத்திலும், ஓரளவு பெரிய சாதனங்களை மரத்தின் நடுப்புறத்திலும், இவையெல்லாவற்றையும் மிஞ்சும் பெரிய அலங்காரங்களை மரத்தின் அடிப்பாகத்திலும் பொருத்தி அலங்கரித்தல் சிறப்பைத் தரும். எப்பொழுதும் மரத்தின் உட் பாகத்திலிருந்து அலங்காரத்தை ஆரம்பித்து, வெளிக் கிளைகளின் நுனிகளை பின்னர் அலங்கரியுங்கள்.

தனி நிறங்களைக் கொண்ட (அதாவது எந்த வரைதல்களோ படங்களோ அல்லாத வெறும் நிறத்தை மட்டுமே கொண்ட கண்-ணாடிக் குமிழ்கள்) பந்துக்களை, சின்ன அளவிலானவையைக் கொண்டு, மரத்தின் மேல் புறத்திலிருந்து அலங்கரிக்கத் தொடங்குங்கள். அந்த சின்னச் சின்ன அலங்காரங்களிலேயே கூட விதவிதமான அளவுகளில் உள்ள குமிழ்களைக் கவனத்தில் கொண்டு, கலந்து பாவியுங்கள்.

மரத்தின், நிற்பாட்ட வைக்கப்பட்டிருக்கும் தண்டின் உள் பாகங்களிலிருந்து வரும் சிறுகிளைகளில் இந்தக் குமிழ்களைத் தொங்க விடுங்கள். அப்படியே அவற்றை வெளிநோக்கி விதவிதமான சிறு அளவு களில் அலங்கரித்துக் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு கிளைகளிலிருந்தும் உட்பாகத்தில் தொடங்கி வெளிநோக்கியிருக்கும் அரைவாசிப் பகுதி-யை இந்த குமிழ்களால் மட்டுமே அலங்-கரித்து விடுங்கள். இந்த முறையை அந்தந்த அளவுகளின் அடிப்படையைக் கொண்டு முழு மரத்தையுமே முதலில் இவ்வாறு அழகு படுத்துங்கள்.

கிளைகள் பெரிதாகிக் கொண்டு வரும் பகுதிகளில் பெரிய குமிழ்களைக் கொண்டு, அதே நேரம் எண்ணிக்கையில் கூடிய குமிழ்களைக் கொண்டு அக்கிளைகளை அலங்கரியுங்கள். விதவிதமான நிறம் கொண்ட கண்ணாடிக் குமிழிகளை வெவ்வேறு இடத்தில் மாறி மாறி இணைத்து அவற்றிலுள்ள இடைவெளியைக் குறையுங்கள். இத்தனைக் கண்ணாடிக் குமிழ்களையும் மரத்தில் இணைத்து முடித்ததும்



கொஞ்சம் உங்களை ஆசுவாசப் படுத்திக் கொள்ளுங்கள். சிறிய இடைவெளி ஒன்றை உங்களுக்குக் கொடுத்து, சிறிது நேரம் மரத்தை, அல்லது அந்த இடத்தை விட்டு நகர்ந்து, சில நிமிடங்களுக்கு ஒரு நடை நடவுங்கள். இப்பொழுது மரம் இருக்கும் இடம் நோக்கி வந்து, அந்த மரத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். சற்றுத் தள்ளி எல்லாக் கோணங்களிலும் நின்று உங்கள் வேலைத் திறனை நோக்குங்கள். உங்களுக்கே உங்கள் வேலையில் அதிருப்தி இருப்பது போல் தோன்றினால், மற்றவர்களுக்கும் அது அழகில்லாததாகத் தான் தெரியும். எல்லா அலங்காரங்களும் சமாந்தரமாக இருக்கின்றனவா என ஒருமுறை சரி பார்த்துக் கொள்ளுங்கள். ஒன்றுக்கொன்று இடைவெளியில் வித்தியாசங்களும் அளவில் முன்னுக்குப் பின் முரணாகவும் இருந்தால், பார்க்க கவர்ச்சியாக இருக்காது. அவற்றை பார்த்து மீண்டும் சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லது ஒன்று விட்டு ஒரு கிளை என்ற விகிதத்திலும் நீங்கள் உங்கள் அளவு கோலை மாற்றி சிறியதும் பெரியதுமாக

63ம் பக்கம் பார்க்க...

ELROD
Renovation
Kitchen
Washroom
Hardwood Flooring
Laminate Flooring
Tiling
Electrical
Plumbing
Separate entrance
Full basement
Over 12 years of experience
For free estimate and consultation contact
Prem @ 416-712-1016

62ம் பக்கத் தொடர்ச்சி...

குமிழ்களை மாட்டி மரத்தைச் சற்று வித்தியாசப் படுத்திக் காட்டலாம்.

கடைசியாக இந்த மரத்தின் முழுமையான அலங்காரம் எதில்தங்கியிருக்கிறது தெரியுமா? ஒரு தேவதை, ஒரு நட்சத்திரம் அல்லது ஒரு அழகிய முடிச்சை மரத்தின் உச்சியில் அழகாக மாட்டிவிடுவதில் தான் உள்ளது. எதையோ ஒன்றை, அதில் உங்களுக்கு எது பிடித்திருக்கிறதோ அதை மாட்டி விடுங்கள். இப்போது உங்கள் நத்தார் அலங்கார மரம் தயார். தயவு செய்து இரண்டடி எட்டித் தள்ளி நின்று, உங்கள் கலையார்வத்தின் வெளிப்பாட்டை ஆறுதலாக இரசிக்கத் தொடங்குங்கள்.

### நாகரிக முறை அலங்காரம்

எக்கச் சக்கமான நிறங்கள், மிகப் பெரிய அளவிலான தொங்கும் அலங்காரங்கள், அத்துடன் மிகப் பெரிய அளவுடைய மர உச்சிக்கான அலங்காரம், இவையே நாகரிக அலங்கரிப்பு முறையை வெளிக் கொணரும் அழகுச் சாதனங்களாம். இம்மாதிரி அலங் காரத்துக்கு பயன் படுத்தும் அலங்காரங் களும், நாடாக்களும், தங்கம், வெள்ளி, வெள்ளை, அல்லது செப்பு, வெள்ளி மற்றும் பழுப்பு நிறம் மூன்றும் கலந்து வார்த்தெடுத்த நிறம், இம்மாதிரி நிறங்களில் இருப்பவையாய்ப் பார்த்துத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம். இவை நல்ல ஒரு அழகை மரங்களுக்குத் தரும். தேவையானவற்றை வாங்கி விட்டீர்களா? பிறகென்ன, மரத்தை அலங்கரிப்பது தான் பாக்கி!

### முதல் வகை
### (பாரம்பரிய அழகு முறை)

அலங்காரத்துக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் முறையிலேயே இந்த மரத்தையும் வெண்ணிற மின்குமிழ்களைக் கொண்டு உங்கள் மரத்தை அலங்கரியுங்கள்.

இப்போது, நல்ல அலங்காரமான துகள்கள் (கடைகளில் பலவித வர்ணங்களில் விற்கப் படும்) இருந்தால், அவற்றை வாங்கி மரத் தைச் சுற்றித் தூவி விடுங்கள். அதாவது கிளைகளைச் சுற்றி மிதமாக spray பண்ணி விடுங்கள்.

அடுத்து பூக்களுடன் (செயற்கை) கூடிய தண்டுகளை வாங்கி வைத்திருக்கின்றீர்கள் அல்லவா? அவற்றை மூன்று மூன்றாகச் சேர்த்துக் கட்டுங்கள். இந்தக் கொத்துக்கள் ஐந்துக்குக் குறையாமலும், ஏழு (அல்லது அதைவிட இரண்டு மூன்று கூடுதலாக இருந் தால் பரவாயில்லை) கொத்துக்களுக்குக் கூடாமலும் செய்து வையுங்கள். நிச்சயம் மரத்தின் முன்பக்கத்துக்கு இந்த எண்ணிக் கை இருப்பது அவசியம். இவற்றை நாம் முன்னர் சொன்னது போல் வாங்கிய சிறிய சணற் கயிறுகளாலோ அன்றி, வயர் இணைப்புக்களாலோ சேர்த்துக் கட்டுங்கள். கண்ணைப் பறிப்பதுபோல் இவற்றைப் பின்னிப் பிணைக்க, பயனுள்ள பூக்களின் (செயற்கை தான்) பெயர்கள் இங்கு தரப் பட்டுள்ளன. Silk poinsettias in pink, gold, purple or red (நிறங்களாவன: ரோஜா, தங்கநிறம், ஊதா, சிகப்பு)White magnolias, Ivy, ferns or magnolia leaves (இலைகள்), Silk oak leaves dipped in copper, gold or silver ( இந்த இலைகள் செப்பு, தங்க, வெள்ளி முலாம்களில் பூசியெடுக்கப் பட்டிருக்க வேண்டும்)

■ ■ ■

# மாகோஸா கடன்...

61ம் பக்கத் தொடர்ச்சி...

அர்ப்பணிப்புடன் செயற்படும்படியும் முதற்சில வருடங்களில் தேவையெனில் பங்கிலா பங்களை எடுத்துக் கொள்ளாமல் தியாகம் செய்யும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கடன் ஒன்றியம் தனது சமூகத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு முன்பாக சமூகத் தின் ஆதரவு இதற்குத் தேவைப்படுகின்றது. கடன் ஒன்றியத்தின் இலாபகரமான வளர்ச்சி பிரகாசமானதாக இருக்கின்ற போதிலும் பங்கிலாபங்களை வழங்குதல் வருமானமீட் டலிலேயே தங்கியுள்ளது. மாகோஸா இயக்குனர் சபையின் (Board of Directors) பங்கிலாபக் கொள்கையானது, போதுமான இலாபம் இருக்கும்போது பங்கிலாபங்களைக் கொடுப்பதும் அதேநேரம் தேவைப் படும முதல் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதுமாகும்.

ஒவ்வொரு வருடமும் எத்தனை பங்குகள் பரிமாற்றப்படும் (redeem) என்பது பற்றி வரையறைகள் உள்ளன. இந்தப் பங்கு களை மீண்டும் விற்பதற்கு இரண்டாந்தர சந்தை எதுவும் இல்லை. இவை மாகோஸா வளர்வதற்கு வழிவகுக்கும் நிரந்தர முதலீட்டை வழங்குவதற்காக வடிவமைக்கப் பட்டதுடன் இப்போதும் எதிர்காலத்திலும் அதன் அங்கத்தவர்கட்கு தேவைப்படும் வங்கிச் சேவைகளை வழங்குவதற்கும் வழி வகுப்பதாக அமையும்.

முதலீட்டுப் பங்குகள் மாகோஸா அங்கத் தவர்கட்கு மட்டும் கூற்றுக்களை (Statements) வழங்குவதன் மூலம் விற்பனை செய்யப் படும். இந்த பங்கு வழங்கும் கூற்றானது எல்லா ஆர்வமுள்ள அங்கத்தவர்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதான முக்கிய மான தகவல்களைக் கொண்டுள்ளது. நீங்கள் உங்களுக்குரிய பிரதியைப் பெற 416-298-4504 ஐ அழைக்கலாம் அல்லது 100A-2100. Ellesmere Road இல் உள்ள மாகோஸா கிளை அலுவலகத்தை அணுக லாம். அல்லது ஜோர்ஜ் தம்பித்துரை அவர்களுக்கு 308-3852, Finch Ave.East, Scarborough. ON. M1T 3T9 எனும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் இந்த வழங்கல் கூற்றுக்களைப் பெறுதல், அல்லது இந்த முதலீடு பற்றி உங்கள் கடன் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தல் என்பன பங்குகளை வாங்குவதற்கு எந்த ஒரு அங்கத்தவரையும் கட்டாயப்படுத்தாது.

நீங்கள் பங்குகளை கொள்வனவு செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானித்த பின் கூற்று பொதியில் (Offering statement package) உள்ளடங்கியிருக்கும் படிவங்களை நிரப்புவதன் மூலம் முதலீட்டு பங்குகட்கு நீங்கள் பணத்தைச் செலுத்தலாம்.

நீங்கள் வாங்க விரும்பும் பங்குகளின் அளவு, வகுப்பு, டொலர் அளவு என்பவற்றை இந்த படிவம் காட்டும். இந்த படிவத்தை "Concentra Trust" என்ற பெயருக்கான காசோலை அல்லது மணிஓடருடன் இணைத்து 100 A- 2100, Ellesmere Road, Scarborough, ON, M1H 3B7 என்ற முகவரிகது அனுப்பவும். இந்தப் படிவம் உங்கள் காசோலை அல்லது மணிஓடருடன் இணைக்கப்பட்டு Concentra Financial இற்கு அனுப்பப்படும். Concentra Financial எனப்படும் கடன் ஒன்றிய அமைப்புக்களின் சேவை கம்பனியானது சாஸ்கச்சுவானில் அமைந்துள்ளது. இது RRSP திட்டத்தில் வைப்பிலிடப்படும் எல்லா முதலீட்டு பங்குகட்குமான நம்பிக்கை பொறுப்பாளராக (Trustee) செயற்படும். இந்நிறுவனம் கடன் ஒன்றியத்தின் வைப்பு $1.5 மில்லியனை அடைந்ததும் நிதியை மாகோஸா கடன்ஒன்றியத்தற்கு வழங்கத் தொடங்கும். இத்துடன் பங்கு சான்றிதழ்கள் இதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும். அதன்பின்பே பங்கிலாபம் (Dividend) கணிப்பிடல் ஆரம்பமாகும். இன்றிலிருந்து அல்லது அதிவிரைவாக 6 மாதங்கள் வரை இந்த மட்டம் ($1.5மில்லியன்) அடையப்படாவிட்டால், கடன் ஒன்றியமானது வியாபாரத்தை ஆரம்பிக்க முடியாது. பங்குகளை வாங்கிய அனைவருக்கும் அவர்களது நிதி திரும்ப கையளிக்கப்படும்.

மாகோஸா கடன் நிறுவனத்தின் இயக்குனர் சபையானது நீங்கள் உங்கள் சமூகத்தின் புதிய கடன்ஒன்றியத்தை ஆதரவளிக்க முதலீட்டுப் பங்குகளை வாங்குவதில் இணைவீர்கள் என எதிர்பார்க்கின்றது.

■ ■ ■



# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

இந்தியாவின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராகக் கணிக்கப்படும் சுப்பிரமணிய பாரதியார் மார்கழி மாதம் 11ம் திகதி 1882ஆம் ஆண்டில் எட்டயபுரம் எனும் சிறு கிராமத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் பிறந்தார். இவர், கவிஞர் மட்டுமல்ல, சிறந்த சுதந்திர போராட்ட வீரரும், சமூக சீர்திருத்தவாதியும், பத்திரிகையாளரும் ஆவார். இவர் கவிஞரும் எழுத்தாளருமாக இருந்தமையால், வசன கவிதையின் ஆரம்ப கர்த்தாவுமாவார். இவரது கவித்திறன் கண்ட மக்கள் இவரை 'மகாகவி' என அழைத்தனர்.

சுப்பிரமணிய ஐயர் 1889ஆம் ஆண்டு தனது ஏழாவது வயதில் தாயை இழந்தார். தனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து, அங்கு 1894ல் இருந்து 1897ஆம் ஆண்டுவரை கல்வி கற்றார். தனது பதினைந்தாவது வயதில் 1897ஆம் ஆண்டு உறவினரான செல்லம்மா என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். அப்போது செல்லம்மாவின் வயது ஏழு. அடுத்த வருடம் சுப்பிரமணிய ஐயர் தன் தந்தையையும் இழந்தார். தந்தையின் மரணத்தின்பின், 1898ம் ஆண்டு சுப்பிரமணிய ஐயர் தனது உறவினரான மாமியின் வீட்டிலிருந்து படிப்பைத் தொடர்வதற்காக, பனாரிஸ் நகரத்திற்குச் சென்றார். கங்கையின் கரையில் உள்ள பனாரிஸ் நகரம் இந்துக்களின் புனிதத்தலமாக காசி எனவும், வர்ணாசி எனவும் அழைக்கப்படுவதை இங்கு குறிப்பிட வேண்டும். இங்கு வதியும் வேளையில், அவர் சமஸ்கிருத மொழியையும் வேறு பல வடமொழிகளையும் கற்பதற்கு வாய்ப்பேற்பட்டது. இக்காலத்தில் இவர் வாழ்வில் ஏற்பட்ட ஒரு சுவையான சம்பவம் ஒரு சீக்கியரைச் சந்தித்தது. சீக்கியரின் தலைப் பாகையினால் கவரப்பட்ட இவர், தனது வாழ்வின் இறுதிவரை தலைப் பாகை அணிந்துதான் பொது இடங்களுக்கு வருவாராயினார். தலைப் பாகை இல்லாத பாரதியை யாரும் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அது இவருடன் ஒன்றிவிட்டது.

பாரதி பனாரஸில் தங்கி இருந்த வேளையில் இரு விடயங்கள் அவர் மனதில் அழியாத கோலங்களாகப் பதிந்துவிட்டது. முதலாவதாக குறிப்பிடவேண்டியது, அவரது சுதந்திர வேட்கை. அடுத்தபடியாக ஆன்மிக மனநிலை.

1905ஆம் ஆண்டு பனாரிஸ் நகரில் நடந்த அகில இந்திய கொங்கிரஸ் மகாநாட்டில் பாரதி பங்கெடுத்துக்கொண்டார். அவ்வேளை அவருக்கு மாகிரட் எலிசபெத் நோபல் என்னும் ஆங்கிலோ-ஐரிஸ் சமூக சேவகியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இப்பெண் மணிதான் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான அன்னை நிவேதிதா ஆவார். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து சமூக சேவை செய்யும் இப்பெண் மணியைப் பார்த்தபின்தான் தமது நாட்டில் பெண்களைப் பூட்டிவைக்கும் மடமையை உணர்ந்தார். இச்சந்திப்புத்தான் பாரதி கண்ட கனவான "புதுமைப்பெண்" இற்குக் காரணமானது. 1902ஆம் ஆண்டு அவர் தனது கிராமத்துக்குத் திரும்பியபோது, அவர் எட்டயபுரத்தின் சமஸ்தானப் புலவராக 1904ஆம் ஆண்டு வரை சேவை செய்தார்.

## நாட்டுப் பற்று:

மக்களுக்கு நாட்டு நடப்புக்களையும், உலக விவகாரங்களையும் அறிவிக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட விழைந்தார். பாரதி இதற்காக பத்திரிகைத் துறையில் மிகவும் ஈடுபட்டுச் செயல்பட்டார். 1904ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' நாளேட்டில் உப பத்திரிகை ஆசிரியராக இணைந்து முனைப்பாகச் செயற்பட்டார். இதைத் தொடர்ந்து அவர், 'இந்தியா' எனும் வார இதழுக்கும் 'பாலபாரதம்' எனும் ஆங்கில பத்திரிகைக்கும் ஆசிரியராகப் பொறுப்பேற்று செயற்பட்டார்.

1907ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியம் மிக்க அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொண்டார். இம்மகாநாட்டில் காங்கிரஸ் தலைவர்களிடையே பிரிவினை ஏற்பட்டது. லோகமான்ய திலகர், அரபின்தோ கோஷ், லாஜபாத் ரே போன்றவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக வன்முறை வெடிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கும் வேளையில், காந்தி, நேரு போன்றவர்கள் அகிம்சைக்காக வாதிட்டார்கள். சுப்பிரமணியபாரதி, வ.உ.சிதம்பரனார் போன்ற தமிழ் நாட்டவர்கள் வன்முறைப் போராட்டத்தையே பெரிதும் ஆதரித்தனர்.

1908ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைப்பதற்கு பல தசாப்தங்களுக்கு முன்பே சுதந்திர



தின விழா ஏற்பாடு செய்து, ஒரு மாநாட்டை நடத்திய பெருமை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரையே சாரும். அதே ஆண்டில் 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரனாருக்கு எதிராக ஆங்கிலேயர் தொடர்ந்த வழக்கில், தனது நண்பருக்காக சாட்சியமளித்தார். அத்தருணம் அவர் வேலைசெய்த பத்திரிகை உரிமையாளர் கைது செய்யப்பட, தான் கைதியாகாது தொடர்ந்து போராடுவதற்காக பிரெஞ்சுக்கொலனியான பாண்டிச்சேரிக்குத் தப்பிச்சென்று அடைக்கலம் புகுந்தார்.

மறைந்து வாழும் காலத்திலும் அவர் பேனா ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டுக்கொண்டிருந்தது. ஏற்கெனவே எழுதி வந்த 'இந்தியா', 'விஜயா' என்பவற்றுடன் ஆங்கில ஏடான 'பால பாரதத்தை' நடத்தினார். இது மட்டுமல்லாமல், 'சூரியோதயம்' என்னும் வார ஏட்டையும் பாண்டிச்சேரியில் இருந்து வெளியிட்டார். இந்தியாவில் முதன் முதல் கேலிச் சித்திரங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

ஒளித்து வாழ்ந்த காலத்தில் பல இந்திய போராட்ட வீரர்களின் அறிமுகம் இவருக்குக் கிட்டியது. ஆங்கிலேயரின் அடாவடித் தனத்தால் சுதந்திர போராட்ட வீரர் பலரும் பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்தனர்.

பத்து வருடம் பாண்டிச்சேரியில் மறைந்து வாழ்ந்த பாரதி 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவில் கடலூர் எனும் இடத்தினூடாகத் திரும்பிவந்தார். அவரை உடனே கைதுசெய்த பிரித்தானிய அரசாங்கம் கடலூரில் மத்திய சிறையில் ஐந்து வாரங்களுக்கு நிறுத்திய பின் நிபந்தனைகளுடன் அவரை விடுதலை செய்தது.

## பாரதியாரின் எழுத்துப் பணி:

ஒரு எழுத்தாளனுடைய எழுத்தினைப்பற்றி அறிவதற்கு அந்த எழுத்துக்கு ஊற்றுக்கண்ணாக இருந்த உள்ளத்தை, அதில் இருந்த ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை, ஏமாற்றங்களை அறிந்தால் அவற்றின் பிரதிபலிப்பே அந்த எழுத்து என்பதை அறியலாம். அவர் உள்ளத்தில் 'என்றும் மாற்றம் வேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற உணர்வு மிகுதியால், தவறுகளைக் கண்டித்த வண்ணம் இருந்தார். இதற்கு பத்திரிகைத் துறையும், கவிதையும் நல்ல வடிகால்களாக இருந்தன. தன்னாட்டிற்கு அக்கால கட்டத்தில் மிக அத்தியாவசியமானது சுதந்திரம் என்பதை உணர்ந்தார். 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று ஏக்கத்துடன் பாடிய அதேவேளை, அவருக்கு இந்திய மக்களின் 75 விகிதம் மக்களை ஒதுக்கிவைத்துவிட்டு, சுதந்திரம் கிடைப்பது முடியாத காரியம் என்று தெளிவாக உணர்த்தியிருந்தார். இந்த 75 விகிதம் தாழ்ந்தவர்களும், தவறவிட்டவர்களுமாவார். இங்கு தாழ்ந்தவர்கள் என்பது அரிஜனங்கள், தலித்துகள், ஆதிவாசிகள், மற்றும் பின்தங்கிய மக்களுமாவார்கள். அடுத்து, தவறவிடப்பட்டவர்கள் என்பது பெண்களை. பெண்களின் பங்களிப்பு இல்லாமல் கடைசிவரை சுதந்திரம் கிடைப்பது முடியாத காரியம். அன்னை நிவேதிதா இங்கிலாந்திலிருந்து பல்லாயிரம் மைல்கள் தூரம் வந்து இநியாவில் சமூக சேவை செய்யமுடியுமானால், ஏன் இந்தியப் பெண்களால் அது முடியாது என்று குரல் எழுப்பினார். கோபம் கொண்ட பாரதி -

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி
வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்..."

என்று பாடினார். மேலும் பெண்கள் விடுதலைக்காக,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று பாடினார்.
அவர் கண்ட புதுமைப் பெண், ஆணுக்குத் துணையான சக்தியாக நின்று புது யுகம் படைக்க வேண்டுமென விரும்பினார்.

பாரதியார் உலக மக்களை சாதி, இனம் என பிரிப்பதை வெறுத்தார். சாதிப் பாகுபாட்டை ஒழிக்க விரும்பிய பாரதி, ஒரு தாழ்ந்த குலத்தவனுக்கு உபநயனம் செய்து, தீட்சையும் பூணூலும் கொடுத்தார். 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாடிச்சென்றார்.
மேலும் குழந்தைகளுக்காக

'ஓடிவிளையாடு பாப்பா' பாடிய பாரதி,
"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"
என்றும் பாடினார்.

அவரது39 வருட வாழ்க்கையில் விதியைத் தெரிந்ததனால் தானோ என்னவோ எழுதிக் குவித்தார்!

## அவர் பாடிய பாடல்கள்:

| | |
|---|---|
| நாட்டுப் பற்றுப் பாடல்கள் | 057 |
| பக்திப் பாடல்கள் | 078 |
| தத்துவப் பாடல்கள் | 025 |
| பலதரப்பட்ட பாடல்கள் | 011 |
| சிறு விளக்கப் பாடல்கள் | 024 |
| சுயசரிதை | 049 வரிகள் |
| வசன கவிதை | 066 வரிகள் |
| பாஞ்சாலி சபதம் | 518செய்யுள்கள் |
| கண்ணன் பாட்டு | 023 பாடல்கள் |
| குயில் பாட்டு | 009 பாடல்கள் |

இவை மட்டுமல்ல, சிறு கதைகள், கட்டுரைகள் என்று எழுதிக் குவித்தார் பாரதியார். எட்டாத உயரத்தில் எட்டடிக்கு இலக்கண வரம்புகட்டி, புரியாத புதிராகப் பாடிவந்த மரபு மாற்றி, பாமர மக்களுக்குப் புரியும் வண்ணம் பேச்சுத் தமிழில் பாடல்கள் பாடி, புதுக் கவிதை என தமிழுக்கு புது இலக்கணமே வகுத்தார் பாரதியார். ஆரம்பத்தில், கற்றவர்கள் இவர் கவிதைகளை ஒதுக்கிவைக்க முற்பட்டார்கள். ஆனால், ஜனரஞ்சகமான கவிதைகள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. காலக்கிரமத்

**குமார் புனிதவேல் பக்கம்**

தில் கற்றோரும் மற்றோரும் 'ஓகோ' எனப் புகழ்ந்தார்கள் - அவர் மரணத்தின் பின்!

கர்னாடக இசையும் இந்துஸ்தானி இசையும் பாரதியாரைப் பெரிதும் கவர்ந்தது. குறிப்பாக, அவர் பல கர்னாடக இசைக் கீர்த்தனைகளை வடித்ததுடன், மேடைகளில் அவற்றை இசையுடன் பாடி மக்களை மகிழ்வித்தார். அவருக்கு பெங்காலி, ஹிந்தி, சமஸ்கிருதம், குச்சி, பிரெஞ்சு, ஆங்கிலம் எனப் பல மொழிகளில் வல்லுனராக இருந்த போதும், இரண்டு சமஸ்கிருத கீர்த்தனைகளை எழுதியதுடன், மற்றைய அனைத்தையும் தன் தாய் மொழியான தமிழிலேயே எழுதினார்.

பாரதி வாழ்ந்த காலகட்டத்தில், கர்னாடக இசையில் வல்ல தமிழர்கள் மும்மூர்த்திகள் பாடிய பாடல்களைப் பாடுவதுதான் பெருமை என்று இருந்தார்கள். மொழி தெரியாத போதும் தவறான உச்சரிப்புடனும், உணர்வுடனும் பாடுவதைக் கண்டபோது அவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. தனக்கே உரிய பாணியில் ஒரு மொழி தெரியாமல், அம்மொழியில் பாடுவது தவறு என்று சுட்டிக்காட்டினார். இதனால் அவருக்குப் பல பகைவர்கள் உண்டானதுதான் மிச்சம். இன்னும் தமிழர்கள், தெரியாத தெலுங்கிலும், அறியாத சமஸ்கிருதத்திலும் பாடியவண்ணமே இருக்கிறார்கள்.

மக்களுக்காகத் தன் வாழ்நாளைத் தந்த பாரதியின் இறுதி அத்தியாயம் தமிழ் மக்களைத் தலைகுனிந்து நிற்கவைக்கும் ஒன்று. நடிகர், நடிகைக்குக் கோவில் கட்டும் பாரதம், பாரதியின் இறுதி நாட்களை வறுமையில் வாடச் செய்தது. சிறையில் இருந்து வெளியேவந்த பாரதிக்குப் பல தடைகள் விதித்தது அரசாங்கம். இறுதியில், 1920 இல் தரப்பட்ட பொது மன்னிப்புக்குப் பின் பாரதிக்கு சுதந்திரமாக நடமாட முடிந்தது. வறுமையில் இருந்த பாரதி, 1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மீண்டும் உதவி ஆசிரியராகச் சேர்ந்து பணிபுரிந்தார். 1921 ஆகஸ்டில் திருவல்லிக்கேணி கோவில் யானை அவரை இடித்துத் தள்ளி, அதனால் நோயுற்றார். அதில் குணப்பட்ட பாரதிக்கு செப்தெம்பரில் வயிற்றுக்கடுப்பு நோய் பிடித்தது. செப்தெம்பர் 11ம் திகதி நோய் கடுமையடையவும் அவர் மருந்துண்ண மறுத்தார். செப்தெம்பர் 12ம் திகதி தமது 39ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது இறுதிக் கிரியைகளில் மிக மிகச் சிலரே பங்கெடுத்ததும் வேதனைக்குரியது.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா –
அவன்
பாட்டைப்பண்ணோ டொருவன்
பாடினானெடா – அதைக்
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா
அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா"

■ ■ ■

வீடு பத்திரிகையில்
விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின்
எல்லைகளை
விரிவாக்குவீர்!

416-400-6406

# உண்மைச் சம்பவம்

## எச்சரிக்கை மணி உங்கள் வீட்டிலும் ஒலிக்கின்றது

**- மஞ்சுராஜ் -**

கணவன், மனைவி, அழகிய இரு குழந்தைகள் கொண்டது அந்தச் சிறு குடும்பம். வசித்து வந்த வீட்டிலும் பிரச்சனைகள் கிடையாது. சொந்த வீடு என்று நினைக்கிறேன். பிரச்சனை என்னவென்றால், கணவன் மனைவிக்குள் எந்நேரமும் தினச் சண்டை தான். இருவரும் ஒருவருக்கொருவர் வரிந்து கட்டிக்கொண்டு சண்டை பிடிப்பதிலேயே மிகுதிநாளும் சென்றுவிடும். நிம்மதி என்பது இந்த இடத்தில் இல்லை. அதனால் என்ன? எல்லா வீட்டிலும் நடக்கும் வழமையான வழக்கு தானே?

நிலவறையில் தாராளமாக இடம் இருந்தது. வாடகைக்கு விட்டால் மிகுதியாய் வருமானம் வருமே என்ற எண்ணமும் மேலோங்க, அகப்பட்டான் ஒரு இளைஞன். இடம் தேடிக் கொண்டிருந்திருப்பான் போல. இவர்களுக்கும் அவனை நன்றாகப் பிடித்துப் போய் விட்டது. இருக்காதா பின்னே? ஒரு சோலி கிடையாது. இடைஞ்சல் கிடையாது. இவர்கள் குழந்தைகள்மேல் நல்லபாசம். கெட்ட சகவாசங்களும் இருப்பதற்குரிய அறிகுறிகள் தெரியவில்லை. தானும் தன் பாடும் என்று இருப்பான். இப்படி ஒரு 22 வயது இளைஞனை யாருக்குத் தான் பிடிக்காமல் போகும்? மாதம் தவறாமல் வாடகையும் வந்துவிடும். பிறகென்ன? இவர்களுக்கு பையனிடத்தில் நல்ல அபிப்பிராயம் கூடிப் போயிற்று. இவர்களுக்கு அவனைப் பிடித்துப் போனால் என்ன? தங்கள் சண்டையை அவனுக்கு முன்னால் விட்டுக் கொடுக்கக் கூட இவர்கள் தயாராய் இல்லை.

சண்டை உச்ச கட்டமாகும் போது பையனுக்கே சகிக்கவில்லையோ என்னவோ? ஒரு நாள் அப்பெண் மட்டும் தனியே இருக்கும் போது மேலே வந்த அவன் "அக்கா, வீட்டின் சில அலங்காரங்களும், வெளிச்சங்களும் கூட மனதுக்கு ஒரு அமைதியைக் கொண்டு வரும். இது Psychology. இது போல் நல்ல விஷயங்கள் பல உண்டு. எனக்குத் தெரிந்த ஒரு விடயம், இங்கு நீல நிறத்தில் ஒரு ஒளிதரும் மின்குமிழ் இருக்கிறதாம். அதை நாம் வாங்கி நமது படுக்கை அறையில் பொருத்திக் கொண்டால், அந்த விளக்கின் வெளிச்சத்திலேயே பல மாறுதல்கள் மனதுக்குள் உண்டாகுமாம்.



"அக்கா, சண்டை பிடிக்காமலிருந்தால் உங்கள் குடும்பத்திலும் அமைதி நிலவுமே? உங்களுக்கு விருப்பமென்றால் சொல்லுங்கள். நானே கொண்டு வந்து அதைப் பொறுத்தி விடுகிறேன்". படித்த பையன், பொய்யா சொல்லப் போகிறான்? அவன் சொன்னதை வேதவாக்காக எடுத்துக் கொண்ட குடும்பத் தலைவி, தன் சம்மதத்ததைத் தெரிவித்தார்.

சிக்னல் கிடைத்த சந்தோஷத்தில், அந்தக் குடும்பத்தில் அமைதியைக் கொண்டு வர விரும்பிய அந்த அருமையான பையன், தானே கணவன், மனைவியின் படுக்கையறையில் இளகிய நீல நிற ஒளி கொடுக்கும் அந்த மின்குமிழை மாட்டி விட்டான். மாதங்கள் உருண்டோடின. பிரம்மையோ அன்றி உண்மையோ, குடும்பத்தில் இப்பொழுது சிறிது அமைதி. அவர்களுக்கோ இவன் மேல் இருந்த மதிப்பு கூடிற்று. அட எவ்வளவு அருமையான அமைப்பு இது. அது மட்டுமன்றி, இவர்கள் வீட்டுக் குழந்தைகளும், அவன் இருக்கும் வீட்டின் கீழ்ப்பகுதியில் போய் அவனுடன் விளையாடி, அளவளாவி வருவதுண்டு.

ஒருநாள், என்ன காரணத்தாலோ வீட்டின் மேல் தொலைக் காட்சி வேலைசெய்யாது போயாயிற்று. குழந்தைகள் மேலே இருந்து சுவாரசியமாக தமக்கு விரும்பிய நிகழ்ச்சியை தொலைக் காட்சியில் பார்க்க முடியவில்லை, தொலைக் காட்சி இல்லாது போனால் பொறுப்பார்களா? கும்மாளமும் குழப்படியும் கூடவே, தாயார் அவர்களைக் கீழே போய், நிலவறைப் பகுதியில் தொலைக்காட்சியை, பார்க்குமாறு பணித்தார்கள். பழகிப் போன குழந்தைகள், கீழே ஓடினார்கள். அவன் கீழே இல்லை, தொலைக்காட்சியில் தமக்குப் பிடித்த நிகழ்ச்சிகளைத்தேடி, தொலைக்காட்சிப் பெட்டியை திருகிக் கொண்டிருந்த குழந்தைகள், இருந்தாற்போல் ஆச்சரியத்தில் கூவினார்கள் "இஞ்செ, அம்மா டிவியில தெரியுறா?" உண்மைதான். அந்நேரம் அந்தத் தாய் தன் படுக்கையறையில் கையில் எடுத்த வேலையுடன் நின்று கொண்டிருந்தது இங்கே இவனது தொலைக்காட்சியில் துல்லியமாகத் தெரிந்தது. ஒரு கோணம் பாக்கியில்லை. அந்த அறையின் அத்தனை நிலைகளும் அப்படியே தொலைக் காட்சியில்....

இதைப்படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இனி எந்த விளக்கத்தின் அவசியமின்றியுமே மேலே நடந்தது என்ன வென்று புரிந்திருக்குமென்று நினைக்கி றேன். இந்தப் பத்திரிகையில் இந்த மாதிரி ஒரு சம்பவம் எப்படி வந்தது என வியக்க வேண்டாம். எச்சரிக்கை மணி உங்கள் வீட்டிலும் ஒலிக்கின்றது என்ற ரீதியில் இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள். கண்டவர்களை நம்பி விடாதீர்கள். ஒரு நாளா இரண்டு நாளா? எத்தனை நாட்கள், எப்பவும் இதுபோன்ற அவல நிலைகள் உண்டாகலாம். எதையும் அல்லது யாரையும் நம்பி ஏமாறாதிருப்பதும், அளவோடு யாரையும் நம்புவதும் உங்கள் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. பிரச்சனைகளை தீர்க்க எங்கள் மனதிலேயே மருந்தும் இருக்கிறது. எண்ணங்களையும் முடிவுகளையும் உறுதியாக வைத்துக் கொண்டால், வெளிச்சங்கள் இல்லாமலே பிரகாசமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கின்றது. தீர்க்க முடியாத பிரச்சினை என்ற ஒன்று இல்லை. மனதை மடையாகத் திறவுங்கள். வென்றிடலாம்.

■ ■ ■


A-Z SOLUTIONS

To Every Human Problem, There is only one easy solutions

A - Z அனைத்துக்கும் தீர்வு

மனிதனின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இலகுவான ஒரு தீர்வே உண்டு.

ஒரு குடையின் கீழ் உங்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டுகின்றது.

" எனது பெற்றோருக்கு வழுங்கப்படாதிருந்த பென்சன் உதவித்தொகை 22,000ஐ இரண்டு வாரங்களில் பெற்றுத்தந்தனர்"

- பிரபல வைத்தியர்

நீங்கள் 59 வயதைத் தாண்டிவிட்டீர்களா?

பென்சனுக்குத் தகுதியாகலாம். வீட்டில் இருங்கள் பென்சன் தேடிவரும்.

நீங்கள் 65வயதிற்குக் குறைந்தவரா? CPP Disability பென்சனுக்குத் தகுதியாகலாம்.

நீங்கள் கடனில் மூழ்கிவிட்டீர்களா? மீளுவதற்கான வழிகள் எம்மிடம் உண்டு.

15 வருட அனுபவம் அழையுங்கள் ஜெயா 416.431.0707



பல நூற்றுக்கணக்கான வங்குறோத்து நிலைமைகள் (Bankruptcies) கையாண்ட அனுபவம் - அழையுங்கள்

பிரபு பொன்னம்பலம்

416.431.0707

Real Estate

கட்டிடச் சொத்துக்கள்

- Buying or Selling
- Mortgage arrangement
- Free Consultation
- Free Market Evaluation

Insurance

காப்புறுதி

- Life Insurance
- Wills and Estate
- RESP
- Mortgage Protection

# வீட்டின் உட்புறக் காற்றும் உண்டாகும் நோய்களும்



அன்று
மறியோ செல்வா
- Certified Home Inspector -

ஒன்ராரியோ சுகாதார அமைச்சு மற்றும் CMHC (Canada Mortgage and Housing Corporation)ஆகியவற்றின் ஆய்வு அறிக்கையின் பிரகாரம், வீட்டின் உட்புறக் காற்றிலுள்ள அசுத்தமானது, வெளிப்புறக் காற்றிலுள்ள அசுத்தத்தை விட பல மடங்கு அசுத்தமானது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கூற்றின்படி, மாசடைந்த வீட்டின் உட்புறக் காற்றினை சுவாசிப்பதனால் நுரையீரல் புற்றுநோய் உட்பட, பல்வேறு வகையான சுவாச நோய்களை தோற்றுவிப்பதற்கான முக்கிய காரணியாக இது அமைவதாக கூறப்படுகின்றது.

இங்குள்ள வீடுகள், கட்டடங்கள் அனைத்தும் காலநிலைக்குத் தகுந்த வண்ணமும், சக்தி விரயமாவதை தடுக்கும் வகையிலும் வெளிப்புறக் குளிரோ, வெப்பமோ உள்ளே வருவதையோ, வெளியே செல்வதையோ தவிர்க்கும் வகையில் ( Energy efficient) மிகவும் இறுக்கமாகவும், காற்று உள்ளே வரமுடியாதபடியும் கட்டப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது குளிர் காலங்களில் யன்னல்களை இறுக்கமாக மூடி வைத்திருப்பதனால் சுத்தமானகாற்று உள்ளே வருவதற்கும் தடையாக உள்ளது. இவ்வகையில் மேலும் உட்-புறக் காற்று அசுத்தமடைகிது. இதனால் வீட்டினுள்ளும், வேலைத்தளத்திலும் தமது நாளின் 90% நேரத்தை செலவழிப்பதானால் பலவகையான நோய்களுக்காளாகின்றார்கள். முக்கியமாக இலையுதிர், குளிர் காலங்களில் குழந்தைகள், சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள் ஒவ்வாமை நோயினால் (Allergies) பாதிக்கப்படுவதற்கான காரணம் இதுவாகும். மேலும் வீட்டினுள் நாம் செய்யும் அன்றாட காரியங்களின் மூலமும் உட்காற்று அசுத்தமடைகின்றது.

## ஊட்புறக் காற்று (Indoor Air Quality) அசுத்தமடைவதற்கான முக்கிய காரணிகள்

- பூஞ்சணம் (Mold)
- புகைபிடித்தல்
- தூசு படிதல்
- வளர்ப்பு பிராணிகள்
- இரசாயனப் பதார்த்தங்கள்
- வாயுக்கள்
- வீட்டுக் கட்டடப் பொருட்கள்
- வீட்டுத் தளபாடங்கள்

## பூஞ்சணம்

ஈரலிப்பான இடங்களில் காணப்படும் பூஞ்சணம் மற்றும் பக்டீரியாக்களினால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் ஆஸ்துமா, மற்றும் ஒவ்வாமையினால் பாதிக்கப்படுபவர்களாவர்.



ஈரமான தளங்களிலும், அளவுக்கதிகமான உட்புறக் காற்றின் ஈரலிப்புத் தன்மையாலும் யன்னல்களிலோ, சுவர்ப்பகுதிகளிலோ படிந்து இவை வளர்ந்து பரவக்கூடியவையாகும்.

Condensation on Windows

## புகைபிடித்தல்

புகைபிடிக்கும்போது வெளியேறும் காற்றை சுவாசிப்பதனால் 5000ற்கும் அதிகமான நச்சு வாயுக்கள் அடங்கிய காற்றையே சுவாசிக்கின்றோம். புகைபிடிப்பவரை விட, அதை சுவாசிப்பவரே அதிகம் பாதிக்கப்படுவர். புகைபிடிக்கும் பழக்கமுள்ள பெற்றோரினால் குழந்-தைகள் ஆஸ்துமா, நிமோனியா, புரோஞ்-சைட்டிஸ் ( bronchitis), தொய்வு, இருமல், காது சம்பந்தமான தொற்று நோய்கள் என்-பவற்றிற்கு ஆளாகலாம்.

## இரசாயனப் பதார்த்தங்கள்

நாம் வீட்டை சுத்தீகரிக்கப் பயன்படுத்தும் அனைத்து இரசாயனப் பொருட்களும் சுவா-சிப்பதற்கு ஏற்றவையல்ல. மிக பாரதூர



மான விடயமாக இருப்பது, அமோனியாவும், Bleach ம் கலக்கும் சமயத்தில் குளோரின் வாயுவை உண்டாக்கி காற்றின் வழிகளை பாதிக்கின்றது..

## இவற்றை தடுப்பதற்கான சில

67ம் பக்கம் பார்க்க...

For All Your Real Estate Needs..




- 2 Bedroom Condominium
- Great Location
- Well Maintained Building
- Steps to TTC & 1 Bus To Subway
- Lots Of Facilities In The Building...




- Brimley/Steeles
- 3 Bedrooms/Finished Basement
- Well Maintained Property
- Steps To TTC,Schools,Shopping..
- Call for Details...




- Just 1 Years Old
- Detached House W/4Bedrooms
- Approx 2500 Sq.Ft
- Super Layout Home
- Best Value In Area...



Sasi Chelvaratnam
Sales Representative
416.858.4828




- Beautifully Detached House
- 4 Bedrooms/4 Washrooms
- Main Floor Hradwood
- Excellent Neighbourhood
- Quality Built...




- Less Than Three Years Old
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Appox 2300 Sq.Dt
- Family Rm W/Cathedral Ceiling




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....




- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9'Ceiling On Main Floor
- Primium Lot...

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963
This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# வீட்டின் உட்புறக்...

66ம் பக்கத் தொடர்ச்சி...

## இலகுவான வழிமுறைகள்

வீட்டின் உட்புற ஈரப்பதன் (Humidity ) அளவை 35வீதத்திற்கு மேல் அதிகரிக்காது பார்த்துக் கொள்வதோடு, குளிக்கும் போதும், சமைக்கும் போதும் exhaust fan ஐ



சுழல விடுவதாலும், பூஞ்சணம் மற்றும் dust mite என்று சொல்லப்படும் நுண்ணிய உயிர்கள் வளர்வதை தடுக்கலாம்.

உங்கள் வீடுகளில் உள்ள Humidifierஐ அடிக்கடி சுத்தப்படுத்துவதுடன், நீரையும் மாற்றுவதனால் பூஞ்சணம்(mold), பக்ரீரியா போனறவற்றின் வளர்ச்சியை தடுக்கலாம்.

அதிகளவு தாவரங்களை வீட்டினுள் வளர்ப்பது உகந்ததல்ல. இலைகள் உதிர்ந்து அழுகும் போதும், அவற்றிலிருந்து வெளியேறும் நீராவியினாலும் உட்புறக் காற்றில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வீட்டினுள் நீர்க்கசிவு (Plumbing Leak) ஏற்படின் உடனடியாக அதை சரிசெய்து உலர விடுதல் வேண்டும்.

செல்லப்பிராணிளினால் குழந்தைகளுக்கு ஒவ்வாமை நோய்கள் ஏற்படின் அவற்றை வளர்ப்பதைத் தவிர்ப்பது நன்று.

வீட்டின் உட்புறக் காற்றின் (Indoor air quality) தரத்தை பேணுவதற்கு, மேற் கூறிய இலகுவான வழிமுறைகளை கடைபிடிப்பதும், தகுதி பெற்றவாகளின் ஆலோசனைகளைப் பெறுவதன் மூலமும், குழந்தைகள், முதியோர் மற்றும் நோய் கிருமிகளின் தாக்கம் இலகுவாக பீடிக்கப்படுவோரை ஒவ்வாமை நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும்.

■ ■ ■

# ஆயுட்காப்புறுதி...

69ம் பக்கத் தொடர்ச்சி...

## காப்புறுதித் திட்ட பத்திரத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்

பலன் பெறுபவரின் பெயர் சரியாக உள்ளதா என்பது. காரணம் நீங்கள் திருமணமாவதற்கு முன்பு காப்புறுதி பெற்றிருந்தால் அதில் பலன் பெறுபவராக உங்கள் தாய், தந்தையர் அல்லது சகோதரர்களின் பெயரைப் பதிவு செய்திருந்திருக்கலாம். திருமணத்திற்கு பின்பு உங்கள் மனைவியின் பெயரை பலன் பெறுபவராக மாற்றுவது அவசியம். அத்துடன் உங்களுக்கு குழந்தைகள் பிறந்தால் அவர்களின் பெயரை சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த மாற்றங்கள் தொலைபேசி மூலம் செய்ய முடியாது. அதற்கான பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு காப்புறுதி உரிமையாளர் கையொப்பம் இட்டால் மட்டுமே மாற்ற முடியும்.

உங்கள் பெயர், பிறந்த திகதி என்பன சரியாக அச்சிடப்பட்டுள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

மாதாந்தக் கட்டணம் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் அவசியம். ஆயுட்காலம் (Whole Life) முழுவதுக்குமான காப்புறுதித் திட்டம் மாதாந்தக் கட்டுப்பணம் ஒரே அளவாக அதாவது காலம் போகப்போக மாறாத திட்டமாக இருக்கும். அல்லது ஒவ்வொரு வருடமும் அதிகரித்துச் செல்லும் மாதாந்தக் கட்டணம் உள்ள திட்டங்களை (YRT) என்று அழைப்பார்கள். Level Cost Insurance எனப்படும் திட்டத்தில் மாதாந்தக் கட்டணம் ஒருபோதும் அதிகரிக்காது.

YRT (Yearly Renewable Term)என அழைக்கப்படும் திட்டத்தில் வருடாவருடம் காப்புறுதிக் கட்டுப்பணம் அதிகரிக்கும். இவற்றை விட சில நிறுவனங்கள் வழங்கும் தவணைக் காப்புறுதித் திட்டம் Cost of Insurance – Increasing எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அதற்கான மாதாந்தக் கட்டுப்பணம் குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் அதிகரிக்கும். அதாவது ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டு செல்லும். Decreasing Benefit எனப்படும் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு காப்புறுதித் தொகை அதாவது உங்களுக்கு கிடைக்கும் பணத்தொகை காலத்திற்குக் காலம் குறைந்து கொண்டு செல்லும். இப்படியான திட்டங்கள் ஆரம்பத்தில் நீங்கள் காப்புறுதி செய்த தொகை இறக்கும் போது பெற்றுக் கொள்ள முடியாது. இப்படியான திட்டங்களை இலகுவாக பரிசீலனை செய்ய முடியாவிட்டால் நீங்கள் காப்புறுதி முகவர் ஒருவரின் உதவி பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.


உங்களுக்கு காப்புறுதி பெற்றுத்தந்த முகவர் அந்த நிறுவனத்துடன் வேலை செய்யாத விடத்தில், நீங்கள் அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டால் வேறு ஒரு முகவரை காப்புறுதி நிறுவனம் நியமிக்கும். அல்லது எல்லா நிறுவனங்களுடன் தொழில்புரியும் ஒரு முகவருடன் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் காப்புறுதித் திட்டம் சரியானதா என்பதை பரிசீலனை செய்து கொள்ளலாம்.

முகவர்கள் உங்கள் திட்டங்களை மாற்றம் செய்யும்போது உங்கள் புதிய திட்டத்துக்கும் பழைய திட்டத்துக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். எந்தக் கட்டத்திலும் புதிய காப்புறுதித் திட்டம் உங்கள் கையில் கிடைக்கும் வரை பழைய காப்புறுதித் திட்டத்தை நிறுத்தக் கூடாது. காரணம் உங்களுக்கு வயது அதிகமானால் அல்லது உடல் ஆரோக்கியம் குறைந்திருந்தால், நோய்கள் ஏற்பட்டிருந்தால் புதிய காப்புறுதி பெறுவது கடினமாக இருக்கும். அத்துடன் புதிய காப்புறுதித் திட்டம் பெறும் போது பழைய காப்புறுதித் திட்டத்திற்கும் புதிய காப்புறுதித் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பீடு செய்வதற்கான பத்திரம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டு நீங்கள் கையொப்பமிட்ட பின்பு தான் புதிய காப்புறுதி பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பத்திரம் உங்களிடம் முதலில் உள்ள காப்புறுதி திட்ட முகவருக்கும் அந்த நிறுவனத்திற்கும் கிடைக்கும்.

எனவே ஒரு புதிய திட்டத்தை பெறும்போது பழைய முகவர், புதிய முகவர் இருவரினதும் ஆலோசனையை பெற்றுக் கொள்வதுடன் எது சரியானது என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

எனவே ஒரு திட்டத்தை மாற்றி புதிய திட்டம் ஒன்றைப் பெறும்போது உங்களுக்கு எது சிறந்த திட்டம் என்பதை நன்றாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

■ ■ ■



# உங்கள் குழந்தைச்செல்வங்களின் பிறந்தநாளில் அவர்களின் புகைப்படம் பத்திரிகையில் வெளிவர...



யோகதாசன் – இசைவாணி
தம்பதியினரின் புதல்வன்
செல்வன் சுவேதன் யோகதாசன்
November 19

digi Media Creations

*10 வயதுக்குட்பட்ட உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் வரும் மாதத்தில் அவர்களின் புகைப்படம் பத்திரிகையில் பிரசுரமாவதற்கு உங்கள் குழந்தையின் புகைப்படம், முழுப் பெயர், பிறந்த திகதி, விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றுடன் கீழேயுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பி வையுங்கள். சீட்டுமுழுப்பின் மூலம் தேர்வு செய்யப்படும் 10 குழந்தைகளின் புகைப்படங்கள் அந்தந்த மாதங்களில் ரொறன்ரோ தமிழ் பத்திரிகைகளில் பிரசுரமாகும்.*



**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர்

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
• **RRSP** • **RESP**

RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada

# ஆயுட்காப்புறுதி



சிறீதரன்
துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

## ஆயுட்காப்புறுதித் திட்டத்தை ஒரு நிறுவனத்தில் இருந்து வேறு ஒரு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யும்போது கவனிக்க வேண்டியவை.

நீங்கள் ஆயுட்காப்புறுதித்திட்டம் ஒன்றை ஏற்கனவே வைத்திருந்தால் அது சரியான-தா என்பதையும், உங்கள் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டமா என்பதையும் அடிக்கடி பரிசீலனை செய்வது அவசியம். காரணம் நீங்கள் காப்புறுதித் திட்டத்தை பெறும்போது இருந்த பொருளா-தார தேவைகள் மற்றும் உங்கள் நிதி நிலைமைகள் காலத்துக்குக் காலம் மாறுபடுவதால் உங்கள் காப்புறுதித் திட்டம் அதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக கனடாவிற்கு குடியேறிய ஒரு-வர் தனிமனிதராக இருக்கும்போது பெற்றுக் கொண்ட காப்புறுதித் திட்டம் அவரது அன்-றைய தேவைகளையும் வசதிகளையும் அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திட்ட-மாக இருக்கும். சாதாரணமாக எம்மில் பலர் $100,000 டொலர் பெறுமதியான காப்புறுதித் திட்டம் வைத்திருப்பது வழக்கம். ஆனால் அதேநபர் இப்போது திருமணமாகி குழந்தைகள், சொந்தமான வீடு வசதிகளுடன் இருக்கும்போது அவர் அப்போது பெற்ற காப்புறுதித்திட்டம் அவரது இன்றைய தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்க முடியாது. எனவே அவர் அந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து அந்த காப்புறுதி முகவருடன் தொடர்பு கொண்டு காப்புறுதித் தொகையை அதிகரிக்க வேண்டும்.



காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பரிசீலனை செய்து சரியான திட்டம் என்பதை அறிந்து கொள்வதற்கு நீங்கள் காப்புறுதி முகவர் ஒருவரிடம் தொடர்பு கொள்ளலாம். காரணம் காப்புறுதித் திட்டத்தில் எழுதப்பட்டிருக்கும் சில விடையங்கள் எல்லோரும் விளங்கக் கூடிய அளவிற்கு தெளிவாக இருப்பதில்லை.

## காப்புறுதித் திட்டங்களில் தெளிவாக இல்லாத சில விடயங்கள்.

எல்லாக் காப்புறுதித் திட்டங்களும் முதலாவது பக்கத்தில் உங்கள் பெயர், வயது அல்லது பிறந்ததிகதி, உங்கள் காப்புறுதியின் பலன் பெறுபவரின பெயர், காப்புறுதியின் தொகை, மாதாந்தக் கட்டுப்பணம், அத்துடன் உங்கள் காப்புறுதி பெறப்பட்ட திகதி போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

| | |
|---|---|
| Date of Issue | - காப்புறுதி வழங்கப்பட்ட திகதி |
| Policy Number | - காப்புறுதி இலக்கம் |
| Insured Name | - காப்புறுதி பெற்றவரின் பெயர் |
| Applicant's Name (Owner) | - காப்புறுதிக்கு பொறுப்பானவரின் பெயர். |
| Face Amount | - காப்புறுதிக்கான தொகை |
| Term Life | - குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் காப்புறுதி |
| Whole life | - ஆயுள் முழுவதுக்குமான காப்புறுதி |
| Universal life | - முதலீட்டுத் திட்டத்துடன் கூடிய காப்புறுதி–ஆயுள் முழுவதுக்கும் நீடிக்கும் |
| Beneficiary | - காப்புறுதியின் பயன் பெறுபவரின் பெயர் |
| Cost Type or Monthly Premium | - மாதாந்தக் கட்டுப்பணம். |

இவ்வளவு விடயங்களும் அதிகமாக எல்லாக் காப்புறுதித் திட்டத்திலும் முதல் பக்கத்தில் இருக்கும். இதில் உள்ள விபரங்கள் யாவும் சரியாக உள்ளதா என்பதை நீங்கள் உங்கள் காப்புறுதி முகவருடன் சேர்ந்து பரிசீலனை செய்ய வேண்டும். இவற்றில் ஏதும் தவறு இருப்பின் காப்புறுதி முகவரிடம் காப்புறுதிப் பத்திரத்தை திருப்பிக் கொடுத்து திருத்தங்கள் செய்ய முடியும். காப்புறுதிக்கு சொந்தக்காரர் (Policy Owner) மட்டுமே காப்புறுதியில் மாற்றங்கள் செய்யலாம். என-வே காப்புறுதியின் உரிமையாளர் இறந்துவிட்டால் அதன்பின்பு காப்புறுதித் திட்டத்தில் ஒரு மாற்றமும் செய்ய முடியாது.

67ம் பக்கம் பார்க்க...

வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்...

சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட் காப்புறுதி
(Universal Life Insurance)
• இத்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்கும்
• மாதாந்தக் கட்டணம் எப்போதும் அதிகரிக்காது
• 10, 15 அல்லது 20 வருடங்கள் மட்டுமே பணம் செலுத்த வேண்டும்
• அதன் பின்பு கட்டிய பணத்தை மீளப் பெற முடியும்

வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
உங்கள் வயதான பெற்றோருக்கு வைத்திய பரிசோதனை இன்றி காப்புறுதி செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிகப் பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.

குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம் (RESP)

கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.

காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும்
தகுந்த விளக்கத்துடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.





சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர் (Licensed Insurance Broker)
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
digi Media Creations

•கொடிய நோய்களுக்கான காப்புறுதி • ஈட்டுக்கடன் காப்புறுதி • வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி • RRSP • RESP

# 2008ல் வீட்டு விலை வீழ்ச்சியடையுமா?

செல்வா
செல்வத்துரை
- வீடு விற்பனை முகவர்



2008ல் வீட்டின் விலை வீழ்ச்சியடையுமா? அல்லது மீண்டும் விலை கூடுமா என்பது இன்று நம்மவர்கள் பலருக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகமும் கேள்வியுமாகும்.

CMHC (Canadian Mortgage and Housing Corpororation )இன் தகவலின்படி 2008ல் வீட்டு விற்பனை (விலை அல்ல) 3.9 வீதத்தினால் குறையலாம் எனவும் இது இரண்டாவது அதிகூடிய விற்பனையாக சரித்திரத்தில் கருதப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதாவது 2007ம் ஆண்டு சரித்திரத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. 2007ம் ஆண்டில் 521,000 வீடுகள் கைமாறப்படும் எனவும் இது 2008இல் 500,000 ஆகக் குறையலாம் எனவும் கருதப்படுகிறது. 2007ம் ஆண்டில் கனடாவில் வீடடின் விலை 10 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த விலை உயர்வு 2008இல் 4.2 வீதமாகவே காணப்படும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த விலையுயர்வுத் தளர்ச்சிக்குக் காரணம் வீட்டின் விலை தேவைக்கு அதிகமாக இந்த ஆண்டு அதிகரித்துள்ளமையே ஆகும். இந்த ஆண்டின் பணவீக்கத்துடன் ஒப்பிடும் போது இது அதிகூடியதாகவே கருதப்படுகிறது. இதனால் அடுத்த ஆண்டு விலை உயர்வு குறைவாகக் காணப்படும் எனக் கருதப்படுகிறது.

கனடாவின் வேலையற்றோர் (unemployment rate) வீதம் 50 வருடங்களில் அதி குறைவாக காணப்படுவது இந்த ஆண்டின் விலையுயர்வுக்கு ஒரு காரணமாகும். இந்நிலை வருகின்ற வருடமும் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008இல் புதிய வீடுகள் கட்டுவது குறைவாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நிகழும் ஆண்டில் 227,530 ஆகவும் வருகிற ஆண்டில் 224,000 ஆகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்ராறியோவின் பொருளாதார நிலை இந்த ஆண்டை விட சற்று நல்லதாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுவதால் இங்கு வீட்டுத் தேவை அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் புதிய வீடுகள் கட்டுவது குறைவாகவே காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்ராறியோ வீட்டு விலை 2007இல் 6.2 வீதம் ஆகவும் 2008இல் 3.3 வீதம் ஆகவும் அதிகரிக்கலாம் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆக இந்த அறிக்கையில் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் (Forecast) இன்று கனடாவின் பொருளாதார நிலமைகளையும் வைத்து பார்க்கும்போது வீட்டு சந்தையில் எந்தவிதமான பாதகமான விளைவுகளும் வர வாய்ப்பில்லை. அனேகமானோரின் கவலை இன்று கனேடிய டொலர் சம்பந்தமானதாகத் தான் இருக்கிறது. அதையிட்டு பெரிதும் வருத்தப்படத் தேவையில்லை. இதனால் கூடிய விரைவில் இங்கு விற்கப்படும் பொருட்களின் விலை குறைவாக காணப்பட வாய்ப்பு உள்ளது. இதனால் பணவீக்கம் குறைந்து காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பணவீக்கம் குறைவாக காணப்படும் பட்சத்தில் Bank of Canada (கனடிய வங்கி) எமது வட்டி வீதத்தை அடுத்த ஆண்டு குறைக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. வட்டி வீதம் ஓரளவு குறையுமானால் வீட்டுச் சந்தை சற்று சுறுசுறுப்பாகவே காணப்படும் என்று கருதலாம்.

**National Housing Outlook**

**Key Housing Market Indicators**

| 2006 Actual | 2007 Forecasts | 2008 Forecasts | |
|---|---|---|---|
| Total housing starts(units) | 227,395 | 220,0001 | 207,2001 |
| Total single-detached houses | 121,313 | 113,6001 | 104,1001 |
| Total multiple housing units | 106,082 | 106,4001 | 103,1001 |
| Total MLS* sales 2 | 483,223 | 514,4001 | 494,8001 |
| Average MLS* selling price($)2 | 277,020 | 304,5001 | 320,3001 |

**Provincial Housing Outlook**

**Total Housing Starts**

| | 2006 Actual | 2007 Forecasts | 2008 Forecasts |
|---|---|---|---|
| Newfoundland and Labrador | 2,234 | 2,100 | 2,025 |
| Prince Edward island | 738 | 625 | 590 |
| Nova Scotia | 4,896 | 4,475 | 4,300 |
| New Brunswick | 4,085 | 3,750 | 3,625 |
| Quebec | 47,877 | 48,100 | 45,000 |
| Ontario | 73,417 | 66,950 | 64,500 |
| Manitoba | 5,028 | 5,500 | 5,250 |
| Saskatchewan | 3,715 | 5,700 | 4,900 |
| Alberta | 48,962 | 47,300 | 44,500 |
| British Columbia | 36,443 | 35,525 | 32,500 |



typros
typros printing

உங்கள் நினைவுகளை நாங்கள் அச்சில் கொண்டுவருகிறோம்

- வியாபார அட்டைகள்
- தன்னறிமுக அட்டைகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- பூப்புனித நீராட்டு விழா
- அழைப்பிதழ்கள்
- அரங்கேற்ற மலர்கள்
- விழா மலர்கள்

இது போன்ற உங்கள் அனைத்து அச்சுத் தேவைகளையும் உங்கள் விருப்பப்படி நீங்கள் அச்சில் ஏற்றிட இன்றே நாடுங்கள் Typros அச்சகம்

**Call Us Today!**

t. 416.913.6513
f. 416.913.4823

3957 Chesswood Drive,
Downsview, ON, M3J 2R8



# வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்

சுகு சின்னையா
(வீடு விற்பனை முகவர்)

Century 21
SERVICES PLUS
Courtier immobilier agréé

5855, boulevard Taschereau (bureau 207)
Brossard, Québec
J4Z 1A5
sugumaran@sympatico.ca

SUGUMARAN SINNIAH
Agent immobilier affilié
Bureau : (450) 926-1881 Bureau : (514) 299-3186

Looking out for your best interest™

Looking for a **Mortgage?**
call 416.548.8000 now...

**Myuran Ramachandran**
Mortgage Consultant

CENTUM
One Financial Group Inc.





Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3

24 hrs Service

SAM
Mobile Mechanic

# K.S.TRUCK & CAR TRAILER REPAIR

All Automotive Repairs

Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring

# APEX CREATION
PRINTING & SIGN

5B-2950 Birchmount Rd,
Scarborough, ON M1W 3G5
Tel: 416.297.0707
www.apexcreation.ca

**Real Estate Package**

2 For Sale Sign - 36"x24"
with stand
4 Open House Sign - 24"x24"
with stand
1000 Full Colour Business Cards with UV Coating

$699[99]

**D.M.K Renovations**

- Basement Renovations
- Hardwood Floor
- Laminate Floor
- Tiles
- Plumbing
- Heating & Airconditions



Deesan 647 502 5867

உங்கள் கனவு இல்லத்தை அடைவதற்கான வழிகாட்டி...

**Chandrakumar Vythilingam** Tech.Eng
Sales Representative
Dir:416.953.1570



1008 Midland Ave.
Scarborough, ON
M1K 4G6, Canada
www.veedu.com
Tel: 416.759.6000
Fax: 416.759.6005
cvythilingam@trebnet.com

VEEDU REALTY INC.

MY MASTER'S CONSULTANCY INC.

ஓட்டுனர் பயிற்சியளிப்பில் 20 வருட அனுபவம்

M.T.O Approved beginner driver education course provider

**Please contact Mala**
**Office :416 757 7444**
**Cell: 905 409 9099**

- Manual transmission driver training
- G1 exit course
- G2 exit cours
- Winter driving course
- Advanced defensive driver training
- Special offers for high school students

# www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

**இணையம்** .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே ***inayam.net*** இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே ***inayam.net***

முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam
416-400-6406

digi

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்

Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770


என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்

416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborugh, ON

BUY AND SELL HOMES AND BUSINESS

MARKHAM
3Bdrm /4Wsrm bsmnt apartment.
Ttc school,mall clsby
NEW Automechanic
shop fr lease
Aprox 1700 sqft w/zoning

Equiped w/hoist
Markham/passmore
ready in january

Brand new greenpark built 4bm/4wsrm
40k upgrade occupancy in march granite
conter,h.wood flr,oak stairs
In markham
Power of sale
homes
available
3 brn det. Hme 240K's
2brn condo frm 119 000
And more...buy & sell quick money
TOP PRODUCERS
PAT PUSHPAKANTHAN
Century 21
Brokerage*
Professional Choice REALTY INC.
200 Consumers Rd
TORONTO, ONT.
416-490-7653

TOP PRODUCER 5 YEARS
EXPERIENCE!
TOTAL COMMISSION SOLUTION 2.5%**
*Based on your yearly sales
**BY INDIVIDUAL PERFORMANCE
*EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா?**

**அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## இம் மாத புகைப்படக் கலைஞர்



**ஈழனா சுரேந்திரன்**

ஒட்டாவாவில் வசிக்கும் 6வயதுடைய ஈழனா புகைப்படத்துறையில் ஆர்வம் காண்பித்து வருகிறார். லேக் வியூ பொதுப் பள்ளியில் 1ம் ஆண்டு கல்வி பயில்கிறார். முதற்பக்கத்திலிருப்பதும் இவர் எடுத்த படங்களில் ஒன்று






• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi